# தமிழரசு



தமிழ்நாடு அரசு

செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

அக்டோபர் - 2010 ★ விலை ரூ.10/-





உத்தமர் காந்தியடிகளின் 142– ஆவது பிறந்தநாளையொட்டி, சென்னை காமராசர் சாலை, மெரினா கடற்கரையில் உள்ள காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு, மேதகு தமிழக ஆளுநர் திரு. **சுர்ஜித்சிங் பர்னாலா** அவர்களும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்களும் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்வில் மாண்புமிகு மத்திய, மாநில அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சென்னை மாநகர மேயர் மற்றும் அரசு உயரதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். (2.10.2010)

# தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2041
புரட்டாசி - ஐப்பசி
அக்டோபர் - 2010
மலர் : 42 இதழ் : 4

**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

**திரு. கா. பாஸ்கரன்,** இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்

**எஸ்.பி. எழிலழகன்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்

**க. குமாரவேலு**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**ச. ஜெயலலிதா**
**பா. பாலசுப்பிரமணியன்**
**பொ.க. பாண்டியன்**

உதவி ஆசிரியர்கள்

**த. கலைச்செல்வன்**
**வ.பாலசுப்பிரமணியன்**
**கோ. சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ. ஜெயசிம்ஹன்**

கணினி வடிவமைப்பு

**அ. மதன்,** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர். பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
110,அண்ணாசாலை.
சென்னை-600 002.
தொலைபேசி : 28520407/
28520408
நிகரி : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in



**வானின் றுலகம் வழங்கி வருதலால்**
**தானமிழ்தம் என்றுணரற் பாற்று.**

உலகத்தை வாழ வைப்பது மழையாக
அமைந்திருப்பதால் அதுவே அமிழ்தம்
எனப்படுகிறது.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

## இந்த இதழில்...

✶ தஞ்சாவூரில் நடைபெற்ற தஞ்சைப் பெரியகோயில் 1000ஆவது ஆண்டு நிறைவு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை ... 2

✶ தஞ்சைப் பெரிய கோயில் 1000ஆவது ஆண்டு நிறைவு விழாவில் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் ஆற்றிய உரை .... 10

✶ தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஆய்வரங்கத்தை தொடங்கி வைத்து மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை .... 14

✶ அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனையின் 125ஆம் ஆண்டு விழா .... 18

✶ கிருஷ்ணகிரி மாவட்டம் – மின் ஆளுமைத் திட்டம் தொடக்க விழா .... 24

✶ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட துறைகள் வாரியான ஆய்வு .... 26

✶ ஒரகடத்தில் ரீட்டோ நிட்டோகு ஆட்டோமொபைல் தொழிற்சாலை திறப்பு விழா .... 43

✶ உலக வெப்பமயமாதல் குறித்து விழிப்புணர்வு இயக்கம் – மாண்புமிகு துணை முதலமைச்சர் உரை .... 45


## அட்டைப்பட விளக்கம்


**முதலாம் அட்டை**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள், திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள்–பூசாரிகளுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார் (18.10.2010)

# மக்களாட்சியைத் திறம்பட நடத்தி மக்களுக்காகவே வாழ்ந்து மாமன்னனாகத் திகழ்ந்தவன் இராஜராஜன்!

26.9.2010 அன்று தஞ்சாவூரில் நடைபெற்ற
தஞ்சைப் பெரியகோயில் 1000ஆவது ஆண்டு நிறைவு விழாவில்
மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை



மகத்தான இந்த விழாவிலே கலந்து கொண்டு, உங்களையெல்லாம் காண்பதிலே மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். தஞ்சைப் பெரிய கோவில் ஆயிரம் ஆண்டு நிறைவு விழா 22.9.2010 அன்று தொடங்கி, இன்றைக்கு நிறைவு விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கலை நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், நாட்டிய நிகழ்ச்சிகள், திருமறை ஓதுதல், பறையாட்டம் எனப் பல்வேறு நிகழ்ச்சிகள் ஒவ்வொரு நாளும் நடைபெற்றிருக்கின்றன.


தஞ்சை நகரத்தின் பல்வேறு பகுதிகளில் கனிமொழி,எம்.பி. மேற்பார்வையில், சென்னை சங்கமத்தின் சார்பில் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன.

சோழர் கால இலக்கியங்கள், சிற்பங்கள், ஓவியங்கள், செப்புகள், செப்புத்திருமேனிகள், இசைக்கருவிகள், போர்க் கருவிகள், சோழர்கால கல்வெட்டுக்கள் ஆகியவற்றை விளக்கிடும் கண்காட்சி திறந்து வைக்கப்பட்டு, இதுவரை இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் கண்டுகளித்து நம்முடைய தம்பி தங்கம் தென்னரசுவின் மூலமாக விளக்கம் பெற்றுள்ளார்கள்.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் சார்பில், ‘இந்தியப் பெருமைக்கு தஞ்சையின் பங்களிப்பு’ என்ற தலைப்பில் ஆய்வரங்கம் ஒன்று நடைபெற்றிருக்கிறது. பெரிய கோவில் பற்றிய கருத்தரங்கம் ஒன்றும் நடைபெற்றிருக்கின்றது. உலகமே பார்த்து, வியப்புறும் வகையில் ஆயிரம் நடனமணிகள் பங்கேற்ற நாட்டியாஞ்சலி ஒன்று முனைவர் பத்மா சுப்பிரமணியம் அவர்களுடைய முயற்சியால் நடைபெற்றிருக்கின்றது.

புகழேந்தி – கலைவாணன் குழுவினர், “ராஜராஜ சோழன்” வரலாற்று நாடகத்தை நேற்றைக்கு இரவு நடத்தியிருக்கின்றார்கள். அந்த நாடகம் தொடங்கும் போது சொன்னார்கள், 1972ஆம் ஆண்டு இதே மேடையில் உங்கள் தலைமையில், அதாவது என் தலைமையில் டி.கே.சண்முகம், டி.கே.பகவதி இருவரும் இணைந்து நடித்த இந்த ராஜராஜ சோழன் நாடகத்தை இப்பொழுது மீண்டும் காணுகின்ற வாய்ப்பை தஞ்சை மக்களும் பெற்றிருக்கின்றார்கள் – அதற்கு தலைமையேற்கின்ற அந்த நிகழ்ச்சியில் நீங்களும் இன்றைக்கு பெற்றிருக்கின்றீர்கள் என்று சொன்னார்கள்.

ஆக, இரண்டாவது தலைமுறைக்கும் நான் இன்றைய தினம் வாழ்த்துக் கூறுகின்ற வகையில் என்னுடைய வயது ஏறியிருக்கிறது – வயது ஏறிக்கொண்டே போகிறது. ஆனால், இப்படி வயது ஏறுகிறதே என்று கவலைப்பட்ட போதெல்லாம், வயது ஏறும் போதெல்லாம், ராஜராஜ சோழன் 1000 ஆண்டு விழாவைப்போல ஒரு விழா வருகிறது – அதைக் கண்டுகளிக்கக் கூடிய வாய்ப்பும் ஏற்படுகிறது என்ற மகிழ்ச்சி எனக்கு இல்லாமல் இல்லை. அந்த மகிழ்ச்சியோடுதான் தஞ்சை தரணியிலே திரண்டிருக்கின்ற உங்களையெல்லாம் நான் கண்டு களிக்கின்றேன்.



இந்த அருமையான விழாவை திட்டமிட்டு தமிழக அரசு அதிகாரிகளுடைய துணையோடும், ஆர்வலர்களுடைய அரவணைப்போடும், புலவர் பெருமக்கள், கவிஞர் பெருமக்கள், இத்தனை பேருடைய வாழ்த்துக்களோடும் இங்கே நடத்தி பெரும் புகழை தஞ்சை மன்னன், மாமன்னன் ராஜராஜனுக்கு சேர்த்திருக்கிறது என்றால், நீங்கள் மன்னிக்க வேண்டும் – நாம் இந்தப் புகழை ராஜராஜனுக்கு சேர்க்கவில்லை; ராஜராஜன்தான் இந்தப் புகழை நமக்கெல்லாம் பிச்சையாக வழங்கியிருக்கிறான் என்று திருத்திக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட பெருமைக்குரிய மகத்தான மன்னன், மன்னாதி மன்னன் ராஜராஜசோழன். அந்த சோழன் வரலாறு எத்தகையது என்பதை கடந்த நான்கைந்து நாட்களாக நடைபெறுகின்ற கருத்தரங்கம், கலையரங்கம், நாடகம் இவைகளின் மூலம் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. ''சோழர்கள்'' என்ற நூலில் நம்முடைய சரித்திரப் பேராசிரியர்களில் ஒருவரான நீலகண்ட சாஸ்திரி பின்வருமாறு கூறுகிறார்.

''தென்னிந்திய வரலாற்றில் மிகவும் படைப்பாற்றல் நிறைந்த காலப்பகுதி சோழர் காலமாகும். அக்காலத்தில் முதன் முதலாக, தென்னிந்தியா முழுவதும் ஒரே அரசின் ஆட்சியின் ஆளுகையின் கீழ் கொண்டு வரப்பட்டது. புதிய சூழ்நிலைகள் தோன்றிய பொது ஆட்சி முறைச் சிக்கல்களை சமாளிக்கவும், தீர்க்கவும் சோழர் காலத்தில் அக்கறையுடன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உள்ளூர் ஆட்சி முறை, கலை, சமயம், இலக்கியம் ஆகிய பல்வேறு துறைகளில் பிற்காலங்களில் மீண்டும் அடைய இயலாத ஒரு பொற்காலத்தை, ஒரு உயர்வை தமிழ்நாடு இக்காலத்தில் பெற்றது.

வெளிநாட்டு வாணிகம், கடல் வாணிபம் செய்முறைகள் ஆகியவற்றைப் போல முன்னிருந்த துறைகள் அனைத்திலும் ஏற்கெனவே பல்லவர் காலத்தில் கொண்டு வரப்பட்ட செயல்களும், சீரமைப்புகளும் சோழர் காலத்தில் முழுமை பெற்றன'' என்று நீலகண்ட சாஸ்திரி அவர்கள் அவருடைய நூலிலே குறிப்பிடுகின்றார்.

இலக்கண ஆசிரியர் பெரும்புகழ் பெற்ற காத்யாயனர் குறிப்பிடுகிறார், ''சோழர்களைப் பற்றி கூறும் சான்றுகளில், அசோகரது கல்வெட்டுகளின் காலத்தை மட்டுமே அறுதியிட்டுக் கூற முடியும். சோழர்கள், அசோகரது ஆட்சிக்கே உட்படாமல் அவர்களோடு நட்புக் கொண்டிருந்தார்கள் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இக்கல்வெட்டுகள் அனைத்தும் பாண்டியர்களையும், சோழர்களையும் பற்றிக் கூறும்போது பன்மையிலேயே பேசுவதால், அசோகருடைய காலத்தில் பல சேர – சோழ – பாண்டிய மன்னர்கள் வாழ்ந்தார்கள் என்பது புலனாகிறது'' என்று கூறுகின்றார்.

சோழர்களுடைய பாரம்பரியம் கி.மு. – கி.பி. என்று பகுத்துப் பார்க்கும் பொழுது, கி.மு. அதற்குப் பின்பு கரிகாலன் தோன்ற, பல பிரசித்திப் பெற்ற புகழ் வாய்ந்த சோழ மன்னர்கள் ஆண்டார்கள் என்றாலும் கூட; 176 ஆண்டு ஒருசேர சோழப் பேரரசு தென்னகத்திலே இருந்தது – நிலைத்து வாழ்ந்தது என்பதற்கு ஏறத்தாழ கி.பி.850ல் விஜயாலய சோழன், பகைமன்னன் ஒருவனை வென்று தஞ்சையைக் கைப்பற்றி சோழ நாட்டைத் தலைநகராமாக ஆக்கினான். அப்போது, நிசும்பசூதனி என்ற ஒரு தேவியின் கோவிலையும் உண்டாக்கினான்.

விஜயாலய சோழனில் தொடங்கி, ஆதித்தன், பராந்தகன், கண்டராதித்தன், அரிஞ்சயன், சுந்தரசோழன், ஆதித்த கரிகாலன், மதுராந்தக உத்தமசோழன், ராஜராஜன், ராஜேந்திரன் ஆகிய பெருமன்னர்களுடைய


காலம் வரை 176 ஆண்டுகள் தஞ்சை சோழப்பேரரசின் தலைநகரமாக விளங்கிற்று. அப்பொழுது, இந்தப் பேரரசு, வடக்கே துங்கபத்திரை ஆறு, வடகிழக்கே ஒரிசா மாநிலத்திலேயுள்ள கலிங்கம், கிழக்கே வங்கக்கடல், தெற்கே ஈழம், மேற்கே அரபிக்கடலில் உள்ள பன்னீராயிரம் எனும் லட்சத்தீவு, மாலத்தீவு வரை பரவியிருந்தது சோழ சாம்ராஜ்யம் என்பதை வரலாறு விளக்குகிறது.

அப்படிப்பட்ட சாம்ராஜ்யத்தில் ராஜராஜசோழன் போன்றவர்கள் நடத்திய நிர்வாகத் திறமையையும் வரலாறு நமக்கு எடுத்துக்காட்டுகிறது. குறிப்பாக இராஜராஜனுடைய நிர்வாகம் அனைத்து மன்னர்களுக்கும் ஒரு உதாரணமாக விளங்கியது என்று சரித்திரத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது. எல்லா எல்லைகளிலும் காவல் படைகள் சிங்கம் போல் சாம்ராஜ்ஜியத்தைச் சுற்றி வருவதற்கு மகன் ராஜேந்திரன். புதிதாக வென்ற நாடுகளில் பழைய நம்பிக்கையான அதிகாரிகள். அரசியல் அறிவும், கூர்மதியும் கொண்ட அலுவலாளர்கள், எல்லோரையும் தன்னிடத்திலே நிறுத்திக் கொள்ளும் சாதுரியம் பெற்றிருந்தார் ராஜேந்திரன். இங்கே உரையாற்றிய பேராசிரியர் அவர்கள் இராஜராஜன் வசூலித்த வரிகளைப் பற்றி சொல்லப்படுகின்ற கருத்தை விளக்கினார்கள். நில வரி, கண்ணால காணம், குசக்காணம், நீர்கூலி, தறியிறை தரகு, தட்டாரப்பாட்டம், இடைப்பாட்டம், ஒடக்கூலி, செக்கிறை, வண்ணாரப்பாறை, நல்லா, நல்லெருது, நாடுகாவல், உல்கு, ஈழம் பூட்சி இவைகளெல்லாம் என்னவென்று கருதுகிறீர்கள், தமிழா ? வேறு மொழியா என்று கூட ஐயம் ஏற்படும் உங்களுக்கு. இவையெல்லாம் இராஜராஜன் காலத்தில் போடப்பட்ட வரிகளுடைய பெயர்கள்தான்.

இந்த வரிகளை, நெல்லிலே ஒரு பகுதியாக, அல்லது பொன்னும் காசுமாக செலுத்த வேண்டும் என்பது விதிமுறையாக இருந்தது. இரண்டு ஆண்டுகள் வரி கட்டத் தவறினால், நிலத்தை பறிமுதல் செய்து விற்று, விற்ற பணம் அரசாங்க பொக்கிஷ அறைக்கு போய்விடும். இந்த நிலைமையும் இராஜராஜன் காலத்திலே கையாளப்பட்டது – கடைப்பிடிக்கப்பட்டது. நான் இதைப் பற்றி சொல்லும்போது, அவன் திரட்டிய நிதி, எப்படியெல்லாம் மக்களுக்காக பயன்படுத்தப்பட்டது என்பதையும் மறந்துவிடக் கூடாது. மக்களுடைய நல்வாழ்வு, நலவாழ்வு, அவர்களுடைய சுகம், அவர்களுடைய இனத்தைக் காப்பாற்ற, நாட்டைக் காப்பாற்ற வேண்டிய ஆற்ற வேண்டிய வீரப்பணிகள். இவைகளுக்காகவும் அந்த வரிப்பணம் செலவிடப்பட்டது. அப்படி செலவிடப்படுகின்ற நல்ல காரியங்களுக்காக, மக்களுடைய நல்வாழ்விற்காக இங்கே – இன்றைக்கு நாம் செலவிடப்படுகின்ற இந்தப் பணத்தை – இந்த வருமானத்தைப் பற்றி உங்களுடைய காதுகளிலே விழுகின்ற செய்திகளையும் நான் கவனிக்காமல் இல்லை. வரி வசூலித்து மக்களுடைய பணத்தைத் திரட்டி, இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்ற அரசு, ஒவ்வொருவருடைய தலையிலும் இவ்வளவு ரூபாய் கடனைச் சுமத்தி இருக்கின்றது என்றெல்லாம் கணக்கிட்டு மேடைகளிலே பேசுபவர்களை நீங்கள் அறிவீர்கள். எந்த அரசும் ஒவ்வொரு மனிதனுக்கும் இவ்வளவு ரூபாய் அபராதம் என்றோ, தலை வரி என்றோ விதிக்கின்ற அரசு, ஜனநாயக உலகத்திலே, அதிலும் குறிப்பாக இந்தியாவிலே, அதிலும் சிறப்பாக தமிழகத்திலே இல்லை. இருக்கப் போவதுமில்லை, அப்படி வந்தால், அதை இருக்க விடப்போவதில்லை. அதை மறந்து விட்டு நாம் இந்த வருமானத்தைப் பற்றி பேசுவதும், இயல்பாகவே அனுமதிக்கப்பட்ட விதிமுறைப்படி அனுமதிக்கப்பட்ட கடன் பெறுகின்ற அந்த வழக்கத்தை ஒரு அரசாங்கத்திலே தவறாக கணக்கிட்டுப் பேசுவதும் முறையும் அல்ல, சரியான வாதமும் அல்ல.

அதற்கு உதாரணமாக உங்களுக்குச் சொல்ல வேண்டுமானால், நாம் வாங்குகின்ற கடன்கள் ஆயிரம் கோடி, இரண்டாயிரம் கோடி, ஐந்தாயிரம் கோடி, பத்தாயிரம் கோடி ரூபாய் என்றெல்லாம் கூட சொல்லப்படும்போது புதியதாக வந்த அரசியல்வாதிகள், அதை மக்கள் தொகையாக வைத்து ஒவ்வொருவருக்கும் இவ்வளவு ரூபாய் ஒவ்வொருவர் தலையிலும் கடனாக இருக்கிறது என்று சொல்லக்கூடும். அப்படிச் சொன்னால், நான் அவர்களுக்கு அளிக்கின்ற விளக்கம், நாம் வாங்குகின்ற கடன்கள், நம்முடைய மாநிலத்தினுடைய மொத்த உற்பத்தி மதிப்பில் 25 சதவிகிதம் வரையில் இருக்கலாம் என்று வரையறை செய்யப்பட்டுள்ளது. நிதிப் பற்றாக்குறை (Fiscal Deficit) 2012 மார்ச்சுக்குள் மாநிலத்தினுடைய மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவிகிதத்திற்கு மிகாமல் இருக்க வேண்டுமென்றும் மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. அப்படித்தான் நம்முடைய நிர்வாகம் நடத்தப்படுகிறது என்பதை திட்டக்குழுவும் ஏற்றுக் கொண்டிருப்பதாக இங்கே பேசிய நம்முடைய மத்திய அமைச்சர் நாராயணசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். அதையும் நீங்கள் மறந்துவிடக் கூடாது.

இராஜராஜன் காலத்தில் ஒரு காலத்திலே 16ஆம் நூற்றாண்டில் மகா அக்பர், அவருடைய ஆட்சியில் நடைபெற்றதைப்போல், இராஜராஜனுடைய காலத்திலே நிலங்களை அளக்க ஒரு முறை கையாளப்பட்டது. அந்த நிலங்களை அளப்பதற்காகவே ஒரு கோல் உருவாக்கப்பட்டது. அந்தக் கோலுக்கு 'உலகளந்த கோல்' என்று பெயர். உலகளந்தவன் என்று இராஜராஜனுக்கு ஒரு பட்டப் பெயர்கூட உண்டு. நிலங்களை அளக்கப் பயன்பட்ட கோலுக்கு இத்தகைய பெயர் இடப்பட்டு 'உலகளந்த மன்னன் கோல்' என்றெல்லாம் பாராட்டப்பட்டது. அந்தக் கோலின் நீளம் 16 சாண். நிலங்கள் நீர் நிலம், கொல்லை, காடு என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டது. அந்தக் காலத்தில் – நாம் இப்போது சொல்லுகின்றோமே கிராமப் பகுதிகளில் ''குழி'' என்பது சிறிய நில அளவு. 100 குழி – ஒரு மா; 20 மா– ஒரு வேலி. நாலு மா என்பது 1/5 என்றும்; மும்மா முக்காணி என்பதை 3/16 என்றும்; மும்மா என்பதை 3/20 என்றும்; இருமா என்பதை 1/10 என்றும்; மாகாணியை





1/16 என்றும்; ஒரு மா 1/20 என்றும்; முக்காணி என்பதை 3/80 என்றும்; அரை மா என் பதை 1/40 என்றும்; முக்கால் வீசம் என்பதை 3/64 என்றும்; காணி 1/80 என்றும்; அரைக்காணி முந்திரி என்பதை 3/320 என்றும்; இந்த பின்ன அளவுகளில் அப்பொழுது குறிப்பிட்டார்கள்.

இந்தப் பின்ன அளவுகளில் என் தந்தையார் காலத்திலேகூட நினைவூட்டப்பட்டு, உச்சரிக்கப்பட்டு எனக்கு கற்பிக்கப்பட்ட கணக்காகும். ஆனால் இன்றைக்கு ஏற்பட்டுள்ள இவ்வளவு வளர்ச்சி பின்ன அளவுகள் இல்லை. ஆனால் வரலாற்றிலே, இராஜராஜன் காலத்திலே கடைப்பிடிக்கப்பட்ட நில அளவைக்கு, வேறு சில அளவுகளுக்குரிய அளவுகளாகும். அந்த அளவுகளை வைத்து, கோவில்களுக்கு அவர் அளித்த நிலங்களுக்கு பெயர், தேவதானம்.

சமணப்பள்ளி, பௌத்த விகாரைகளுக்கு அளிக்கப்பட்ட நிலம், "பள்ளிச் சதகம்" எனப்பட்டது. இராஜராஜன், சைவன் என்று யாரும் மார் தட்டினாலும்கூட, சமணத்தையோ, பௌத்தத்தையோ வெறுத்தவர் இல்லை. வைணவத்தையும் வெறுத்தவர் இல்லை. அதனால்தான் அது கோவில்களுக்கு அளித்த நிலம் தேவதானம் என்று. சமணப்பள்ளி பௌத்தத்தையோ "பள்ளிச் சதகம்" என்றும் வரலாறு கூறுகிறது.

அந்தணர்களுக்கு விடப்பட்டது பிரம்மதேசம் ஆனது. "பிரம்மதேசம்" என்றும் "மடப்புரம்" என்றும் பெயர் பெற்றது. "சாலாபோகம்" என்றும் அதற்குப் பெயர் உண்டு. புலவர்களுக்கு வழங்கப்பட்ட நிலம் "புலவர் முற்றூட்டு" எனப் பெயர் பெற்றது. இதிலிருந்து என்னத் தெரிகிறது. எல்லோருக்கும் அவர்கள் பௌத்தவர்களானலும், சைவர்களானலும், வைணவர்களானாலும், புலவர் களானாலும், அந்தணர்களானாலும் அனைவருக்கும் நிலங்கள், இராஜராஜன் காலத்திலே வழங்கப்பட்டது என்பது குறிப்பிடப்படுகிறது.

இதற்கடுத்து இராஜராஜன் வரலாற்றைப் படிக்கும்போது குறிப்பிடப்படுகிறது –

4 நெல் எடை – ஒரு குன்றிமணி,

2 குன்றிமணி – ஒரு மஞ்சாடி,

2 மஞ்சாடி – ஒரு பண எடை,

10 பண எடை – ஒரு கழஞ்சு,

8 பண எடை – 1 வராகனெடை,

4 கழஞ்சு – ஒரு கஃசு,

4 கஃசு – ஒரு பலம்,

நீட்டல் அளவை –

8 நெல் – ஒரு விரல்,

12 விரல் – ஒரு சாண்,

2 சாண் – ஒரு முழம்,

4 முழம் – ஒரு பாகம்,

100 குழி – ஒரு மா,

20 மா – ஒரு 1 வேலி

இது இராஜராஜன் காலத்து நீட்டல் அளவு.

இதுமாத்திரமல்ல அவருடைய நிர்வாகத்தின் பெருமையாக ஊராட்சிகள் அமைந்திருந்தன. ஊர்கள் தோறும் இருந்த அவைகளை நடத்தியவர் ஊர் அவையினர் என்று அழைக்கப்பட்டனர். நிலங்களுக்கு அரசிறை ஏற்படுத்துவது, தொழிலுக்கு வரி விதிப்பது, விரிகளை வசூலிப்பது, அவற்றை உடனுக்குடன் கருவூலத்தில் சேர்ப்பது, இரண்டாண்டுகள் வரி செலுத்தாதவருடைய நிலங்களை பறிமுதல் செய்து விற்பது, விற்றத் தொகையை அரசாங்கத்தின் பொக்கிஷத்திலே சேர்ப்பது, தோட்டம், ஏரி இவைகளை கண்காணிப்பது, உள்ளூர் கோவில் ஆட்சியை மேற்பார்ப்பது, ஊர் மக்களின் நன்மையைக் காப்பது, வழக்குகளை ஆராய்ந்து நீதி வழங்குவது இவைகள்தான் அந்த ஊராட்சிகளின் கடமைகளாக அன்றைக்கு இராஜராஜன் காலத்திலே விளங்கியது.

அந்த ஊராட்சித் தலைவர்களுடைய தேர்வு எப்படி என்பதையும் வரலாறு சுட்டிக் காட்டுகிறது. அவை உறுப்பினர் எப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிறார்? அவருக்கு என்னென்ன தகுதி இருக்க வேண்டும்? ஊர் அவை

உறுப்பினராக இருப்பவருக்கு கால்வேலி நிலமும், சொந்த வீடுமாவது இருக்க வேண்டும். படித்தவராகவும், எதையும் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லி புரிய வைக்கும் ஆற்றலுடையவராகவும் இருக்க வேண்டும். எண்ணத்திலும், செயலிலும் தூய்மையானவராக, நேர்மையானவராக இருக்க வேண்டும். 30 வயதுக்கு மேல் 75 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். நல்ல வழியில் சம்பாதித்து, இதுவரை யாரையுமே ஏமாற்றியதாக புகார் வராதவராக, ஒழுக்கமான வாழ்க்கை வாழ்ந்து வருபவராக இருக்க வேண்டும்.

3 ஆண்டுகளுக்கு உட்பட்டு எந்த நிறுவனத்திலும் உறுப்பினராக இருக்கக் கூடாது. இதற்கு முன்பு உறுப்பினராக இருந்து, கணக்கு காட்டாதவரோ, எப்போதும் எந்த ஊரிலும் உறுப்பினராக ஆக முடியாது. மது அருந்துபவர், வழக்குகளில் குற்றவாளியாக நின்றவர், பெண்களை கெடுத்து கை விட்டவர், பொய்சாட்சி சொன்னவர், பிறர் குலம் கெட இருந்தவர், வழக்கு என்று வராவிட்டாலும்கூட ஊரில் அவப்பெயர் எடுத்தவர், ஊராட்சித் தேர்தலுக்கு பெயரே கொடுக்கக்கூடாது.

குற்றப் பதிவுப் புத்தகத்தில் கள்ளக் கையெழுத்து போட்டவர், லஞ்சம் வாங்கியவர், நம்பியவர்களை மோசம் செய்தவர், எந்தக் குற்றத்திற்காகவாவது அபராதம் செலுத்தியவர், கையெழுத்து போட்டு விட்டு என் கையெழுத்தே இல்லை என்பவர்கள் வாழுகின்ற நாட்டில், ராஜராஜன் காலத்திலே இருந்த விதிமுறைகள் ஆச்சர்யமாகத்தான் இருக்க முடியும்.

இந்தத் தேர்தலுக்கு ஒரு நாள் குறிப்பிடப்படும். ஆண்டுதோறும் தேர்தல் நடக்கும் சபை கூடுவதற்கு என்று ஒதுக்கப்பட்ட இடத்தில் அரசாங்க அதிகாரி, முன்பே பறையடித்து தெரிவிப்பார். ஊரைக் கூட்டுவார். கூட்டத்தைத் தாண்டி கூடத்தின் நடுவில், ஒரு குடம் வைக்கப்படும். அந்தக் குடத்தில் நல்லவரான ஒரு பெரியவர் எழுந்து, குடத்தைக் கவிழ்த்து, தட்டி 'ஒன்றுமில்லை' குடத்துக்குள்ளே என்பதை அங்கே கூடியிருப்பவர்களுக்கு முதலில் தெரிவிப்பார். மக்கள் ஒவ்வொருவராக எழுந்து, ஒரு குடும்பத்திற்கு ஒருவர் – அதிகாரி தரும் ஒலையையும், எழுத்தாணியையும் பெற்று, தங்களுக்குப் பிடித்த ஒருவரின் பெயரை எழுதி மறைவிடத்திலே இருந்து கொண்டு வந்து, அதிகாரி முன் குடத்தில் போட வேண்டும்.

ஒரு குடும்பத்தில் ஒருவர் ஒலை ஓட்டுக்களைப் போட்ட பின், அதைக் கட்டி, அதன் மேலே அந்தக் குடும்பத்தின் பெயரை எழுதி குடத்தில் போடப்படும். எல்லாக் குடும்பமும் ஓட்டு போட்டபின், ஒரு ஒலைக் கட்டைப் பிரித்து, வேறொரு காலிக் குடத்திலே போட்டுக் குலுக்கி ஒரு குழந்தையை, ஒரு ஒலையை எடுக்கச் செய்வார், ஒரு பெரியவர். குழந்தை எடுத்துத் தரும் ஒலையை அவர் கரணத்தாரிடம் கொடுப்பார். கரணத்தார் என்று ஒரு அலுவலர் இருப்பார். கரணத்தார் வழங்கியதும் உள்ளங்கையை அகல விரித்து அதை வாங்க வேண்டும்.

ஏனென்றால், வாங்கும் போதே (விரலிடுக்கில் ஒலையை மடித்து வைத்துக் கொண்டிருந்தான் என்ற புகார் வரக் கூடாதல்லவா ?) ஒலையை மடித்து எண்ணிக்கை அதிகமாகவோ அல்லது குறைத்தோ ஆக்கிவிடக் கூடாது என்பதற்காக, கையை நன்றாக விரித்துக் காட்டி, ஐந்து விரல்களையும் விரித்துக் காட்டி, வாங்குவதிலே எந்தத் தவறும் இல்லை. எந்தத் தவறும் செய்ய முடியாது என்பதை எடுத்துக் காட்டி, ஒலையிலே உள்ள பெயரைப் படிப்பார். அங்குள்ள நம்பிமார்களெல்லாம் ஒலையில் உள்ள பெயரைப் படித்தவுடன், அதிகாரி புதிய ஒலையில் பெயரை குறித்துக் கொள்வார். இப்படியே மற்ற உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இதை சங்க இலக்கியத்திலே புலவர்கள் குறித்தளித்த வண்ணம் நான் எடுத்துக் காட்டுகின்றேன். எப்படி இந்த ஒலைகள் எண்ணப்பட்டது, எங்கே இந்த ஒலைகள் போடப்பட்டன, எவ்வாறு எடுக்கப்பட்டன என்பதை சங்கப் புலவர்கள் கவிதை நடையிலே எழுதி வைத்திருக்கின்றார்கள். நான் எழுதிய சங்கத் தமிழ் என்ற நூலில் அந்த வரிகளை

ஈராயிரம் ஆண்டின் முன்னே
ஊரார் எல்லாம் ஒன்று கூடி
வழிகாட்டும் குழுக்கள் ஐந்தை
வாக்களித்துத் தேர்ந்தெடுத்தார்.
முடியாட்சி கொடிகட்டிப் பறந்தபோதும்
குடியாட்சி; சிற்றூர் பேரூர்களில்
குடவோலை முறையினாலே – நன்கு
நடைபெற்று, நற்பணி ஆற்றிற்றென்று;
மக்களாட்சி மாண்புதனை – புலவர்
விரித்துரைக்கும் அழகுதனைச்
சுவைத்திடலாம்.
கொதிக்கின்ற சுடுநிலத்தில் – வீரம்
கொப்பளிக்கும் படுகளத்தில்
பகைநாட்டுப் படையிரண்டு மோதிக்
கொண்டு
தொகை தொகையாய் வீரர் பிணம் சிதறிக்
கிடக்கும்.
அவர்தம் கச்சையினை விலக்கிக் கழுகும்
பருந்தும்
அவற்றின் இச்சையெலாம் தீர
வயிறுகளைக் கொத்தி
குடலை உருவியெடுத்துத் தம் குடலுக்கு
இரையாக்கிக்
கொள்ளுகின்ற கொடுமையினைப்
பார்க்கும்போழ்து


உருவி எடுக்கின்ற வீரர் குடலுக்கு
உவமையாக
ஊராட்சிக் குழு தேர்வுதனைப் புலவர்பிரான்
ஒப்பிட்டு உரைப்பதுதான் என்னே
பொருத்தம்!
உலகிற்குத் தமிழர் நாட்டுப்
பழஞ்சேதியொன்றை – இந்த
உவமையினால் விளக்கும் நேர்த்தி
அருமையினும் அருமையன்றோ!
ஊர்மக்கள் பொது மன்றில் ஒரு சேரக் கூடி
நின்று
யார் யார் குழுவுக்கு உறுப்பினராய்
வேண்டுமென்று
கயிறு கட்டிய குடமொன்றில் – தத்தம்
கருத்துக்களை ஓலைகளில் எழுதி
வாக்களித்து,
முத்திரையிட்ட குடங்களையே, நடுவர் –
மிகப்
பத்திரமாக வைத்திடுவர்; பின்னர்
ஆவணக் களரியர் எனும் அலுவலர் வந்து
அகற்றிடுவர் முத்திரையை – அதன்பின்
ஒவ்வொர் ஓலையாய்க் குடமிருந்து இழுத்து
உறுப்பினர் தேர்வில் வென்றோர் யாரென
ஊரார் மத்தியில் எண்ணி அறிவிப்பர் –
அக்குழு
ஊர்நலம் பேணிடப் பல உரிமைகள்
கொண்டதுவாம்!
கழுகும் பருந்தும் களத்தில் மாண்ட
காளையின் உடலில் குடலை உருவுதல்;
கடமையாற்றும் ஊர்நலக் குழுவுக்குக்
குடத்தில் இட்ட வாக்குச்சீட்டாம் பனை
ஓலைகளை,
கையை நுழைத்து உருவி எடுப்பது போல்
கண்முன் தெரிவதாய்க் கவிஞர்
உரைக்கின்றார்!

இந்த ஊரார் மத்தியிலே எண்ணி அறிவிக்கின்றாரே, எந்த ஓலைகள் அந்தக் குடத்திலேயிருந்து ஒன்றாக, ஒவ்வொன்றாக எடுத்து எண்ணப்பட்ட ஓலை அதைப்பற்றி என்ன சொல்லுகிறார், புலவர். அது எப்படி இருக்கிறது என்றால், அந்தப் புலவர் போர்க்களம் ஓரமாக நடந்து செல்லும் போது, வீரர்களுடைய பிணங்கள் சாய்ந்து கிடக்கின்றன; பருந்துகளும் கழுகுகளும் அங்கே மொய்த்துக் கொண்டு அந்தப் பிணங்களைக் கொத்தித் திண்கின்றன. அதில் சில கழுகுகள், பருந்துகள் இவைகளெல்லாம் வீரர்களுடைய வயிற்றைக் அலகுகளால் கிழித்து, அவர்களுடைய குடலை உருவி தங்களுடைய குடலுக்கு இரையாக்கிக் கொள்கின்றன.

இது எப்படி இருக்கிறது என்றால், ஊராட்சி மன்றத் தேர்தல்களில் குடத்திலே இடப்பட்ட ஓலைகளை எடுத்து, எண்ணுவதற்காக ஒவ்வொன்றாக, அந்த ஓலைகளை எடுப்பதுபோல், கிடக்கின்ற பிணங்களாம் வீரர்களுடைய வயிற்றினைக் கிழித்து, அவர்களுடைய குடல்களை இந்தப் பருந்துகளும், கழுகுகளும் எடுக்கின்றன என்று புலவர் பெருமான் பாடுகிறார் என்றால், இதற்கும் இலக்கியம் தமிழன் படைத்திருக்கின்றான், கவிதை நயத்தோடு என்பதை நாம் எண்ணி வியப்படைய வேண்டாமா?

இத்தகைய கவிதை மூலம் கிடைக்கின்ற உண்மை என்னவென்றால், பருந்துகளும், கழுகுகளும் மாண்டு போன வீரர்களுடைய குடலை, பிடுங்கித் தின்கிறது என்பது மாத்திரம் அல்ல – அது எப்படியிருக்கிறது என்பதை வர்ணிக்கும்போது, இப்படித்தான் ஊராட்சி மன்றத் தேர்தல்களில் குடத்திலே இடப்பட்ட ஓலைகளை, ஒவ்வொன்றாக எடுத்து எண்ணி, யார் அதிக ஓட்டுக்கள் பெற்றிருக்கின்றார்கள் என்று ஓலைகளை எண்ணி அறிவிக்கின்ற அந்த பான்மை, அதற்கு உவமையாக கவிஞருக்குக் கிடைத்த இந்த அற்புதமான நிகழ்ச்சி, அது நம்முடைய வீரத்தையும் சுட்டிக் காட்டுகிறது. இது அகநானூறுப் பாடல்களிலே மருதன் இளநாகனார் எழுதிய பாடல் என்றாலும்கூட, புறநானூற்றுக் காட்சி விளக்குகின்ற பாடலாக அமைந்திருக்கிறது என்றால், தமிழர் நிர்வாகத் திறமை படைத்தவனாக இருந்தான் – வீரத்தின் விளைநிலமாகவும் இருந்தான். அவன் போர்க்களத்திலே மடிந்துபோன ஒரு வீரனை புறாக்களும், கழுகுகளும், பருந்துகளும் கொத்துகின்ற நேரத்திலேகூட அதை கவிதையாக்குகின்ற வல்லவனாகவும் இருந்தான். அப்படிப்பட்ட தமிழகத்தில் தேர்தல் முறை, மக்களாட்சியைத் திறம்பட நடத்தி மக்களுக்கெல்லாம் பயனுள்ள விதமாக, மாமன்னனாக வாழ்ந்தவன்தான் ராஜ ராஜன்.

மும்முடிச் சோழன் – அவன் செல்லாத பகுதிகள் இல்லை. வெல்லாத மன்னர்கள் இல்லை. அவனைக் கண்டு நில்லாமல் ஓடிய மன்னர்கள் உண்டு. அவனைக் கண்டு நடுங்கியவர்கள் உண்டு. ஆனால், அவன் அமைதியின் உருவமாக, அதே நேரத்தில் ஆற்றலின் வடிவமாக, ஆன்மீக வாதியாக, ஆத்திகவாதியாக, எல்லோருக்கும் நல்லவனாக, எல்லோரையும் சமமாகக் கருதுபவனாக அந்த மன்னன் வாழ்ந்தான், அவனுடைய மகன்தான் ராஜேந்திரன். அவனுக்கு 1012ல் ராஜராஜன் பட்டம் கட்டினான். தந்தையும் மகனுமாக அரசாண்ட பெருமை வரலாற்றுச் சிறப்புமிக்கது. பல போர்களில் தந்தைக்குத் துணையாக நின்று வெற்றிகளைக் குவித்தான், ராஜேந்திர சோழன். அந்த ராஜேந்திரனையும், அவனுடைய தந்தை ராஜராஜ சோழனையும் பெற்றுள்ள இந்த தஞ்சை மாநகரத்தில், இந்த தஞ்சை தரணியில்




அவர்களுக்கென விழா எடுப்பது நம்மை நாமே பெருமைப்படுத்திக் கொள்ளும் ஒன்றாகும்.

நான், இந்த இனிய விழாவில் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். ராஜராஜன் என்ற பெயர் இந்தக் கோயிலில் ஆயிரம் ஆண்டுகள் நிலைத்து, ஆயிரமாவது ஆண்டை நாம் கொண்டாடுகிற நேரத்தில், நாம் அடுத்த ஆயிரம் ஆண்டு விழா நடக்கும்பொழுது இருக்கப் போவதில்லை. அன்றைக்கு அந்த விழா நடத்துகின்றவர்கள் நம்மை நிச்சயமாக மறக்கப்போவதில்லை. நாம் இருக்கப் போவதுமில்லை. இன்னும் ஆயிரம் ஆண்டுகள் கழித்து 2,000 ஆயிரம் ஆண்டு விழாவை நடத்தப் போகிறவர்கள் நம்மை மறக்கப் போவதுமில்லை. எனவே, நாம் இன்னும் ராஜராஜனுடைய பெருமைகளை, நாள்தோறும் சொல்லுகின்ற அளவில் ராஜராஜனைப் பற்றி தமிழ்நாட்டு மக்கள் சிந்திக்கவும், நினைக்கவுமான அறிவிப்பை இன்று நான் வெளியிட விரும்புகின்றேன்.

இந்த விழாவையொட்டி, பல அறிவிப்புகள் செய்யப்பட்டு அவை நடைமுறைக்கு வருவதற்கான தொடக்கங்கள் நடைபெற்று வருகின்றன.

தமிழக அரசு நகராட்சி நிர்வாகத் துறை சார்பாக, தஞ்சை நகர மேம்பாட்டிற்காக ஏற்கனவே 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு; அதன் மூலம் பேருந்து நிலையம் மேம்பாடு செய்தல், சேதமடைந்துள்ள தார்ச் சாலைகளை கான்கிரீட் சாலைகளாக மாற்றுதல், சுகாதார வளாகங்கள் கட்டுதல், மருத்துவக் கல்லூரி முதல் மேம்பாலம் வரை சாலையில் ஒளி விளக்குகள் அமைத்தல், பெரிய கோயில் முன்புறம் கான்கிரீட் தளத்துடன் வாகனங்கள் நிறுத்துமிடம் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழக அரசின் நெடுஞ்சாலைத் துறை சார்பாக, தஞ்சை நகரில் 7 முக்கிய சாலைகள் 9 கோடியே 25 இலட்சம் ரூபாய்ச் செலவில் அகலப்படுத்தப்பட்டு மேம்படுத்தப்படும்;

தஞ்சைப் பெரிய கோயிலின் முன்புறம் உள்ள இர்வின் பாலம் 1 கோடி ரூபாய்ச் செலவில் அகலப்படுத்தப்படும்;

தமிழக அரசின் பொதுப் பணித் துறை மூலமாக, 2 கோடியே 35 இலட்சம் ரூபாய்ச் செலவில் தஞ்சை நகரின் மையப் பகுதியில் செல்லும் கல்லணைக் கால்வாயின் கரைப் பகுதிகள் மேம்படுத்தப்படும்;

தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஒரு புதிய விபத்து சிகிச்சைப் பிரிவும், புற்று நோய் சிகிச்சைக்கென ஒரு தனிப் பிரிவும் தொடங்கப்படும்;

தஞ்சைக்கு அருகில் அமைந்துள்ள சமுத்திரம் ஏரியை, அப்பகுதி விவசாயிகள் பயன்பெறும் வகையிலும், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையிலும் மேம்படுத்தப்படும்;

தமிழக அரசு அளிக்கின்ற தொகை மாத்திரம் அல்லாமல், மத்திய அரசும் 20 கோடி ரூபாய் வழங்குவதாக அமைச்சர் நாராயணசாமி அவர்கள் தெரிவித்தார்கள். வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். இன்னும் வந்து சேரவில்லை. வந்து சேருவதற்கான வழிமுறைகளும் அவரே வகுத்து, உடனடியாக அது எங்கள் கைக்கு கிடைக்க ஆவன செய்து, எங்கள் நன்றிக்குரியவராக அவர் ஆக வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இப்பொழுது பல்வேறு நன்றி காட்டக்கூடிய பல செயல்களை மத்திய அரசின் வாயிலாக, அவரும் நம்முடைய அமைச்சர் ஜி.கே.வாசன் அவர்களும் செய்திருக் கின்றார்கள். இங்கே தம்பி ராஜா அவர்களால் வெளியிட்டதும், தம்பி பழநிமாணிக்கம் அவர்களால் வெளியிடப்பட்டதுமான முறையே அஞ்சல்தலை, ராஜராஜன் நாணயம், இவைகளெல்லாம் வெளியிடப் படுவதற்கு மத்திய அரசின் அனுமதியைப் பெறுவதற்கான பணிகளை மேற்கொண்ட நண்பர்களுக்கும், மத்திய அமைச்சருக்கும், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



ஒன்றை நினைவூட்ட விரும்புகின்றேன். ஏற்கெனவே தமிழக அரசால், செம்மை நெல் என்று ஒரு நெல் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒரு நெல்லைக் கொண்டு வந்து என்னிடத்திலே காட்டி, வேளாண்மைத்துறை அமைச்சர் தம்பி வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள், இது செம்மையாக விளைகின்ற நெல்லாக இருக்கின்றது. இதற்கு என்ன பெயர் வைக்கலாம் என்று கேட்டார். அப்படியானால், 'செம்மை நெல்' என்றே பெயரிடலாமே என்று சொன்னேன். 'செம்மை நெல்' நல்ல உற்பத்தியோடு, உற்பத்தித் திறனையும் பெற்றுள்ளது. எனவே, செம்மை நெல்லுக்கு ராஜராஜன் ஆயிரமாண்டு விழாவின் நினைவாக 'ராஜராஜன் 1000' என்று தமிழக அரசின் சார்பில் பெயரிட்டு அறிவிப்பினை வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். 'ராஜராஜன் 1000' ஐ.ஆர்.8 என்பதைப்போல் ஐ.ஆர்.20 என்பதைப்போல் இது 'ராஜராஜன் 1000' ராஜராஜன் புகழ் பெருகவும், 'ராஜராஜன் 1000' நெல்லை நீங்கள் பயிரிடும் போதெல்லாம் நீங்கள் எண்ணி மகிழவும், வாழ்த்தவும் இந்தப் பெயர் பயன்படும் என்ற எண்ணத்தோடு, கருத்தோடு, எதிர்பார்ப்போடு பொதுவாக இந்த விழா நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தும், ஏற்பாடு செய்த தமிழக அரசுக்கு உறுதுணையாக இருந்தும் ஒத்துழைத்து, அல்லும் – பகலும் பாடுபட்டு, நான் விரும்பியவாறு பணிகளை முடித்து, பல்வேறு கலைநிகழ்ச்சிகளை யெல்லாம் நடத்தி வெற்றிகரமான விழாவாக இந்த விழாவை ஆக்கிய இறையன்பு,ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தம்பி ராஜேந்திரன் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் சண்முகம்,ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், காவல் துறையினருக்கும் பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதலில் குறிப்பிட்டதைப் போல கலை நிகழ்ச்சிகளை யெல்லாம் தொகுத்தளித்த கனிமொழி உள்ளிட்ட அனைவருக்கும் என்னுடைய நன்றி. நம்முடைய டி.கே.சண்முகம் அவர்களுடைய பிள்ளைகள் புகழேந்தி, கலைவாணன் அவர்கள் இரண்டாவது தலைமுறை நமக்கு டி.கே.சண்முகமும், டி.கே.பகவதியும் நடத்திய ராஜராஜன் நாடகங்களையெல்லாம் பார்த்திருக்கின்றோம். அதைப்போல நேற்றைய தினம் இந்த நாடகத்தை நடத்திக் காட்டியதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த விழா இனிது நடைபெற ஒத்துழைத்த தஞ்சை மாவட்டத்துப் பெருமக்கள், தமிழகத்துப் பெருமக்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்து, இந்தக் கண்காட்சியைப் பொருத்து நம்முடைய கோவை செம்மொழி மாநாட்டிலே நடத்தப்பட்ட கண்காட்சியைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று அந்த வட்டாரத்து மக்கள் விரும்பியதன் காரணமாக, மேலும் ஒரு வார காலம் கோவையிலே அந்தக் கண்காட்சி தொடர்ந்து நடைபெற்றது. அதைப் போல இந்த மாவட்டத்து மக்களுக்கு அவர்களுடைய விருப்பம்போல், இந்தக் கண்காட்சியைப் பார்க்க மேலும் ஒரு வார காலம் கண்காட்சியை நீடிப்பதற்கும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொண்டு, உங்கள் அனைவருடைய அன்பான ஆதரவுக்கு, வரவேற்புக்கு, வாழ்த்துக்கு இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்! ★

**தெரியுமா?**


**57 இலட்சத்து 75 ஆயிரம் பள்ளி மாணவ, மாணவியருக்கு வாரத்தில் 5 நாட்களிலும் சத்துணவுடன் வேகவைத்த முட்டைகள் வழங்கப்படுகிறது. 30 ஆயிரத்து 697 குழந்தைகள் மற்றும் மாணவ, மாணவியருக்கு சத்துணவுடன் முட்டைக்குப் பதிலாக வாரத்தில் 5 நாட்களிலும் வாழைப்பழம் வழங்கப்பட்டு வருகிறது.**

# தஞ்சைப் பெரியகோவில் தமிழ்நாட்டின் தனிப்பெருமையாக விளங்குகிறது!

26-9-2010 அன்று நடைபெற்ற.

தஞ்சைப் பெரியகோயில் 1000ஆவது ஆண்டு நிறைவு விழாவில்

மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் **க. அன்பழகன்** அவர்கள் ஆற்றிய உரை




கடந்த சில நாட்களாக தஞ்சை மாநகரமே விழாக்கோலம் பூண்டு புத்துணர்வை பரப்புகின்ற ஒரு மையமாக கலைத்துறை சார்பாகவும், வேறுபல ஆய்வுத்துறை சார்பாகவும் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் மூலமாக ஒரு மிகப்பெரிய எழுச்சி பெற்றிருப்பதை எல்லோரும் அறிவோம்.

அந்த எழுச்சிக்குக் காரணமாக இந்த விழாவினுடைய கதாநாயகனாக விளங்குகிற பெருமை ஆயிரமாண்டுகளுக்கு முன்னாலே சோர்வுற்றுக் கிடந்த தமிழகத்தில் எழுச்சி மிக்க வரலாற்றை துவக்கி வைத்த மாவீரன், பேரரசன். அந்த நாட்களிலே சொல்லக்கூடிய சொற்களின் படி இராஜராஜன் மிகப்பெரிய நிர்வாகி, கலை ஆர்வலன். அப்படிப்பட்ட இராஜராஜனுடைய பெருமையாலேதான் அந்த மறுமலர்ச்சி, மாற்றம், வளர்ச்சி ஆயிரமாண்டுகளுக்கு முன்னாலே ஏற்பட்டது.

அதனுடைய சின்னமாகத்தான் இந்த திருக்கோயில் விளங்குகிறது. இந்த பெரிய கோயிலுடைய சின்னமாக நாம் காண்கின்ற அந்த கோபுரம் ஒரு கலை அழகு மிக்க ஒரு கோபுரமாக – மிப்பெரிய பேராண்மைமிக்க ஒரு தோற்றமாக வரலாற்றிலே காண முடியாத அளவிற்கு ஒரு தனித்தன்மை உடையதாக – தொழில் நுட்பத்திலே தனி சிறப்பு படைத்ததாக இடி மின்னல் தாக்கினாலும் தாங்கி தன்மீது இடி மின்னல் இல்லாத அளவிற்கு ஆற்றல் பெற்றதாக இந்த கோபுரம் அமைக்கப்பட்டிருக்கிறது.

**புகழ்மிக்க வரலாறு**

தமிழ்நாட்டிலே இப்படி ஒரு கோபுரம் இல்லை என்பதுகூட அல்ல, இந்தியாவிலேயே இல்லை. ஏறத்தாழ இந்த கோபுரம், கோவில் கட்டப்பட்ட அதே காலத்தில் மத்தியப் பிரதேசத்திலே போஜ்பூர் என்று கருதுகிறேன். அங்கு இதைப்போன்ற முறையில் கோயில் கட்டுவதற்கு தொடங்கி ஒரு பாதியளவுகூட நிறைவுறாமல் தொடர்ந்து அந்த திருக்கோயில் கோபுரம் கட்டிமுடிக்கப்படாமலேயே விடப்பட்டது. கட்டி முடிக்கப்பட்டது இங்கேதான். ஆயிரம் ஆண்டு விழா கொண்டாடப்படுவது இங்கேதான். தமிழ்நாட்டினுடைய தனிப் பெருமையாக விளங்குவது இந்த திருக்கோவில். இந்த திருக்கோவிலை கட்டுவதற்குக் காரணமாக இருந்தவன் இராஜராஜன்.

உண்மையாகவே தமிழகத்தினுடைய வரலாறு சரியான முறையில், தெளிவான வகையில் வரையறுத்துத் தெரிவிக்கப்படவில்லை என்று சொன்னாலும்கூட, தமிழகத்தினுடைய வரலாறு வேறு எந்த நாட்டினுடைய வரலாற்றையும்கூட புகழ்மிக்க வரலாறு, பெருமை பொருந்திய வரலாறு, உலகமே வியக்கத்தக்க சிறப்புக்களையெல்லாம் ஒரு காலத்திலே பெற்றிருந்த வரலாறு என்பதை நம்முடைய தமிழ் மொழி ஒன்றே சான்று கூறும்.

வேறு எங்கேயும் தமிழ்மொழிபோல் ஒரு மிகப்பெரிய பெருமைக்குரிய மொழி வேறு எந்த ஒரு இனத்திற்கும் கிடைக்கவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள், நமக்கு கிடைத்திருக்கின்ற இந்த அருமையான தமிழ்மொழி வேறு எந்த ஒரு இனத்திற்காவது தாய்மொழியாக வாய்த்திருக்குமேயானால் அந்த இனம் உலகத்தையே வென்றிருக்கும் என்றார். எனவே அப்படிப்பட்ட தாய்மொழி தமிழ், ஒரு வரலாற்று பின்னணியான, வரலாற்று செய்திகளை கொண்டதாக

இல்லை என்று சொன்னாலும்கூட அது படைத்திருக்கின்ற வரலாறு இந்த குறைபாடுகளையெல்லாம் போக்கக்கூடிய வரலாறு.

**மூவேந்தர்களின் காலம்**

தமிழகத்தைப் பொறுத்தவரையில் மூவேந்தர்கள் பெருமையோடு ஆண்ட ஒரு காலம் இருந்தது. சங்க காலம், சங்ககாலத்திற்கு முற்பட்ட காலம், கடலுள் மறைந்த பகுதிகள் போக எஞ்சியிருந்த பகுதிகளோடு தென்னகத்தினுடைய பல பகுதிகள் சேர்க்கப்பட்டு பாண்டியன், சேரன், சோழன் இந்த மன்னர்கள் தொடர்ந்து ஆண்டு வருகின்ற ஒரு நிலைமை இருந்தது. மூவேந்தர் ஆண்ட பெருமையும் நமக்கு உண்டு. மூவேந்தர்க் கிடையிலே அடிக்கடி போர் நிகழ்ந்த வரலாறும் நமக்கு உண்டு. மூவேந்தர் ஆண்ட காரணத்தினாலே தென்னகத்திற்கு தனி பெருமை, அந்த மூவேந்தர்க்கிடையே ஏற்பட்ட போர் காரணமாக இன உணர்வு, மொழி உணர்வு, முழு அளவு வளரமுடியாத சூழலை ஏறத்தாழ சங்கக் காலத்திற்கு பின்னாலே கூட தொடர்ந்தது.

கி.பி., கி.மு., இரண்டாம் நூற்றாண்டு 180ஆவது ஆண்டு என்று கருதுகிறேன், ஒரிசாவில் அன்றைய கலிங்கத்தில் புவனேஸ்வருக்குப் பக்கத்தில் கத்தி கும்பா என்ற இடத்தில் ஒரு கல்வெட்டு கட்டப்பட்டிருக்கிறது. கல்வெட்டு செய்தி ஒன்று அங்கே கிடைக்கிறது. காரவேலன் என்ற மன்னன் தென்னத்திலே, தமிழகத்திலே ஒரு கூட்டணியாக ஏறத்தாழ 109 ஆண்டுகள் விளங்கிய மூவேந்தர்கள் கூட்டணியை தோல்வி அடையச் செய்தான் என்று அந்தக் கல்வெட்டு கூறுகிறது.

மூவேந்தர்களை தோல்வியுறச் செய்தான் நூறாண்டு களுக்கு மேல் கூட்டணியாக இருந்த – 1,300 ஆண்டு என்று ஒரு தவறான கருத்து அதிலே இருக்கிறது. இருந்தாலும் ஒரு 130 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து ஒன்றுபட்டு, தென்னகத்தைச் சேர்ந்தவர்கள், வடபுலத்திலே வெற்றி பெற்றுவந்தார்களே அந்த மன்னர்கள் அந்த சூழ்நிலையில் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் கரிகால் பெருவளத்தான் அதேபோல சேரன் செங்குட்டுவன், சேரமான் பெருஞ்சோற்றுதியன் நெடுஞ்சேரலாதன் இப்படி பல மன்னர்கள் அந்தக் கால சூழ்நிலையில் காரவேலர் தென்னகத்து மன்னர்களை வெற்றி பெற்றதாக ஒரு கல்வெட்டு பெருமை பேசுகிறது.

அதை எண்ணியபோதுதான் எனக்கு ஒரு கருத்து தோன்றியது. சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோ அடிகள், மாடல மறையோன் என்ற பாத்திரம் மூலமாக சேரன் செங்குட்டுவனிடத்திலே தெரிவித்த ஒரு கருத்து வடபுலத்து மன்னர்கள் இருவர் அவர்கள் பெயர் கனகர், விஜயர். அவர்கள் அதற்கு முன்னாலேயே தென்னகத்தைச் சேர்ந்த மன்னர்கள் வடபுலத்தை வென்ற அந்த செய்தியைச் சொல்லி எம்போல் மன்னர் ஈண்டி இல்லைபோலும் என்ற பெருமைப்படுத்திக் கொண்டார்கள். அப்படி அவர்கள் பெருமை பட்டுக் கொள்கிற அளவிற்கு அந்த நாட்களிலே பெற்ற வெற்றி இந்த நாளிலே அவர்கள் காலத்தில் பெறமுடியாது என்ற கருத்தை அவர்கள் தெரிவிக்கிறார்கள் என்ற செய்தியை செங்குட்டுவனிடத்திலே சொல்ல அது காரணமாக சேரன் செங்குட்டுவன் வடபுலத்திலே படையெடுத்தான், கண்ணகிக்கு சிலை வைக்க கற்களைக் கொண்டு வந்தான் என்ற அந்த அருமையான சிலப்பதிகாரச் செய்திகள் இருக்கின்றன.

ஆனால் எனக்குத் தோன்றியது காரவேலர் ஏற்படுத்திய அந்த கல்வெட்டு தமிழ் மன்னர்களுடைய கூட்டணியே தோற்கடிப்பு என்ற அந்த செய்திதான் சேரன் செங்குட்டுவனை நாங்கள் மூன்று பேரும் ஒன்றாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் வடபுலத்து மன்னர்களை வெல்லுகின்ற ஆற்றல் எங்களுக்கு உண்டு என்று காட்டக்கூடிய முறையில் சேரன் செங்குட்டுவனுடைய படையெடுப்பாக நிகழ்ந்து அது ஒரு சிறந்த காவியமாக, காப்பியமாக நமக்குக் கிடைத்திருக்கிறது.

**எழுச்சியை ஏற்படுத்திய இராஜராஜன்**

எனவே அப்படிப்பட்ட அந்தக் காலகட்டம், சேரன் செங்குட்டுவன் வெற்றிபெற்ற அந்தக் காலகட்டம். அதற்குப்பின்னால் அப்படிப்பட்ட வெற்றி பெறக்கூடிய மன்னர்களை தமிழகம் ஏறத்தாழ ஒரு 500 ஆண்டு அல்லது 600 ஆண்டுகளுக்கு பெற்றிருக்கவில்லை. தமிழகமேகூட யார் யாரோ ஆண்டார்கள் என்ற செய்தி. ஆண்டவர்களைப் பற்றி சரியான வரலாறு இல்லை. அவர்கள் தமிழுக்கு பகைவர்கள் அல்லர். ஆனால் தமிழோடு இணைந்த உணர்வு, உணர்ச்சி உடையர்கள் அல்லர். அவர்களுடைய மொழி, அவர்களுடைய பழக்க வழக்கம் தமிழ்நாட்டிலே ஓங்கியது. அந்த சூழ்நிலையிலே தமிழ் உணர்வுகூட தாழ்ந்தது. அதற்குப் பின்னர்தான் சைவமோ, வைணவமோ அதன் பெயராலேயே தமிழ்ப் பாடல்களையெல்லாம் பாடுகிற ஆர்வத்தைக் கொண்டு இறைவன் பெயரால், பக்தியின் பெயரால், தமிழை ஓரளவு காப்பாற்றினார்கள்.

அந்த காலகட்டத்திலேதான் 10ஆம் நூற்றாண்டில் இராஜராஜன் தோன்றிய காரணத்தினாலேதான் தமிழன், தமிழ்நாட்டை ஆள்வதற்கான தகுதியுடையவன் என்பது மட்டுமல்ல. சூழ்ந்திருக்கின்ற நாடுகளை யெல்லாம் வெல்லக்கூடிய திறமையுடையவன், வீரமுடையவன், ஆற்றல் உடையவன் என்பதை காட்டக்கூடிய முறையில் இராஜராஜன் வரலாறு அமைகிறது.

உண்மையாகவே தமிழகத்தினுடைய வரலாற்றை சங்க இலக்கியங்கள் கிடைக்காத காலத்தில் யாராவது ஓரளவு புரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்குமானால் அவர் புரிந்து கொண்டதெல்லாம் இராஜராஜ சோழனை வைத்துதான். இராஜேந்திரனுடைய வெற்றியை

வைத்துதான். இராஜராஜ சோழனும், இராஜேந்திரனும் இல்லையென்று சொன்னால் சங்க இலக்கியத்தைப் பற்றி அறியாதவர்கள், சிலப்பதிகாரத்தை பற்றி அறியாதவர்கள் தமிழ்நாட்டு மக்களுடைய நாகரீகத்தைப்பற்றி, பண்பாட்டைப்பற்றி பாராட்டிச் சொல்லக்கூடிய வாய்ப்பு இருந்திருக்காது.

எனவே அந்த முறையிலே இராஜராஜ சோழன் வீழ்ச்சியுற்ற தமிழகத்திலே எழுச்சியை ஏற்படுத்திய மாவீரன். அவனிடத்திலே மட்டும் 31 விதமான படைகள் இருந்தன என்று ஒரு கருத்து. அவன் நடத்திய கப்பல் படை கடாரத்தை வென்றது, புட்பகத்தை வென்றது, ஈழத்தை வென்றது, ஈழத்தை அடிமைப்படுத்தி 70 ஆண்டுகளுக்கு மேலாக அந்த மன்னனுடைய ஆட்சி நேரடியான ஆட்சி ஈழத்திலே இருந்தது என்று நான் வரலாற்றிலே படிக்கிறேன்.

எனவே அப்படி ஒரு மகத்தான வெற்றி பெற்றவன். அவனுடைய நிர்வாகத்திறமை அந்த நாட்களிலே நிர்வாகத்தைப்பற்றி அந்த அளவு அறிந்திருந்த மன்னர்கள் உலகத்திலே வேறு பல நாடுகளிலே இருந்தார்கள் என்று என்னால் சொல்லமுடியாது. மக்களுடைய வாழ்க்கைக்கு உணவு முக்கியம். உணவுக்கு உழவுதான் முக்கியம். உழவுத்தொழிலுக்கு நிலம் முக்கியம். அந்த நிலத்தை மக்கள் பயன்படுத்துவதிலே அவரவருக்குரிய நிலம் அவரவர்களுக்கு இருக்கக்கூடிய அளவிற்கு அளந்து அதை புள்ளிவிவரத்தோடு அவர்கள் பயன்படுத்து வதற்கு உதவியது அந்த மன்னனுடைய காலம். அந்த நிர்வாகத்திலே வடநாடுகள், கூற்றங்கள், மண்டலங்கள் இப்படி நாடு பிரிக்கப்பட்டு ஒரு அரசாங்கம், அதுவும் ஒரு மன்னனுடைய ஆட்சி போர் வீரனாக இருந்த ஒரு மன்னனுடைய ஆட்சி, அந்த மன்னன் போர்க்களத்திலேயே தன்னுடைய சிந்தனையை செலுத்தினாலும்கூட இன்னொரு பக்கம் மக்களிடத்திலே அக்கறை கொண்டு ஒவ்வொரு ஊரும், அந்த ஊரிலே வாழ்கின்ற நிம்மதியாக வாழக்கூடிய அளவிற்கு ஆட்சி முறையை செம்மைப்படுத்தினான். நிர்வாகத்தை செம்மைப் படுத்தினான், அந்த மன்னனைப்பற்றிக்கூட சில புள்ளிவிவரங்கள் சொல்லுகிறபோது ஏராளமான வரிகள் போட்டவன், மீன் பிடிப்பதற்கான வரி, நெசவு செய்வதற்கான வரி, எண்ணெய் எடுப்பதற்கான வரி என்று ஒவ்வொரு துறையிலேயும் வரிபோட்டான் என்பதை அடுக்கிச் சொல்லுகிறபோது அவன் வரிகளைப் போட்டே மக்களை வாட்டினானோ என்ற சந்தேகம் கூட வரும்.

ஆனால் வரலாற்று அறிஞர் அதை தெளிவுபடுத்தினார். இத்தனை வரிகளிலே ஏறத்தாழ ஒரு 30, 31 வரிகளில் அவன் ஏறத்தாழ 25 வரிகள், 24 வரிகள்

### சமூக நிலை

ஒவ்வொருக்கும் ஒரு வரிதான் – அவனவன் தொழிலுக்கு வரி, இந்தக் காலத்திலே சொல்லப்போனால் தொழில் வரி – சர்வீஸ் என்ற ஒரே அடிப்படையிலே அது முடிந்துவிடும். எனவே அவன் போட்ட வரிகூட அதிகமில்லை. ஆனால் அந்தக்காலத்திலேயும் குறைபாடுகள் இல்லையா என்று கேட்டால் சமுதாயக் குறைபாடுகள் இருந்தன.

ஒரு மன்னனே தீர்த்து வைக்கமுடியாத குற்றம் குறைகள் சமுதாயத்தில் இருந்தன. அன்றைக்கு இருந்த சமுதாயத்தினுடைய அடித்தட்டு மக்கள் பல வகையிலே வெறும் உழைப்பாளிகளாக இருந்தார்கள். அவர்களுக்கு நிலம் இருக்க வாய்ப்பில்லை. வாக்களிக்கின்ற வாய்ப்பு நிலம் உள்ளவர்களுக்குத்தான். ஆக அப்படியெல்லாம் ஒரு காலம். இலக்கியத்தை படித்தால்தான் அல்லது வேதத்தை படித்தால்தான் அவர் வாக்களிக்கலாம். ஆனால் ஊர்ச்சபை என்பதில்கூட ஊரிலே உள்ளவர்கள் அனைவரும் கூட வாக்களிக்க முடியாது. எனவே அப்படியெல்லாம் இருந்தது சமூக நிலை.

அந்த சமுதாயத்திலே மக்களுடைய நலனை எண்ணிப்பார்க்கக்கூடிய பெரிய மனம், பரந்த மனம் இராஜராஜ சோழனுக்கு வாய்த்தது. இல்லையென்றால் இவ்வளவு பெரிய ஒரு கோவிலை கட்டி ஒரு பெரிய அரண்மனையை விட கோட்டையாகவே கட்டி இந்த கோட்டையிலே ஒரு பக்கம் கலைகள், ஒரு பக்கம் மருத்துவச்சாலை, ஒரு பக்கம் பல்வேறு விதமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிடக்கூடிய ஒரு சாலை – அப்படிப்பட்ட முறைகளில், இப்படிப்பட்ட கோவில்களின் மூலமாக ஏற்படுத்தியவன் இராஜராஜ சோழன். அந்த காலத்திலே தனித்தனியாக ஒவ்வொன்றையும் ஏற்படுத்த முடியாது. எல்லாம் சேர்த்து கட்டவேண்டிய ஒரு நிலை. தனியாக பல்கலைக்கழகம் கட்ட முடியாது. தனியாக ஒரு மருத்துவமனை என்று கட்டிக்கொண்டிருக்க முடியாது. மக்கள் வந்து போகிற இடத்திலே அவர்களுடைய தேவைகளை நிறைவு செய்யக்கூடிய – அப்படிப்பட்ட பணிகளை அன்றைக்கு இராஜராஜன் மிகப்பெரிய அளவிலே நிறைவேற்றியவன். அப்படியெல்லாம் நிறைவேற்றிய ஒரு இடமாக விளங்கிய இடம் இந்த இடம். தஞ்சைப் பெரிய கோயில்.

### திருமுறைகளை மீட்டெடுத்த இராஜராஜன்

இன்னும் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். இராஜராஜ சோழன் அந்த காலக் கட்டத்திலே திருமுறை களையெல்லாம் மீட்டான், தில்லைக்கோவிலிலே அடைக்கப்பட்டிருந்த திருமுறைகளை – அதிலே ஏதோ ஒன்று இரண்டு தேவாரப் பாடல்களை அவன் காதால் கேட்டு ஏற்பட்ட மகிழ்ச்சியில் இன்பத்தில் இப்படிப்பட்ட பாடல் இன்னும் இருப்பதையெல்லாம் கொண்டு வாருங்கள் என்று கேட்க, வெளியிலே தேவாரப்பாடல்கள் எழுதி வைக்கப்பட்ட சுவடிகள் எங்கும் இல்லை என்று சொல்ல எங்குதான் கிடைக்கும் என்று அவன் கேட்க – கேட்ட போது நம்பியாண்டார் நம்பி என்ற பொல்லாப்பிள்ளை என்ற

சைவத்தோடு தொடர்புடைய பெருமக்கள் தில்லை திருக்கோயிலிலேதான் இருக்கிறது என்று சொல்ல, எந்த அறையிலே அது இருக்கிறது என்று விசாரித்து அந்த அறையிலே போய் பார்க்க அந்த அறை பூட்டிக்கிடந்தது. அங்கே உள்ள பெருமக்கள் தீட்சிகர் பெருமக்களாக இருக்க வேண்டும் – அவர்களைப் பார்த்து இந்த அறையை திறங்கள், இங்கே உள்ள தேவார சுவடிகளை நான் எடுக்க வேண்டும், எனக்கு நீங்கள் வழங்க வேண்டும் என்று கேட்க, அவர்கள் சொன்னார்களாம் மூன்று பேரும் சேர்ந்து வந்து அந்த மூவர்தான் இந்த அறையிலே வைத்து பூட்டினார்களாம், அந்த மூவரும் வந்தால்தான் தேவார சுவடிகளை, திருமுறைகளை எடுக்க முடியும். நாங்களாக எடுக்க எங்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னார்களாம். அந்த மன்னன் சிந்தித்தான், இராஜராஜ சோழன் எப்படியும் அதை வெளியிலே கொண்டு வரவேண்டும், அந்த தமிழ் அமுதம் அங்கே அடைப்பட்டுக் கிடக்கக்கூடாது என்று எண்ணினான். அது காரணமாக அந்த மூவருடைய திருவுருவச் சிலைகளையெல்லாம் அலங்கரித்து ஒரு திருநாளில் திருவிழா கொண்டாடும் நாளில் இந்த மூன்று சிலைகளையும் கொண்டுபோய் அந்த அறை முன் நிறுத்தி, அந்த கோயில் நிர்வாகிகளை அழைத்து மூவரும் வந்துவிட்டார்கள், அறையை திறங்கள் என்று சொன்னபோது வேறு வழியில்லாமல் நிர்வாகிகள் அறையைத் திறந்தார்கள்.

அவர்கள் வாய் திறந்து சொல்ல முடியாது இவர்கள் மூவர் அல்ல என்று. சொல்ல அவர்களுக்கு யோக்கியதை இல்லை, வழியில்லை, இவர்கள் மூவர்தான் என்று காட்ட இராஜராஜனுக்கு வாய்ப்பு, அப்படி காட்டி அந்த கதவை திறக்கச்சொல்லி அங்கு சென்று பார்த்தபோது அங்கு கரையான் புற்றெடுத்து பாதிக்குமேல் ஓலைச்சுவடிகளை எல்லாம் அழிந்துபோய் இருந்தன. இருந்தாலும் மிச்சம் உள்ளவற்றை எடுத்தான் அப்போதுகூட அவன் கலங்கினான். கலங்கியவனுக்கு அசரீரியாக ஒரு வார்த்தை கிடைத்ததாக செய்தி இருக்கிறது. என்ன அசரீரி என்றால் தேவையுள்ளதெல்லாம் இப்போதும் இருக்கிறது மிச்சம் தான் அழிந்துபோய்விட்டது என்றது ஒரு அசரீரி. அதைக்கேட்டு அவன் மன நிம்மதி அடைந்து, அந்த திருமுறைகளையெல்லாம் கொண்டு வந்து சேர்த்தான். அதற்கு பிறகு இந்த திருக்கோயில் உட்பட பல கோவில்களில் தேவாரப் பாடல்களை பாடச்செய்தான். அப்படி பாடுகிற வழக்கம் இருந்தது.

**தமிழை வாழச் செய்தவன்**

அதிலேயும் ஒரு மிக முக்கியமான செய்தி, இந்து திருக்கோவிலிலேகூட இந்த வட மொழியிலே உள்ள வேதம் பாடுவோர் மூன்றுபேர், திருமுறை பாடுவோர் நான்குபேர் என்று அவர்களுக்குரிய ஊதியத்தை தீர்மானிக்கிற அந்த பட்டியலில் இவர்களுக்குரிய ஊதியமும் தெரிவிக்கப்பட்டு நான்குபேர் திருமுறை ஓதுவார் என்று அதற்கு முன்னிடம் தந்திருக்கிறான். ஆக தமிழ் அந்தக்காலத்திலே முற்றும் புறக்கணிக்கப்படவில்லை. வடமொழியோடு சில இடங்களிலே போட்டி, சில இடங்களிலே அதனுடைய ஆதிக்கம், சில இடங்களிலே தமிழுடைய மேன்மை இந்த சூழ்நிலை இருந்தபோது இராஜராஜன் தமிழை மறுபடியும் மறுமலர்ச்சி அடைவதற்கு அதன் மூலமாக தமிழ்நாட்டு மக்கள் பெருமை பெருவதற்கு வழிவகை செய்த ஒரு மாபெரும் மன்னன் அப்படிப்பட்ட இராஜராஜன் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே வாழ்ந்தான்.

தமிழ்நாட்டு வரலாற்றை எண்ணிப் பார்க்கிறவர்களுக்கு அதற்கு முன்னாலே ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே கரிகால் பெருவளத்தான் அவன் கட்டிய கல்லணைதான் இன்றைக்கு சோழ நாட்டை வாழச்செய்கிறது. தஞ்சை மண்ணை வளம் நிறைந்த மண்ணாக ஆக்கியிருக்கிறது. கரிகால் பெருவளத்தான் காலத்திலே இருந்து ஆயிரம் ஆண்டுகளுக்கு பின்னாலே சேரன் செங்குட்டுவன் இன்னும் ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்கு பின்னாலே கலைஞருடைய காலம். இந்த பொற்காலம் கலைஞரால்தான் இராஜராஜ சோழனுடைய பெருமையை இன்றைக்கு உலகத்திற்கு எடுத்துக்காட்டக்கூடிய அந்த வாய்ப்பு நமக்கு கிடைத்திருக்கிறது. தமிழ் மண்ணினுடைய பெருமை, தமிழ் இசையினுடைய பெருமை, தமிழ் நாட்டிய கலையினுடைய பெருமை இவைகள் எல்லாம் இந்தத் திருக்கோவில் பெரிய கோவில் கட்டி இராஜராஜ சோழனின் அந்த முயற்சியிலே வெற்றிபெற்ற அந்த காரணத்தினாலேதான் அந்த பரதநாட்டியமும் காப்பாற்றப்பட்டது. தமிழ் இசையும் காப்பாற்றப்பட்டது. முத்துத் தாண்டவரோ, அருணாச்சல கவிராயரோ, மற்றவர்களோ தமிழ் இசை பாடுவதற்கு இந்த கோவில்தான் அதற்கு ஒரு பாதுகாப்பாக தொடக்கக் காலத்திலே இருந்து தமிழை காப்பாற்றியது என்பதை நான் பெருமையோடு உங்களிடத்திலே சொல்லிக் கொண்டு தமிழை வாழச் செய்த பெருமை இராஜராஜ சோழனுக்கு உண்டு. அவன் புகழை வாழச்செய்கிற பெருமை கலைஞருக்கு உண்டு அந்தக் காலத்தில் வாழ்கிற பெருமை நமக்கு உண்டு என்று கூறி என் உரையை நிறைவு செய்கிறேன். ★

**தெரியுமா ?**

**மாற்றுத்திறனாளி அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத அலுவலர்களுக்கு இதுவரை அளிக்கப்பட்டு வந்த ஊர்திப்படி 300 ரூபாயை 1,000 ரூபாயாக உயர்த்தி தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. இதன்மூலம் ஏறத்தாழ 10 ஆயிரம் மாற்றுத்திறனாளிப் பணியாளர்கள் பயன்பெறுவார்கள்.**

# தமிழனின் கட்டடக் கலைத் திறனை மேதினியெங்கும் பறைசாற்றிக் கொண்டுள்ள தஞ்சைப் பெரிய கோயிலின் ஆயிரம் ஆண்டு நிறைவு விழா

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில்

தஞ்சைப் பெரிய கோயில் 1000ஆவது ஆண்டு விழாவையொட்டி

24.9.2010 அன்று நடைபெற்ற ஆய்வரங்கத்தை தொடங்கி வைத்து

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை.




**மா**மன்னர் இராஜராஜன் எடுப்பித்து, உலகப் புகழ் குவித்து, தமிழனின் கட்டடக் கலைத்திறனை மேதினியெங்கும் பறைசாற்றிக் கொண்டுள்ள தஞ்சைப் பெரியகோயிலின் ஆயிரம் ஆண்டு நிறைவு விழா, நஞ்சை வளம் கொழிக்கும் தஞ்சைத் தரணியில் நெஞ்சை அள்ளும் வண்ணம் எழுச்சியோடு கோலாகலமாகக் கொண்டாடப்படுவதை யொட்டி;

அருந்தமிழாற்றல் நிறைந்துள்ள அறிஞர் பெருமக்களெல்லாம் கலந்து கொண்டு, தங்கள் ஆய்வுகளைப் படைத்து, அவற்றை விவாதங்களுக்கு உட்படுத்தி, தமது முடிவுகளை நிலைநாட்டிடும் களமாகத், தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்துள்ள இந்த ஆய்வரங்கினைத் தொடங்கி வைத்து அதே நேரத்தில் வாழ்த்துரை வழங்கிடும் வாய்ப்பைப் பெற்றுள்ளமைக்காக நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

“வான் பொய்ப்பினும் தான் பொய்யா மலைத்தலைய கடற்காவிரி புனல் பரந்து பொன்கொழிக்கும்” எனப் பட்டினப்பாலை போற்றும் சோழவள நாட்டின் தலைநகராகத் திகழ்ந்தது தஞ்சாவூர்; “தண் செய்” எனும் சொற்கள், “குளிர்ந்த நிலப்பரப்பு” எனும் பொருளை விளக்கி, “தஞ்சை” எனும் காரணப் பெயராகி, பின் – “ஊர்” எனும் பெயருடன் சேர்ந்து, “தஞ்சாவூர்” எனத் தரணியில் போற்றப்படுகிறது இவ்வூர்.





இந்தத் தஞ்சாவூரைத் தலைநகரமாகக் கொண்டு, கி.பி.9ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் விஜயாலயச்சோழன் என்னும் வேந்தன் பிற்காலச் சோழர்களின் ஆட்சியை ஏற்படுத்தினான். பிற்காலச் சோழர்களில் மிகச் சிறந்த மன்னராகவும், உலக வரலாற்றில், "பேரரசன்" என்னும் அடைமொழியைப் பெற்றவராகவும் விளங்கிய தமிழ் மன்னன் முதலாம் இராஜராஜன் கி.பி.985இல் ஆட்சிக்கு வந்தார். இவரது ஆட்சியில் தமிழகம் பல புதுமைகளைக் கண்டது.

சோழப் பேரரசுக்கு உட்பட்ட பகுதிகள் மாமன்னர் இராஜராஜனால் பல மண்டலங்களாகவும், வளநாடுகளாகவும், நாடுகளாகவும், கூற்றங்களாகவும், கோட்டங்களாகவும் பிரிக்கப்பட்டன. நிருவாக வசதிக்காக "நாட்டார்", "ஊரார்", "சபையார்" என்ற மக்கள் குழுவினர் உருவாக்கப்பட்டு; உள்ளாட்சி முறை செம்மைப்படுத்தப்பட்டது. நாட்டின் வருவாயைப் பெருக்கிட நிலங்கள் அளக்கப்பட்டன; வேளாண்மைக்குச் சிறப்பிடம் கொடுக்கப்பட்டது.

அரசின் நிருவாகம் திறம்பட இயங்கிட அலுவலர்கள் பலர் நியமிக்கப்பட்டனர். 'மூவேந்த வேளாண்', 'திருமந்திர ஒலை', 'ஒலை நாயகம்', 'வரிக்கூறு செய்வார்', 'பட்டோலை' போன்ற அலுவலர்கள் இவரது ஆட்சியில் சிறப்பிடம் பெற்றனர்.

இராஜராஜன் காலத்தில் சைவ, வைணவ சமயங்கள் மட்டுமன்றி, அனைத்துச் சமயங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டன. சமயப் பொறையுடன் விளங்கிய இம்மாமன்னரின் காலத்தில் ஸ்ரீவிஜய மன்னன் விஜயதுங்கவர்மன் நாகப்பட்டினத்தில் பௌத்தமத மடாலயம் ஒன்றை அமைப்பதற்காக அனுமதி வேண்டினான். இராஜராஜன் உரிய அனுமதியை வழங்கியதுடன் அதன் வளர்ச்சிக்கு "ஆனைமங்கலம்" என்னும் ஊரையும் கொடையாக நல்கினார். சமண சமயமும் இவரது காலத்தில் உன்னத நிலையில் இருந்தது; சமயப் பள்ளிகள் பல இக்காலத்தில் தோன்றின.

இராஜராஜன் கட்டிய பெரியகோயில் அவருக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க புகழை ஈட்டித் தந்தது. கி.பி.1003ஆம் ஆண்டு இக்கோயில் கட்டுவதற்கான பணிகள் தொடங்கப்பட்டு, 1006ஆம் ஆண்டில் கட்டுமானப் பணிகள் மும்முரம் அடைந்தன. கட்டடக் கலை வரலாற்றில் சிறந்ததொரு இடத்தைப் பெற்று விளங்கும் இத்திருக்கோயில் திராவிடக் கட்டடக் கலைக்குச் சிகரமாக விளங்குகிறது. இக்கோயிலின் கட்டுமானப் பணி 1010ஆம் ஆண்டில் முடிவடைந்து, குடமுழுக்கு விழா நடத்தப்பட்டுள்ளது.

இக்கோயில் கருவறை, இடைகழி, அர்த்த மண்டபம், மகாமண்டபம், முன்மண்டபம் ஆகியவற்றைக் கொண்டு விளங்குகிறது. இத்தகைய அமைப்புடன் 1000 ஆண்டுகளுக்குப் பின்னும் நின்று, தமிழனின் கட்டடக் கலை மாண்பைப் பறைசாற்றும் இந்தப் பெரிய கோயிலுக்கு இணையான ஒரு முழுமையான கட்டமைப்பை இந்தியாவில், ஏன் உலகிலேயே வேறு எங்கும் காணமுடியாது என்பது தஞ்சைப் பெரிய கோயிலுக்குரிய தனிச் சிறப்பாகும்.

இத்தகைய இணையிலாப் பெருமைக்குரிய பெரியகோயிலின் கட்டடக்கலை வல்லுநராக, "வீர சோழன் குஞ்சரமல்லன் இராஜராஜப் பெருந்தச்சன்" என்பார் இருந்துள்ளார். இவரது மேற்பார்வையின் கீழ், "மதுராந்தகன் நித்த வினோதப் பெருந்தச்சன்" என்பாரும், "இலத்தி சடையன் எனப்பட்ட கண்டராதித்தப் பெருந்தச்சன்" என்பாரும் பணியாற்றி, இக்கோயிலை உலகம் வியக்கும் வகையில் மாபெரும் கலைச்சின்னமாக வடிவமைத்து, முற்றிலும் கருங்கல்லில் மிகக் குறுகிய காலத்தில், ஏறத்தாழ ஏழு ஆண்டுகளுக்குள் கட்டி முடித்துள்ளனர்.

சோழ மன்னர்கள் ஆட்சியின் சிற்பக்கலை மாட்சியைக் காட்டும் அரிய பல சிற்பங்களும் இக்கோயிலில் இடம் பெற்றுள்ளன. முழுவதும் கற்றளியாக விளங்கும் இக்கோயிலின் கருவறையைச் சுற்றி, அமைந்துள்ள திருச்சுற்று மாளிகையில் சோழர் கால ஓவியங்கள் காணப்படுகின்றன. முதல்தளச் சுற்றிலும் 81 நாட்டியச் சிற்பங்களுடன் ஓவியங்கள் இருந்ததற்கான சுவடுகள் காணப்படுகின்றன. மாமன்னர் இராஜராஜன்



சைவ சமய குரவர்கள் பாடிய தேவாரத் திருமுறைகளைத் தேடித் தொகுத்தவர்; தஞ்சைப் பெரிய கோயிலில் திருமுறைகள் ஓதப்பட 48 ஓதுவார்களையும் அவர்களுக்குத் துணையாக ஓர் உடுக்கை வாசிப்பவரையும், ஒரு மத்தளம் வாசிப்பவரையும் நியமித்தார் என்றும் கல்வெட்டு உரைக்கிறது.

இப்படிக் கட்டடக்கலை, நாட்டியக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை, ஓவியக்கலை உள்ளிட்ட அனைத்துக் கலைகளுக்கும் நிலைக்களனாக அமைந்த ஒரு பல்கலைக்கூடமாக இராஜராஜன் இத் திருக்கோயிலைக் கட்டியுள்ளார்.

இத்தகைய அரிய பெருமைகள் பலவற்றைக் கொண்டுள்ள தஞ்சைப் பெரிய கோயில் வரலாற்றையும், அதன் பின்னர் கட்டப்பட்ட பல்வேறு கோயில்களுக்கெல்லாம் இத்திருக்கோயில் முன்னோடியாக அமைந்தது என்ற வரலாற்று உண்மைகளையும் அறிஞர் பெருமக்களாகிய நீங்கள் எல்லாம் அறிந்திருப்பீர்கள். இவற்றின் அடிப்படையில், பண்டைத் தமிழரின் ஆட்சிச் சிறப்பை மென்மேலும் மெருகுபடுத்தி மக்களிடம் கொண்டு செல்வதற்கு உங்கள் ஆய்வுகள் துணைபுரியும் என்பதிலே எனக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு. என்றாலும், ஆராய்ச்சி அறிஞர்களாகிய உங்களிடையே சில சிந்தனைகளை முன் வைத்திட நான் விரும்புகிறேன்.

நாம் – நம்மவர் – நம்முடையவை என்ற உணர்வுகள் குறைவதால், நம்முடைய உரிமைகளை – நமக்கு உரிமையுள்ள உடைமைகளை எல்லாம் இழந்து விடுகிறோம்; மறந்து விடுகிறோம் என்பதற்கு இந்தப் பெரிய கோயில் தொடர்பான ஒரு செய்தியே சான்றாக அமைந்துள்ளது என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

அதாவது, இந்தப் பிரம்மாண்டமான தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியது யார் என்பது குறித்து பல்வேறு கதைகள் கூறப்பட்டுள்ளன என்ற செய்தி நமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது. "கிருமி கண்ட சோழன்" என்னும் கரிகாலனால் இக்கோயில் கட்டப்பெற்றது என்றும், அவனுக்கு இருந்த "குட்ட நோய்" இங்குள்ள 'சிவகங்கை' குளத்தில் நீராடியதால் நீங்கியது என்றும், "ப்ரஹதீஸ்வர மஹாத்மியம்" என்னும் வடமொழிப் புராணமும், "தஞ்சாபுரி மஹாத்மியம்" என்னும் மராட்டிய மொழி நூலும் கதைகளைக் கூறியுள்ளன.

ஜி.யு.போப், அவர்கள்கூட 'காடுவெட்டிச் சோழன்' என்பான் கட்டினான் என எழுதுகிறார். இதுகுறித்து, மேலும் சிலர் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். இப்படி இந்தப் பெரியகோயில் பற்றிய உண்மைக்கு மாறான செய்திகளைப் பலரும் கூறியிருக்கின்றனர்.

இக்கோயில் கண்ணில்படாமல் மறைக்கப்படக் கூடிய அளவுக்குச் சிறிய ஒன்று அல்ல; மறக்கப்படக் கூடிய சாதாரண தோற்றம் கொண்டதும் அல்ல. இத்திருக்கோயில் கட்டப்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்கள் இதனைக் கட்டியது யார்? என அறிந்திருப்பார்கள். அவர்களால் பிரம்மாண்டமான இத்திருக்கோயில் பற்றிய செய்திகள் அடுத்தடுத்த தலைமுறைகளுக்குச்

செவிவழியாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கும். யாது காரணத்தாலோ அது தடைபட்டுவிட்டது. பல்லாயிரம் ஆண்டுகளாகப் புராணக் கதைகள் தொடர்ந்து சொல்லப்பட்டு வருகின்றன அல்லவா ? அதுபோல, இந்தப் பெரியகோயில் குறித்த செய்திகள் தொடர்ந்து எடுத்துச் சொல்லப்படாமையால், இக்கோயில் நம்முடையது என்ற எண்ணம் ஏற்படாமல், இந்தக்கோயிலைக் கட்டியவர் மாமன்னர் இராஜராஜன் என்ற பெருமைக்குரிய பெயர்கூட மக்கள் நினைவில் இல்லாமல் மறந்துபோய்விட்டது.

அந்நிலையில், 1886ஆம் ஆண்டில், அந்நாளைய சென்னை ஆங்கிலேய அரசாங்கம், "ஹூல்ஸ்" என்ற ஜெர்மன் அறிஞரைக் கல்வெட்டு ஆய்வாளராக நியமித்தது. அவர் பெரிய கோயில் கல்வெட்டுகளைப் படியெடுத்துப் படித்து இதனைக் கட்டியவர் "இராஜராஜனே" என முதன்முதலாகக் கூறியுள்ளார்.

என்றாலும், 1892இல், "வெங்கையா" என்பவரால் பதிப்பிக்கப்பெற்ற, "தென்னிந்தியக் கல்வெட்டுகள்" என்னும் நூலின் இரண்டாம் தொகுதியில் உள்ள முதல் கல்வெட்டில்,

'பாண்டிய குலாசனி வளநாட்டுத்
தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர்
நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி
ஸ்ரீஇராஜராஜீஸ்வரம்'

என்னும் தொடர்தான் இக்கோயிலைக் கட்டியவர் "மாமன்னர் இராஜராஜன்" என்பதைச் சற்றும் ஐயத்திற்கு இடமின்றி உறுதி செய்திருக்கிறது.

இத்தகைய மாபெரும் கோயிலை, நமது தமிழ் மன்னன் இராஜராஜன்தான் கட்டினார் என்பதைக்கூட அறியாதவர்களாக நமது மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது ஏற்படுகின்ற வருத்தத்தைப் புறக்கணித்திட முடியவில்லை.

இந்தப் பெரிய கோயிலைக் கட்டி – அதில் நாள்தோறும் தமிழில் வழிபாடு நடைபெற வேண்டுமென்று கருதி – தமிழ் வழிபாட்டிற்காக திருமுறைகளை இசையோடு பாடிட ஓதுவார்களை நியமித்து, அவர்களுக்கு ஊதியம் வழங்கிடவும் வகை செய்துள்ளார் மாமன்னர் இராஜராஜன்.

காலப்போக்கில் தமிழ்வழிபாட்டு முறை மறைந்து, வடமொழியில் வழிபாடுகள் செய்யும் நிலை ஏற்பட்டு, நிரந்தரமாகி, மாமன்னர் இராஜராஜன் விரும்பிய தமிழ் வழிபாட்டு முறை தடைபட்டுவிட்டது.

அதன்பின், இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழகத்தில் எழுந்த மொழி இனமான உணர்வுகள் காரணமாகத்தான் திருக்கோயில்களில் "தமிழிலும் வழிபாடு செய்யப்படும்" என ஓர் அட்டையை மட்டும் தொங்கவிட்டனர். அந்த நிலையில், கலைஞர் தலைமையிலான கழக அரசு "தமிழிலும்" என்பதில் உள்ள "உம்"என்பதை நீக்கி, தமிழில் வழிபாடு செய்யப்படும் என ஆணை பிறப்பித்து, தமிழில், 'போற்றி' நூல்களை வெளியிட்டு, தேவாரத் திருமுறைகளுடன் இந்தப் பெரிய கோயிலிலும், தமிழகத்தில் உள்ள ஏனைய திருக்கோயில்களிலும் தமிழில் வழிபாடுகள் நடைபெற வழிவகுத்தது.

எனவே, இத்தகைய ஆய்வரங்குகளில் பங்குபெறும் அறிஞர் பெருமக்கள், பெரியகோயிலில் திருமுறைகள் முழங்கி, வழிபாடு நிகழ வழிசெய்தமை, திருமுறைகளுக்கேற்ப நடன மகளிர் நாட்டியம் ஆடிட வழிசெய்தமை போன்ற இராஜராஜ சோழன் ஊட்டிய தமிழ்மொழி உணர்வை தெளிவுபடுத்திட வேண்டும்.

மாமன்னர் இராஜராஜன் உருவாக்கித் தந்த அருமையான கலைக்கருவூலமாகிய தஞ்சைப் பெரிய கோயிலின் ஆயிரம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி, அரிய சிந்தனைகளை விதைத்து, வளர்த்திட வாய்ப்பாக அமைகின்ற இந்த ஆய்வரங்கினைத் தமிழக அரசின் அறிவுரைகளுக்கேற்ப சிறப்பான முறையில் ஏற்பாடு செய்துள்ள தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் அவர்களுக்கும், அவருக்குத் துணைநின்ற பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், அன்பான பணியாளர்கள், அரசு அதிகாரிகள் அனைவருக்கும் எனது பாராட்டுகளையும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்து, ஆய்வரங்கம் வெற்றி பெற முதலமைச்சர் கலைஞர் அவர்களின் சார்பில் வாழ்த்துகள் கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்!

★ ★ ★

**தெரியுமா ?**

**ரூ.1,000 கோடி மதிப்பீட்டில், 9 மாநகராட்சிகள், 149 நகராட்சிகள் மற்றும் 560 பேரூராட்சிகளிலுள்ள பழுதடைந்த சாலைகளைப் பராமரிக்க, சிறப்புச் சாலைகள் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆணை.**

# ஏழை எளிய மக்களுக்கு மருத்துவத் துறையினர் அனைவரும் மனித நேயத்தோடு - மனிதாபிமானத்தோடு பணியாற்றிட வேண்டும்!

**சென்னை, அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனையின் 125ஆம் ஆண்டு விழா, தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட கட்டடத் திறப்பு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 14.10.2010 அன்று ஆற்றிய உரை.**



மருத்துவமனைக்கு வருகை தந்ததும், அதற்கேற்ப உடல்நிலையும் சரியில்லை. உடல்நிலை சரியில்லாத காரணத்தால், மருத்துவமனை விழாவிற்கு வரவில்லை; பிறருடைய உடல்நிலை சரியாக இருக்க வேண்டுமென்ற காரணத்திற்காக, அமைக்கப் பட்டிருக்கின்ற மருத்துவமனையினுடைய திறப்பு விழாவில் கலந்து கொள்வது – இந்தத் தொகுதியினுடைய சட்டப் பேரவை உறுப்பினர் என்ற முறையில் என்னுடைய கடமை. சட்டப்பேரவை உறுப்பினர் என்ற முறையில், முதலமைச்சர் என்ற நிலையில் அந்தக் கடமையை நிறைவேற்ற உடல் நிலை இடம் தராவிட்டாலும், இங்கே வந்திருக்கின்றேன்.

மூன்று நிகழ்ச்சிகள் இணைக்கப்பட்டு – கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனையினுடைய 125ஆம் ஆண்டு விழா – சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட கட்டடங்கள் திறப்பு விழா – இதய நோய் மற்றும் மகளிர் கருப்பை வாய், மார்பகப் புற்று நோய்த் தடுப்புத் திட்டங்களின் தொடக்க விழா ஆகிய இந்த விழாக்கள் எல்லாம் இணைக்கப்பட்ட இந்த விழாவிலே நான் கலந்து கொள்வது என்பது, உண்மையிலே சட்டமன்றத் தொகுதியினுடைய கடமையை ஆற்றுகின்ற அந்தப் பண்பை அனைவரும் பெற்றாக வேண்டும் என்ற ஒரு ஊக்கத்தை, உறுதியை அளிக்கின்றது.

இந்த நிகழ்ச்சியில் ஒரு கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட தொகையைக் கொண்டு இந்தக் கட்டடம் – மருத்துவத் துறை மேம்பாட்டிற்காக – மக்கள் நல்வாழ்விற்காக கட்டப்பட்டிருக்கிறது என்பதை விளம்பரங்கள் மூலமும், செய்திகள் வாயிலாகவும் நாமெல்லாம் அறிவோம். இது தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து கட்டப்படுகிறது; என்னுடைய சொந்தப் பணத்திலேயிருந்து கட்டப்படுவது அல்ல; இந்தத் தொகுதிக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதியிலேயிருந்து கட்டப்பட்டிருக்கின்றது. ஆனால், ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். இந்தியாவில் முதன் முதலில் தொகுதி மேம்பாட்டு நிதியை பொதுக் காரியங்களுக்கு, அதைப் போல நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்கின்ற அனுமதியை மத்திய அரசு ஏற்கெனவே நாடாளுமன்ற




உறுப்பினர்களுக்கு வழங்கியிருந்தது. அதைப்பார்த்து நானும் – பாராளுமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி நிதி நல்ல காரியங்களுக்காக ஒதுக்கலாம் என்று இருப்பதைப் போல, சட்டமன்றத் தொகுதி நிதியையும் ஏன் ஒதுக்கக் கூடாது என்ற கேள்வி என் முன்னாலே எழுந்து, சட்டமன்றத்திலே அதை அறிவித்து, அதை சட்டமன்ற உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டு, அந்த வகையிலே இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையை இது போன்ற நல்ல காரியத்திற்காகச் செலவழித்திருக்கின்றோம்.

ஆக, இந்தியாவிலே மத்திய அரசினுடைய பணத்தை – அவர்கள் பாராளுமன்ற தொகுதிகளுக்காக ஒதுக்குகின்ற பணம் ஏற்கெனவே ஆங்காங்கே பாராளுமன்ற தொகுதிகளுக்காகச் செலவழிக்கப் படுகின்ற நிலையிருந்தாலும்கூட; சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஒதுக்கப்படுகின்ற பணத்தை – அந்தத் தொகுதி மேம்பாட்டிற்காகச் செலவழிக்க வேண்டும் என்று முதல் குரல் கொடுத்தது தமிழ்நாடு தான் என்பதையும், தமிழ்நாடு அரசுதான் அதைச் செய்தது என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

## உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி

முதலில், அது 25 இலட்சம் ரூபாயாக ஒதுக்கப்பட்டது. பிறகு, கொஞ்சம் கொஞ்சமாக அந்தத் தொகை உயர்த்தப்பட்டு, இப்போது ஒரு கோடியே 75 இலட்சம் ரூபாய் அளவுக்கு உயர்த்தப்பட்டு, அந்தத் தொகையைப் பயன்படுத்திக் கொண்டு, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிப் பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அந்தப் பணியின் காரணமாகத்தான், அத்தகைய உதவியின் காரணமாகத்தான், இந்த ஏற்பாடு செய்யப்பட்டு, தாய் சேய் நல மருத்துவமனை – சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட கட்டடங்கள் அனைத்தும் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. இப்படித் திறந்து வைக்கப்பட்டிருக்கின்ற இந்தக் கட்டடங்கள் மருத்துவத் துறையின் பயன்பாட்டிற்காக என்றாலும்கூட, கட்டடங்கள் கட்டினால் மாத்திரம் பலனில்லை; அங்கே இத்தனை மருத்துவர்கள் என்று கணக்குக் காட்டினால் மாத்திரம் பயனில்லை; அந்தக் கட்டடங்களிலேயிருந்து பணியாற்றுகின்ற மருத்துவர்கள், அந்த மருத்துவர்களுக்கு உதவியாக இருக்கின்ற செவிலியர்கள் உள்ளிட்ட மற்ற மருத்துவத் துறை நண்பர்கள் அனைவரும் – ஏதோ ஒரு கடமையாற்றுகிறோம் என்று இல்லாமல் – இந்தப் பணி நம்மை வந்தடைந்திருக்கிறது – அந்தப் பணியை மனித நேய மனப்பான்மையோடு நாம் நிறைவேற்றுவோம் என்ற அந்த உணர்வைப் பெற்று மக்களைக் காப்பாற்ற வேண்டும் – மக்களுக்குப் பணி யாற்ற வேண்டும் என்று நான் உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

கோடிக்கணக்கில், இலட்சக்கணக்கிலே செலவிட்டு, மருத்துவத் துறைக்கான பணிகளை – மருந்துகள் தயாரிப்பதிலேயிருந்து, மருத்துவத் துறைக்குத் தேவையான அந்த இயந்திரங்களை, நுணுக்கமான விஞ்ஞானக் கருவிகளைப் பயன்படுத்துகின்ற போது




மனித உணர்வு வேண்டும்; மனசாட்சிக்கு ஏற்ற வகையிலே நாம் நம்முடைய கடமையை ஆற்ற வேண்டும் என்று டாக்டர்கள் ஆனாலும், டாக்டர் பயிற்சிக்குத் தங்களை ஒப்படைத்துக் கொண்டிருக்கின்ற நீங்கள் ஆனாலும், அனைவரும் அந்த வகையிலே ஒத்துழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

காசு, பணம் பெரிதல்ல. எத்தனையோ செய்திகள் பத்திரிகைகளில் வருகின்றன. மருத்துவமனைக்கு வந்த நோயாளியை டாக்டர்கள் கவனிக்க மறுத்த காரணத்தினால், அல்லது சரியாக கவனிக்காத காரணத்தால், அவர்களுடைய உடல் நலிவும் தீரவில்லை – உயிரும் காப்பாற்றப்படவில்லை என்கிற செய்திகளும் அன்றாடம் பத்திரிகைகளில் செய்திகளாக வந்து கொண்டிருக்கின்றன. பத்திரிகைச் செய்திகள் ஒருபுறம் இருந்தாலும் கூட, அந்தப் பத்திரிகைச் செய்திகளில் சில இந்தச் சர்க்காருக்கு, இந்த அரசுக்கு விரோதமாக வெளியிடப்பட்டாலும்கூட, அவற்றையெல்லாம் "இல்லை" என்று ஆக்குகின்ற வகையில், மருத்துவத்துறையிலே பணியாற்றுகின்ற நண்பர்கள் பாடுபட வேண்டும்; ஒத்துழைக்க வேண்டும்.

நீங்கள் அரசுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று நான் யாரையும் கேட்கவில்லை. சாதாரண, சாமானிய ஏழையெளிய மக்களுக்கு, மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல், அனைவரும் பாடுபட வேண்டுமென்று மருத்துவத் துறையிலே இடம் பெற்றிருக்கின்ற அனைத்து நண்பர்களையும் கேட்டுக் கொள்கிறேன். அனைத்துத் துறைகளையும் விட, மருத்துவத்துறை தான் மனிதாபிமானத்தோடு – உடன்பாடு கொண்ட துறையாகும். எனவே, மருத்துவத் துறையிலே தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும், "அவர்கள் மனிதாபிமானம் அற்றவர்கள்; மனிதாபிமானத்திற்கு மரியாதை கொடுக்காதவர்கள்; மனிதாபிமானத்தைப் பற்றிக் கவலைப்படாதவர்கள்" என்ற பழிக்கு ஆளாக நேரிடும். ஆகவே, அனைவரும் மனிதாபிமானத்தோடு, மனித நேயத்தோடு மருத்துவத் துறைப் பணியை ஆற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு, இந்தத் திறப்பு விழாவிலே – இதுதான் மருத்துவத் துறையிலே இருக்கின்ற எல்லா நண்பர்களுக்கும் நான் விடுக்கின்ற அன்பான வேண்டுகோள் என்று கூறி விடை பெறுகின்றேன், வணக்கம். ★

---

**தெரியுமா?**

**11ஆம் வகுப்புப் பயிலும் அனைத்து சமுதாயங்களையும் சார்ந்த 5 இலட்சத்து 68 ஆயிரத்து 359 மாணவ, மாணவியர்க்கு 149 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் இலவச மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.**

# கைத்தறியாளர்களின் வாழ்வு சிறக்க அனைவரும் கைத்தறி அணிவோம்!

**மத்திய ஜவுளித் துறையின் ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டுத் திட்டத்தை தொடங்கிவைத்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 8.10.2010 அன்று ஆற்றிய உரை.**

இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த விழாவிலே கலந்துகொண்டு உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். மகிழ்ச்சிக்கு மிக முக்கியமான காரணம், இந்த விழா கைத்தறியையும் இணைத்து முன்னேற்றுகின்ற ஒரு திட்டத்தோடு நடைபெறுகின்ற விழா என்பதாலும், இந்தியாவிலேயே முதன்முதலாக நம்முடைய தமிழகத்திலே தான் இந்தத் திட்டம் தொடங்கப்படுகின்றது என்பதாலும் ஏற்படுகின்ற மகிழ்ச்சியாகும்.

**தமிழகத்தில் ஜவுளித்துறையில் வேலைவாய்ப்பு**

இதிலே நம்முடைய தம்பி தயாநிதி மாறன் அவர்கள் மத்திய ஜவுளித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியுதவித் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிலே உள்ள பல்வேறு தொழில் நிறுவனங்களுக்கு தொழில்நுட்பத்தை மேம்படுத்த வட்டிச் சலுகை உதவியாக 1,000 கோடி ரூபாயும், தமிழகத்தில் பல்வேறு இடங்களில் அமையவிருக்கும் 16 திட்டங்களுக்கு 415 கோடி ரூபாயும் வழங்கியிருக்கிறார். இதன் மூலம் 50 ஆயிரம் கைத்தறி நெசவாளர்கள் பயனடைவதோடு, ஆயிரக்கணக்கான புதிய வேலை வாய்ப்புக்கள் ஜவுளித்துறையிலே தமிழத்திலே உருவாவதற்கு வழிவகுத்துள்ளது.

இந்த ஜவுளித்துறையில் இப்படியொரு புரட்சியை ஏற்படுத்தியது மாத்திரமல்லாமல், ஜவுளித்துறையிலே ஒரு முக்கியமான இடத்தை தமிழம் பெறவும், தம்பி தயாநிதிமாறானால் வழிவகுக்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்களெல்லாம் மிக நன்றாக அறிவீர்கள்.

ஜவுளித் துறையை தயாநிதி மாறன் பொறுப்பேற்றுக் கொண்டபோது, "ஜவுளித் துறை தானா?" என்ற எண்ணம்தான் தோன்றியது. ஆனால், எந்தத் துறையானாலும், அந்தத் துறையிலே பணியாற்றுகின்ற அமைச்சர்கள் காட்டுகின்ற திறமையினால் அந்தத் துறைக்கே ஒரு சிறப்பு, ஒரு உயர்வு வருவதுண்டு. அதைப்போல, தம்பி தயாநிதி மாறனுடைய தலைமையிலான இந்தத் துறை தானா என்று கேள்வியாகக் கேட்கப்பட்ட அந்தத் துறைக்குக்கூட ஒரு பெரிய சிறப்பு உருவாகியிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.



ஒருவர் எனக்கு ஏதாவது வேலை கொடுங்கள் என்று கேட்டபோது, ஒரு பெரியவர் ஒரு ஊசியை எடுத்துக் கொடுத்து, "இந்தா, இந்த ஊசியை வைத்துக் கொண்டு பிழைத்துக் கொள்" என்று சொன்னார். அவர் அந்த ஊசியைப் பார்த்தார். ஒரு பக்கத்திலே ஒரு துவாரம் இருந்தது. இருந்தாலும், அந்த ஊசியைப் பயன்படுத்துகிற அறிவு இல்லாத காரணத்தினால், அந்த ஊசியினாலேயே அந்த ஊசியைக் கொடுத்த பெரியவரின் கண்ணைக் குத்தினார். அப்படி ஊசி அவருக்குப் பயன்பட்டது. இப்படி எவ்வளவோ பேர் இருக்கிறார்கள் நாட்டில். யார் ஊசி கொடுத்தாலும், கொடுத்தவருடைய கண்ணையே குத்துகின்ற ஆட்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். அப்படி ஊசி கொடுத்தவருடைய கண்ணையே குத்தியவன் அவன்.

இன்னொருவனிடத்திலே ஊசி கிடைத்தது. அவன் உற்று உற்றுப் பார்த்தான் ஊசியை. அந்த ஊசிக்கு ஒரு காது இருந்ததைப் பார்த்தான். அதிலே ஒரு நூலைக் கோர்த்து தைக்க ஆரம்பித்தான். எத்தனையோ உடைகளைத் தைத்தான். தைத்து, தைத்து அந்த ஒரு ஊசியால் அந்த ஊரிலேயே ஒரு பெரிய வியாபாரியாக ஆனான் என்பது பழைய கதை.

**திறன் வளர்க்கும் பயிற்சி**

அதைப்போல, தம்பி தயாநிதி மாறனிடத்திலே ஒரு ஊசிதான் கொடுத்தார்கள்; அவர் அந்த ஊசியை வைத்துக் கொண்டு, இன்றைக்கு ஒரு உத்திரத்தையே உருவாக்கியிருக்கிறார் என்பதற்கு அடையாளமாக இன்றைய தினம் இந்த விழா இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தயாநிதி மாறன் பொறுப்பேற்ற பிறகு, என்னென்ன காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் நான் சுருக்கமாகச் சொன்னேன். இந்த ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டுத் திட்டம் இருக்கிறதே, இது இந்தியா முழுவதும் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இந்தத் திட்டத்தின் கீழ் 2 ஆயிரத்து 300 கோடி ரூபாய் செலவில் அடுத்த 5 ஆண்டுகளில் 30 இலட்சம் பேருக்குத் தேவையான திறனை மேம்படுத்தி, அவர்கள் ஜவுளித்துறையில் வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கு வழிவகுக்கும்.

அவர்களுடைய திறனை வளர்ப்பதற்கு, அதற்கொரு திறனை உருவாக்கக்கூடிய பயிற்சியும் தேவை. அந்தப் பயிற்சியும் இப்போது அளிக்கப்படுகிறது. அதற்கும் ஏற்றவாறு தொகை ஒதுக்கப்பட்டு, அந்தத் திட்டமும் நிறைவேற்றப்படுகிறது. இந்தியாவிலேயே முதலாவதாக இந்தத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையம் தமிழ்நாட்டிலேதான் தொடங்கி வைக்கப்படுகிறது என்பதை எண்ணும் போது, திறனை மேம்படுத்துகின்ற ஆற்றல் இந்தியாவிலேயே தமிழ்நாட்டிற்குத்தான் உரியது என்பதை நாம் சொல்லாமல் சொல்லுகின்றோம். இரண்டு ஆண்டுகளில் இதுபோன்ற 12 பயிற்சி மையங்கள் தமிழகத்தில் தொடங்கப்பட உள்ளன. அவற்றின் மூலம் 25 ஆயிரம் பேருக்கு ஆடைத்தொழிலில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் கிடைக்க விருக்கின்றன.

15.8.2010 சுதந்திரத் திருநாள் அன்று நம்முடைய சென்னை மாநகரத்தில் கோட்டையில் தேசியக் கொடியை நான் ஏற்றி வைத்து உரையாற்றிய பொழுது, "வேலைவாய்ப்பு இல்லாத, 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு படித்த இளைஞர்கள் – பொறியியல், இளங்கலை, முதுகலைப் பட்டம் பெற்ற இளைஞர்கள் ஒரு இலட்சம் பேர் வேலைவாய்ப்பு பெற வழிவகுக்கும் நோக்கில் 50 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் திறன் வளர்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்படும்" என்று குறிப்பிட்டேன்.

நான் செய்த அந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக அல்ல; துணையாக, மத்திய அரசின் சார்பில் – மத்திய அரசு என்றைக்கும் நமக்குத் துணை நிற்கின்ற அரசு – அந்த அரசின் சார்பில், பயிற்சி மையங்கள் நமது இந்தியா முழுவதிலும் தொடங்கப்படுகின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதிலே ஒன்றுதான், இங்கே இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த விழா என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கைத்தறிக்கு அண்ணா அளித்த ஊக்கம்**

நம்முடைய கே.கே.எஸ்.எஸ்.ஆர். குறிப்பிட்டதைப் போலவும், நம்முடைய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் எடுத்துக் காட்டியதைப்போலவும், இந்தியாவிலே விவசாயத்திற்கு அடுத்ததாக இருப்பது ஜவுளித்துறை. ஜவுளித் துறைக்கு அடிப்படையாக இருப்பது கைத்தறித் துறை. கைத்தறியாக இருந்தாலும், விசைத்தறியாக இருந்தாலும், இந்தத் துறைதான் அடிப்படையாக உள்ள துறை என்பதை எவரும் மறுத்திட இயலாது. அதனால் தான், கைத்தறியை வளர்க்க வேண்டும், கைத்தறிக்கு ஒரு செல்வாக்கு பெருக வேண்டும், இந்தியா முழுவதும் கைத்தறிக்கான சந்தை வளர வேண்டுமென்ற எண்ணத்தோடு எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள், கைத்தறித் துணிகளை மக்கள் வாங்குவதற்கான ஊக்கத்தை ஏற்படுத்த, அவரே முன்னின்று அவரும், எங்களைப் போன்ற கழகத்தினுடைய முன்னணியினரும் முன்னின்று; கைத்தறித் துணிகளைத் தோளிலும், தலையிலும் சுமந்து ஊர் ஊராக விற்று, அப்படி விற்ற காரணத்தால், கைத்தறித் துணிகளை வாங்க வேண்டுமென்ற உணர்வு நம்முடைய மக்களுக்கு ஏற்பட்டு, கைத்தறிக்கு ஒரு செல்வாக்கு வளர்ந்தது.

எப்படி கதரையே கட்டவேண்டும் என்று காங்கிரஸ்காரர்களுக்கு அன்றைக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு, அந்த உறுதியை மேற்கொண்டு அவர்களும், இன்று வரை கதராடையை அவர்களுடைய உடைகளாக அமைத்திருக்கிறார்களோ, அதைப்போல, இங்கே வாசன் அவர்களைக்கூட பார்க்கிறீர்கள். வாசன் அவர்களுடைய தந்தையார் – என்னுடைய அருமை நண்பர் மறைந்த மூப்பனார் அவர்கள் கதராடை யோடுதான் வருவார்; அதிலே அவர் அழகாகத் தோன்றுவார். ஏற்கெனவே வசீகரமான மூப்பனார் அவர்களை, கதராடையோடு தோன்றும்போது பார்த்தால், எனக்கே மேலும் மேலும் அவர்மீது பற்றும், பாசமும் ஏற்படும்.



ஏனென்றால், அவர்களுடைய இயக்கத்தில் எதை உடையாக அணிய வேண்டுமென்று கருதுகிறார்களோ, அந்த உடையை அணிந்து வருவார் மூப்பனார் அவர்கள். அவருடைய செல்வன் நம்முடைய வாசன் அவர்களும், எப்போதும் அதே உடையில் வருகிறார்.

**அமைச்சர் பரிதி இளம்வழுதிக்கு ஒரு கோரிக்கை**

இங்கே பரிதி இளம்வழுதி சொன்னார். ஒரு கோரிக்கை வைத்தார். என்ன கோரிக்கை என்றால், நானும், நம்முடைய தயாநிதி மாறனும் நிறைவேற்ற வேண்டுமென்று கைத்தறி நெசவாளர்களுக்கென்று ஒரு கோரிக்கை வைத்தார். நான் அவருக்கு ஒரு கோரிக்கை வைக்கிறேன். "தயவு செய்து இனிமேல் நீ தொடர்ந்து கைத்தறியையே கட்டு" என்ற ஒரு கோரிக்கையை நான் அவருக்கு வைக்கிறேன். வாய்ச்சொல் மாத்திரம் போதாது. எதையும் நடைமுறைப்படுத்த வேண்டுமேயானால், செயல்படுத்த வேண்டுமேயானால், அதன்படி நாம் நடந்து காட்ட வேண்டும். கேட்டால் சொல்வார். "நான் வேட்டி கட்டினால் தானே கைத்தறியை உடுத்த முடியும். பழைய காலத்தில் சட்டசபையில் என்னுடைய வேட்டிக்கே ஆபத்து வந்த காரணத்தினால் தான், நான் இந்த பேண்ட் போட ஆரம்பித்தேன்" என்று சொல்லக்கூடும். இப்போது அந்த ஆபத்து இல்லாத காலத்தில் கூட ஏன் அதையே கடைப்பிடிக்க வேண்டும். ஆக, ஆபத்து இல்லாத காலத்தில் கைத்தறி கட்டினால் பரவாயில்லை என்ற உறுதி, உடையிலே கூட என்ன உறுதி; மற்றோர் – அனைவரும் வியப்படைந்து பாராட்டுகின்ற, போற்றுகின்ற முறையிலே நான் இந்த விழாவில் நம்முடைய தோழர்கள் மாத்திரமல்ல. தமிழர்கள் அனைவருமே, கைத்தறியாளர்களும் தமிழர்கள் தான்; அவர்களுடைய வாழ்வும் நம்முடைய வாழ்வுதான் – அந்த வாழ்வு சிறக்க அனைவரும் கைத்தறி ஆடையைப் பயன்படுத்தி, அவர்களுக்கு வாழ்வு அளிப்போம் என்ற உறுதியை இதுபோன்ற விழாக்களிலே மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு; மத்திய அரசின் மூலமாகப் போடப்பட்டுள்ள இந்தத் திட்டம் – அந்தத் திட்டத்திற்குத் துணையாக தமிழக அரசும் இருக்கிறது.

**மாநில அரசையும் மத்திய அரசையும் நாம் ஒன்றாகவே பார்ப்போம்!**

இன்னும் சொல்லப்போனால், இந்தப் பயிற்சி பெறுகின்ற ஒவ்வொருவருக்கும், 2,000 ரூபாய் ஊக்கத் தொகையாக தமிழக அரசு வழங்கவுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இதிலே தமிழகம், மத்திய சர்க்கார் என்றெல்லாம் பிரித்துப் பார்க்காமல், பிரித்துப் பார்ப்பவர்கள் பார்த்துக் கொண்டேயிருக்கட்டும்; ஒன்றாக இருக்கும் நாம், ஒன்றாகவே பார்ப்போம் என்று கூறி இந்த அருமையான விழாவை ஏற்பாடு செய்த தம்பி தயாநிதி மாறனுக்கும், இதிலே கலந்து கொண்டவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், வணக்கத்தையும் தெரிவித்து விடைபெறுகின்றேன். ★

**தெரியுமா?**


**உணவு உற்பத்திக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்துவரும் தமிழக அரசு, கடந்த நான்கரை ஆண்டுகளில் 7 ஆயிரத்து 437 கோடியே 22 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, 304 இலட்சம் மெட்ரிக் டன் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது.**

# ஏழை - எளிய மக்கள் பல்வேறு நலஉதவிகளை எளிதாகப் பெற தமிழகம் முழுவதும் விரைவில் மின் ஆளுமைத் திட்டம் அமலாகும்!

15-10-2010 அன்று, கிருஷ்ணகிரி மாவட்டத்தின் மின் ஆளுமைத் திட்டத்தைத் தொடங்கி வைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.




ஏழை, எளிய, சாமானிய மக்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதில் தமிழக அரசு மிகுந்த முனைப்புடனும், மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாகவும் செயல்பட்டு வருவதை அறிவீர்கள்.



பெருகிவரும் கணினிப்பயன்பாடு மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்பத்தைப் பயன் படுத்தி இந்த அரசு பல ஆண்டுகளாக மக்களுக்குப் பல வகையிலும் தொண்டாற்றி வருகிறது.

2008 பிப்ரவரித் திங்கள் 26ஆம் நாளன்று நடைபெற்ற கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத் திறப்பு விழாவின் போது கிருஷ்ணகிரி, கோவை, திருவாரூர், அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் மாவட்ட நிருவாகம் முழுதும் கணினி மயமாக்கும் முன்னோடித்திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. அத்திட்டத்தை நடைமுறைப்படுத்திடும் நோக்கில், மக்களுக்கு நேரடியாகப் பல்வேறு நல உதவிகளை வழங்கும் துறைகளான பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை மற்றும் சமூகநலத் துறையைச் சார்ந்த பல சேவைகளும் இத்திட்டத்தின் கீழ் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

**சான்றிதழ்கள் எளிதாகப் பெறுவதற்கான சேவைத் திட்டம்**

இத்தகைய பணிகளைத் தொடர்ந்து, தற்போது வருவாய்த்துறையைச் சார்ந்த பணிகளான

- சாதிச் சான்றிதழ் வழங்குதல்,
- வருமானச் சான்றிதழ் வழங்குதல்,
- ஆதரவற்ற பெண்களுக்கான சான்றிதழ் வழங்குதல்,
- இருப்பிடச் சான்றிதழ் வழங்குதல்,
- பட்டதாரியில்லாக் குடும்பம் எனும் சான்றிதழ் வழங்குதல்

போன்றவைகளை மக்கள் எளிதாகப் பெறுவதற்கு வழிவகுக்கும் சேவைத் திட்டத்தை காணொலிக் காட்சி வாயிலாக முதற்கட்டமாக கிருஷ்ணகிரி மாவட்டத்திலே இன்று தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

**தமிழகம் முழுவதும் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்**

இந்த வசதி அரியலூர், பெரம்பலூர், கோவை, திருவாரூர், நீலகிரி ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கும் விரைவில் நீட்டிக்கப்படும் என்பதையும், அதனைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். "மக்களுக்குச் சிறப்பான வகையில் சேவை செய்ய ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் பிரத்யேகமான மின் அஞ்சல் முகவரி ஏற்படுத்தித் தரப்படும்" என 2010–2011ஆம் ஆண்டிற்கான, தகவல் தொழில் நுட்பவியல் துறையின் மானியக் கோரிக்கையின் போது, தமிழக அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பை நிறைவேற்றும் வகையில், தமிழகத்தின் 234 சட்டப் பேரவைத் தொகுதி உறுப்பினர்களுக்கும், தேசிய தகவல் மையத்தால் (NIC) தனி மின் அஞ்சல் முகவரிகள் (e-mail-ID) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**வணிக நிறுவனங்கள் – கல்வி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

கிராம ஊராட்சிகளில் அழைப்பு மையங்கள் (Call Centres) அமைப்பதை ஊக்குவித்திட ஒரு சிறப்புக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. இக்கொள்கையின் பயனாக, கிராமப்புற படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கத் தக்க அழைப்பு மையங்கள் பல அமைக்கப்படும் அத்தகைய சூழல் உருவாகியுள்ளது. இத்தகைய மையங்களை அமைக்கக்கூடிய வணிக நிறுவனங்களும், கல்வி நிறுவனங்களும் தமக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்களை இன்று பரிமாறிக் கொள்கின்றன.

இதற்காக இங்கே வருகை தந்துள்ள நிறுவனங்களின் பிரதிநிதிகளை மகிழ்ச்சியோடு வரவேற்பதோடு, இந்நிகழ்ச்சியைச் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்துள்ள அதிகாரிகள், தொழில்நுட்பப் பணியாளர்கள் அனைவருக்கும் என் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்து உரையை நிறைவு செய்கிறேன். ★

"மக்களுக்குச் சிறப்பான வகையில் சேவை செய்ய ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் பிரத்யேகமான மின் அஞ்சல் முகவரி ஏற்படுத்தித் தரப்படும்" என 2010–2011ஆம் ஆண்டிற்கான, தகவல் தொழில் நுட்பவியல் துறையின் மானியக் கோரிக்கையின் போது, தமிழக அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பை நிறைவேற்றும் வகையில், தமிழகத்தின் 234 சட்டப் பேரவைத் தொகுதி உறுப்பினர்களுக்கும், தேசிய தகவல் மையத்தால் (NIC) தனி மின் அஞ்சல் முகவரிகள் (e-mail-ID) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**தெரியுமா?**

**மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டும் வகையில், சிறப்பான பொது சுகாதாரச் சேவையை மக்களுக்கு வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழகம் முன் உதாரணமாக விளங்குகிறது என உலக வங்கி பாராட்டு.**

# பொதுப்பணித் துறையின் திட்டப் பணிகளை தரமாக நிறைவேற்றி மக்கள் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டு வர வேண்டும்!

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆணை



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 30.9.2010 அன்று பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதாரம் மற்றும் கட்டடப் பிரிவுகள் மூலம் தமிழகம் முழுவதிலும் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகளின் முன்னேற்ற நிலைகள் குறித்து அதிகாரிகள் முன்னிலையில் விரிவாக ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வின்போது, தலைமைச் செயலாளர், பொதுப் பணித்துறை முதன்மைச் செயலாளர், முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் (கண்காணிப்பு), நிதித் துறைச் செயலாளர், தலைமைப் பொறியாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

பொதுப்பணித் துறை (நீர்வள ஆதாரம்) மூலம் மேற்கொள்ளப்படும் வெள்ளத் தடுப்புத் திட்டங்கள், மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைக்கும் திட்டங்கள், தடுப்பணை கட்டுவதன் மூலம் நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்தும் திட்டங்கள் முதலான முக்கிய திட்டங்கள் குறித்து ஆய்வுகள் செய்யப்பட்டன.

குறிப்பாக, காவிரி ஆற்றின் குறுக்கே கட்டளைப் பகுதி மாயனூரில் கதவணை கட்டுவதற்கு 165 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்து குறித்த காலத்தில் இத்திட்டத்தை முடிப்பதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவுறுத்தினார்.

**தாமிரபரணி – கருமேனி – நம்பியாறு இணைப்பு திட்டப் பணிகள்**

தாமிரபரணி – கருமேனி ஆறு – நம்பியாறு இணைப்புத் திட்டம் 369 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதற்கட்ட மற்றும் இரண்டாம் கட்டப் பணிகளின் முன்னேற்றம் பற்றி ஆய்வு செய்த மாண்புமிகுமுதலமைச்சர் கலைஞர், இந்தியாவின் முன்னோடித் திட்டமாகிய இத்திட்டப் பணிகளை விரைந்து நிறைவேற்றிப் பயனுக்குக் கொண்டு வரவேண்டுமென அதிகாரிகளுக்கு ஆணையிட்டார்.

பாலாறு மற்றும் தாமிரபரணி ஆற்றுப் பகுதிகளில் தொடர்ந்து மணல் எடுத்து வருவதால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இந்த ஆற்றுப் பகுதிகளில் இனிவரும் காலத்தில், இயந்திரங்களைப் பயன்படுத்தி மணல் அள்ளுவதை

முழுமையாக தடைசெய்வதற்கும், கொள்ளிடம் ஆற்றுப் பகுதியில் அதிக அளவில் மணல் படிந்திருப்பதால் அங்கிருந்து மணல் எடுப்பதை அனுமதிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவுறுத்தினார்.

**சென்னை மாநகரில் மழை நீர் வடிகால் அமைக்கும் பணிகள்**

சென்னை மாநகரில் ஜவஹர்லால் நேரு நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின்கீழ் 633 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மழைநீர் தேங்குவதைத் தவிர்ப்பதற்காக நடைபெற்று வரும் வடிகால் அமைக்கும் பணிகளின் முன்னேற்ற நிலைகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்து, வடகிழக்குப் பருவமழை தொடங்கவிருப்பதால், மழைக் காலங்களில் மக்களுக்கு ஏற்படும் சிரமங்களை முற்றிலும் அகற்றுவதற்காக இப்பணிகளை விரைவுபடுத்துமாறு அறிவுறுத்தினார்.

தடுப்பணைகள் கட்டுவதன் மூலம் நிலத்தடி நீரை உயர்த்தும் திட்டப் பணிகள் நடைபெறும் பகுதிகளிலுள்ள மக்களுக்கு இத்திட்டத்தின் பயனை விளக்கி அதன் மூலம் அவர்களின் முழு ஒத்துழைப்போடு பணிகள் நிறைவேற்றப்படுகின்றனவா என்றும், இத்திட்டத்திற்கான வழிகாட்டி நெறிமுறைகளின்படி பணிகள் நடைபெறுகின்றவா என்றும் கேட்டறிந்தார். மண்டலம் வாரியாக திட்டச் செலவினங்கள், திட்டப் பணிகள் முன்னேற்றம் பற்றியும் ஆய்வு செய்தார்.

பரம்பிக்குளம், ஆழியாறு திட்டத்தின் காண்டூர்க் கால்வாய்ச் சீரமைப்புப் பணிகளை மாநில அரசு நிதியிலிருந்து உடனடியாக மேற்கொள்ளுமாறும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவுறுத்தினார்.

**கலைவாணர் அரங்கம் கட்டுவதற்கான பணிகள்**

இந்த ஆய்வின்போது மிகப்பெரிய கட்டடப் பணி களான புதிய சட்டப் பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாகக் கட்டடப் பணி, பெரம்பலூர், சிவகங்கை, தருமபுரி (கட்டம்–2) ஆகிய மாவட்டங்களில் நடைபெற்று வரும் புதிய மருத்துவக் கல்லூரிகளுக்கான கட்டடப் பணிகள், சென்னை எழும்பூர் அரசு மகப்பேறு குழந்தை நல மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றுவரும் அடுக்கு மாடி கட்டடப் பணிகள், செவிலியர் தங்கும் விடுதிகள், நீதி மன்றங்களுக்கான கட்டடங்கள், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் கட்டப்படும் பள்ளி, கல்லூரி விடுதிகள், நபார்டு திட்டம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பள்ளிக் கூடங்களுக்கான கட்டடப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்தும் விரிவாக ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திடுமாறும்;

சென்னை அரசினர் தோட்டத்தில் கலைவாணர் அரங்கம் கட்டுவதற்கான பணிகளை உடனடியாகத் தொடங்கி, விரைவாக முடித்திடுமாறும் அறிவுரைகள் வழங்கினார்.

வெளிச்சந்தையில் சிமெண்ட் விலை அதிகரித்துள்ளதால் வேறு மாநிலங்களிலிருந்து அல்லது மாற்று ஏற்பாடுகள் செய்து நியாயமான விலையில் சிமெண்ட் கொள்முதல் செய்வதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்வது எனவும் முடிவெடுக்கப்பட்டது.

ஆய்வு முடிவில், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர், பொதுப்பணித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி முழுவதையும் செலவிட்டு, திட்டங்களின் பணிகளைத் தரமாகவும், உரிய காலத்திற்குள்ளும் நிறைவேற்றி முடித்திட மாவட்டங்களிலுள்ள அதிகாரிகளுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கி விழிப்புடன் செயல்படுமாறு பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் அனைவருக்கும் அறிவுறுத்தப் பட்டது.

ஆய்வுப் பணிகளைத் தொடங்குவதற்கு முன்பாக, பொதுப்பணித் துறையில் பணியாற்றி, பணிக்காலத்தில் மறைந்த 85 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு 2007ஆம் ஆண்டில் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டதை நினைவுகூர்ந்து, மேலும் 147 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

★ ★ ★

| தெரியுமா? | **புயல், வெள்ளம் மற்றும் வறட்சி போன்ற இயற்கை இடர்ப்பாடுகளால் பாதிக்கப்பபட்ட விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இதுவரை, 944 கோடியே 8 இலட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.** |
|---|---|

# ஏழை, எளிய மக்கள் அதிக அளவில் பயன்பெறும் வகையில் மருத்துவ நலத்திட்டங்கள்



மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மக்கள் நல்வாழ்வுத்துறையின் செயல்பாடுகள் குறித்து 1.10.2010 அன்று ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், தலைமைச் செயலாளர் திருமதி. சு.மாலதி, இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் திரு. வி.கு.சுப்புராஜ், இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. கே. சண்முகம், இ.ஆ.ப., முதலமைச்சரின் செயலாளர் (கண்காணிப்புப் பிரிவு) திரு. கா.அலாவுதீன், இ.ஆ.ப, மாநில நலவாழ்வுச் சங்க இயக்குநர் திருமதி.கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை இயக்குநர் திரு. இரமேஷ் குமார் கண்ணா, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சிறப்புச் செயலாளர் டாக்டர். எஸ்.விஜயகுமார், இ.ஆ.ப., மருத்துவப் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர்.கே.கோபால், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத்துறை இயக்குநர் டாக்டர்.பொற்கை பாண்டியன், மருத்துவம் மற்றும் ஊரக நலத்துறை இயக்குநர் டாக்டர்.என். ராஜா, மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர்.கனகசபை மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

"வருமுன் காப்போம்" திட்டத்தின்கீழ் நடைபெற்று வரும் மருத்துவ முகாம்கள் குறித்து ஆய்வு செய்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மருத்துவ முகாம்களை அதிக அளவில் நடத்தி, கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் பலரும் பயனடைய

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், இத்திட்டம் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே மேலும் வளர்த்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்கப்படும் நிதி உதவி உரிய காலத்தில் பயனாளிகளுக்குக் கிடைக்க களப்பணியாளர்கள் அறிவுறுத்தப்பட வேண்டும் என்றும், போலி மற்றும் காலாவதி மருந்துகளின் விற்பனை அறவே ஒழிக்கப்பட, இத்தகைய செயல்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும்,

இதேபோல் உணவுக் கலப்படத்தையும் தடுக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், கலப்பட உணவுகளைக் கண்டுபிடித்து அவற்றை அழித்து மக்கள் பாதிக்கப்படாத வகையில் காத்திட விழிப்புடன் செயல்பட வேண்டுமென்றும், அரசு மருத்துவமனைகளில் தேவைப்படும் மருந்துகள் போதிய அளவில் இருப்பில் உள்ளனவா என்பதை அடிக்கடி கண்காணித்து, மருந்து இல்லை என்ற நிலை ஏற்படாத வகையில், இருப்பினை உறுதி செய்திட வேண்டுமென்றும், மருத்துவமனைகளுக்கு அரசு அனுமதித்த புதிய மருத்துவச் சாதனங்களை உடனடியாகக் கொள்முதல் செய்து அவற்றினை மக்களின் பயன்பாட்டிற்கு விரைந்து கொண்டு வரவேண்டுமென்றும், அரசு மருத்துவ மனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏற்படும் மருத்துவர் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியிடங்கள் அனைத்தையும் உடனுக்குடன் நிரப்பி, தரமான மருத்துவ சிகிச்சை மக்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்திட வேண்டுமென்றும்,

நகராட்சிப் பகுதிகளில் சுகாதார வசதிகள் போதிய அளவில் கிடைப்பதை உறுதி செய்திட நகர சுகாதார மையங்களைத் தாமதமின்றி உடனடியாக ஏற்படுத்தி, சுகாதார வசதிகள் நகரத்தில் உள்ள குடிசைப்பகுதி வாழ் மக்களுக்கும் கிடைக்கச் செய்திட வேண்டுமென்றும், இதில் எவ்விதத்திலும் சுணக்கம் ஏற்படக்கூடா தென்றும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அவசரகால மருத்துவ ஊர்தி 108 சேவைத் திட்டத்தினை, தேவைப்படும் இடங்களுக்கு விரிவுபடுத்திடும் வகையில் கூடுதலாக 200 ஊர்திகளை விரைந்து கொள்முதல் செய்து, இத்திட்டப் பணிகள் மேலும் செம்மையாக நடைபெற ஆவன செய்திட வேண்டுமென்றும்; பன்றிக் காய்ச்சல் காரணமாக உயிரிழப்புகள் ஏற்படுவதை முற்றிலும் தடுத்திட உரிய தடுப்பு நடவடிக்கைகளை மாநிலம் முழுவதிலும் விரைந்து மேற்கொள்ளுமாறும், பள்ளிச்சிறார் கண்ணொளி காப்போம் திட்டம் கடந்த ஆண்டு செயல்படுத்தப்பட்டதைப் போன்று இந்த ஆண்டிலும் செம்மையாகச் செயல்படுத்தி, தேவைப்படும் மாணவ மாணவியர்க்குக் கண் கண்ணாடிகளை உடனடியாக வழங்கிட வேண்டுமென்றும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

மருத்துவமனைகளிலுள்ள அனைத்து மருத்துவக் கருவிகளும் நன்றாக இயங்குவதற்காகவும், பழுதடையும் கருவிகளை உடனடியாகச் சீரமைப்பதற்கும் சிறப்புக் கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

மாநில அளவில் சிறப்பு ஆய்வுக் குழு ஒன்றை அமைத்து, அனைத்து மருத்துவமனைகளையும் அவ்வப்போது ஆய்வுகள் செய்து, சேவைகள் சிறப்பாக நடைபெறுவதை உறுதி செய்திட துறை உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் ஆணை யிட்டார்.

மலேரியா, டெங்கு போன்ற காய்ச்சலைக் கட்டுப் படுத்தவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாகச் சிகிச்சைகள் அளிக்கவும், துறை போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுப்பதுடன், கொசு ஒழிப்புக்குச் சிறப்பு நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தினார்.


இந்த ஆண்டிற்கானத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் இதுவரை 40 விழுக்காட்டிற்கும் அதிகமாக பயன்படுத்தப்பட்டு திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருவதற்காக தமிழக அரசுக்குக் கிடைத்துள்ள "ஈ – இந்தியா 2010" என்ற விருதினையும், பொதுமக்களுக்கு நன்கு சேவை செய்து வருவதற்காக, கிண்டி, கிங் நோய்த் தடுப்பு மருந்து நிலையத்திற்கு இந்திய வர்த்தகத் தொழில் கூட்டமைப்பின் (FICCI) 2010ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்டுள்ள விருதினையும் பார்வையிட்டு இத்தகைய விருதுகளைத் தொடர்ந்து பெறும் வகையில் மக்கள் நல்வாழ்வுத் துறையின் திட்டப் பணிகள் அனைத்தையும் மேலும் சிறப்பாக நிறைவேற்றித் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்திடுமாறு அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

★ ★ ★

# விவசாயிகளுக்கு தொடர்ந்து இலவச மின்சாரம்

மின்துறை ஆய்வுக் கூட்டத்தில்

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் அறிவிப்பு



மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 5.10.2010 அன்று புனிதஜார்ஜ் கோட்டையில் தமிழகத்தில் மின்சார விநியோகத்தின் தற்போதைய நிலை, உருவாக்கப்பட்டு வரும் புதிய மின் திட்டங்களின் முன்னேற்ற நிலை ஆகியவை குறித்து மாண்புமிகு மின்துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் ஆய்வு செய்தார்.

முதலில், மின்விநியோகத்தில் இழப்பைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார். தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் பல்புகளுக்குப் பதிலாக குழல் விளக்குகளை (CFL-Compact Fluorescent Lamp) உபயோகப்படுத்துவதன் மூலம் மின்சார சேமிப்பு ஏற்படுத்தும் திட்டம் தற்போது கடலூர் மாவட்டத்தில் முதன்முதலில் செயல்படுத்தப்பட்டு வருவதை அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவு படுத்தவேண்டுமென்றும்; பறக்கும் படை மூலமாக மின்சாரத் திருட்டுகளைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

**தரமான பம்ப் செட்டுகளை வழங்கிட தகுந்த நடவடிக்கை!**

விவசாயிகளுக்கு இலவச பம்ப்செட் வழங்கும் திட்டத்தின் தற்போதைய நிலை குறித்து கேட்டறிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இத்திட்டத்தினை விரைந்து செயல்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறும்; தரமான பம்ப் செட்டுகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்கும் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

பம்ப் செட்டுகளில் மீட்டர்கள் பொருத்துவது மின்சாரக் கட்டணம் வசூலிப்பதற்கு என சிலர் பொய்ப் பிரச்சாரம் செய்து வருகின்றனர் என்றும், இதில் எந்தவொரு

உண்மையும் இல்லை என்றும், மீட்டர் பொருத்துவது என்பது, புதிதாக பொருத்தப்படவிருக்கும் பம்ப் செட்டுகளினால் எந்த அளவிற்கு மின்சாரம் சேமிக்கப்படும் என்பதைக் கண்டறிவதற்காக மட்டுமே என்றும், தமிழக அரசு விவசாயிகளுக்கு வழங்கி வரும் இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தில் எந்தவொரு மாற்றமுமில்லை என்றும், இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்றும் மீண்டும் தெளிவுபடுத்துமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

வெளிச்சந்தையிலிருந்து தொடர்ந்து 600 மெகாவாட் மின்சாரம் மாநிலத்தின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு 600 மெகாவாட் மின்சாரத்தினை வெளிச்சந்தையிலிருந்து தொடர்ந்து வாங்குவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் வல்லூர், நெய்வேலியில் மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய மின் திட்டங்களின் மூலமாக, 2011 மார்ச் மாதத்திற்குள் 800 மெகாவாட் மின்சாரமும், 2011–2012இல் வடசென்னை, மேட்டூர், வல்லூர்–2 ஆகியவற்றின் மூலமாகவும், மற்ற புனல் மின் திட்டங்களின் மூலமாகவும் 2,500 மெகாவாட் மின்சாரமும் கிடைப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்.

தற்சமயம் நடைமுறையில் உள்ள மின் விநியோகத்தில் எவ்விதக் குறைபாடுமின்றி மின் விநியோகத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளுமாறும், மேலும் மின் உபயோகிப்பாளர்கள் அளிக்கும் புகார்கள் மீது உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, தலைமைச் செயலாளர் திருமதி.சு.மாலதி, இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. க.சண்முகம், இ.ஆ.ப, எரிசக்தித்துறை முதன்மைச் செயலாளர் திரு. பிடபிள்யு.சி. டேவிதார், இ.ஆ.ப., மின் வாரியத் தலைவர் திரு.சி.பி. சிங் இ.ஆ.ப., மற்றும் மின் வாரிய உயரதிகாரிகள் கலந்து கொண்டனர். ★

## 2011ஆம் ஆண்டிற்குரிய அரசுப் பொது விடுமுறை நாட்கள்

| வ.எண். | விழா | நாள் | கிழமை |
|---|---|---|---|
| 1. | ஆங்கிலப் புத்தாண்டு | 1.1.2011 | சனி |
| 2. | தமிழ்ப்புத்தாண்டு, பொங்கல் திருநாள் | 15.1.2011 | சனி |
| 3. | திருவள்ளுவர் தினம் | 16.1.2011 | ஞாயிறு |
| 4. | உழவர் திருநாள் | 17.1.2011 | திங்கள் |
| 5. | குடியரசு தினம் | 26.1.2011 | புதன் |
| 6. | மிலாதுநபி | 16.2.2011 | புதன் |
| 7. | வங்கி ஆண்டு கணக்கு முடித்தல் (வங்கிகளுக்கு மட்டும்) | 1.4.2011 | வெள்ளி |
| 8. | தெலுங்கு வருடப்பிறப்பு | 4.4.2011 | திங்கள் |
| 9. | டாக்டர் அம்பேத்கர் பிறந்தநாள் | 14.4.2011 | வியாழன் |
| 10. | மகாவீர் ஜெயந்தி | 16.4.2011 | சனி |
| 11. | புனித வெள்ளி | 22.4.2011 | வெள்ளி |
| 12. | மே தினம் | 1.5.2011 | ஞாயிறு |
| 13. | சுதந்திர தினம் | 15.8.2011 | திங்கள் |
| 14. | கிருஷ்ண ஜெயந்தி | 21.8.2011 | ஞாயிறு |
| 15. | ரம்ஜான் | 31.8.2011 | புதன் |
| 16. | விநாயகர் சதுர்த்தி | 1.9.2011 | வியாழன் |
| 17. | வங்கி அரையாண்டுக் கணக்கு முடித்தல் | 30.9.2011 | வெள்ளி |
| 18. | காந்தியடிகள் பிறந்தநாள் | 2.10.2011 | ஞாயிறு |
| 19. | ஆயுத பூஜை | 5.10.2011 | புதன் |
| 20. | விஜயதசமி | 6.10.2011 | வியாழன் |
| 21. | தீபாவளி | 26.10.2011 | புதன் |
| 22. | பக்ரீத் | 7.11.2011 | திங்கள் |
| 23. | மொஹரம் | 6.12.2011 | செவ்வாய் |
| 24. | கிறிஸ்துமஸ் | 25.12.2011 | ஞாயிறு |

# புதிய நியாயவிலைக் கடைகளை அமைக்கும் பணிகளை விரைவுபடுத்த வேண்டும்

**மா**ண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையால் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகளின் முன்னேற்றம், விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிர்க் கடன்களுக்கான நிதிஒதுக்கீடு மற்றும் பொதுவிநியோகத் திட்டத்தின் ஆக்கப் பூர்வமான செயல்பாடுகள் ஆகியவை குறித்து 6.10.2010 அன்று ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வின்போது, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், முதலமைச்சரின் முதன்மைச் செயலர் (கண்காணிப்பு), நிதித்துறை முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மை ஆணையாளர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சேமிப்புக்கிடங்கு நிறுவன மேலாண்மை இயக்குநர், காவல்துறை தலைவர் (குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் குற்றவியல்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வின்போது, விவசாயிகளுக்குப் பயிர்க் கடன்கள் வழங்குவதிலும், நலிவடைந்த கூட்டுறவு கடன் சங்கங்களை உயிர்ப்பித்து இலாபகரமாக இயங்கச் செய்வதிலும் கூட்டுறவுத்துறை ஆற்றிய பணிகளை

## கூட்டுறவு – உணவுத்துறை பணிகள் குறித்த ஆய்வில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தல்

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பாராட்டினார்.

மேலும், மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகள், நகர்ப்புரக் கூட்டுறவு வங்கிக் கிளைகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக்கடன் சங்கங்களை கணினி மயமாக்கும் பணிகளை விரைந்து முடிக்குமாறும்;



நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படும் அரிசி முதலான அத்தியாவசியப் பொருள்களின் தரம் சரியாக உள்ளதா என்பதை அவ்வப்போது ஆய்வு செய்திட வேண்டுமென்றும்; நியாயவிலைக் கடைகளில் பணியாளர்கள் பணிசெய்யும் நிலைமைகள் குறித்து அதிகாரிகள் அடிக்கடி பார்வையிட்டுக் கண்காணிப்பதுடன், பொதுமக்களுக்கு சரியான எடையில் பொருள்கள் வழங்கப்படுவதை உறுதி செய்திட வேண்டுமென்றும்;

அத்தியாவசியப் பொருள்கள் கடத்தப்படுவதை விழிப்புடன் கண்காணித்துத் தடுப்பதுடன் கடத்தலில்

ஈடுபடும் குற்றவாளிகள் மீது தயவு தாட்சண்யமின்றிக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்றும்;

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதற்கேற்ப, குடும்ப அட்டைதாரர்கள் சிரமமின்றி அத்தியாவசியப் பொருள்கள் பெறுவதற்கு ஏதுவாக 1,600 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள நியாயவிலைக் கடைகளைப் பிரித்து புதிய கடைகள் அமைக்கும் நடவடிக்கைகளை விரைந்து மேற்கொண்டு முடித்திடுமாறும்;

புதிய குடும்ப அட்டைகள் கோரி விண்ணப்பித்த இரண்டு மாத காலத்திற்குள் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட வேண்டுமென்றும்; போலி குடும்ப அட்டைகளைக் கண்டறியும் பணிகளில் முனைப்புடன் ஈடுபட்டு அவற்றை நீக்கிட ஆவன செய்யுமாறும்;

விழாக்காலங்கள் நெருங்குவதால், அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படுவதில் எந்தவிதத்திலும் சுணக்கம் ஏற்படாத வகையில், அவற்றின் இருப்புகளைக் கண்காணித்து போதிய அளவில் இருப்பு செய்திடவும், அவை மாநிலத்தின் ஒவ்வொரு நியாய விலைக் கடையிலும் சீராக விநியோகம் செய்யப்படவும் அதிகாரிகள் திட்டமிட்டு விழிப்புடன் செயல்படவேண்டுமென்றும்;

பருப்பு, சமையல் எண்ணெய், கோதுமைப் பொருள்கள், மளிகைப் பொருள்கள் ஆகியவற்றின் வெளிச்சந்தை விலைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் குடும்ப அட்டைதாரர்களுக்கு மலிவு விலையில் பொருள்களை வழங்கி வரும் சிறப்புப் பொது விநியோகத் திட்டம் 30.6.2011 வரை நீட்டிக்கப்பட்டுள்ளதால், பொதுமக்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைவதை அதிகாரிகள் உறுதி செய்திட வேண்டும் என்றும்;

மழைக்காலம் தொடங்கியுள்ளதால் சாகுபடிப் பணிகள் தொய்வின்றி நடைபெறுவதற்கு உதவும் வகையில் பயிர்க் கடன்கள் வழங்குவதையும், இடுபொருள்கள் தாராளமாக வழங்கப்படுவதையும் உறுதி செய்திட வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அதிகாரிகளுக்கு ஆணையிட்டார்.

விவசாயக் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் சிறப்பாகச் செயல்பட்டு விவசாயிகள் பயனடைந்து வருவதால் இந்த ஆண்டில் அமைத்திட அனுமதிக்கப்பட்டுள்ள 10 ஆயிரம் விவசாயக் கூட்டுப்பொறுப்புக் குழுக்களுடன் ஏற்கெனவே அமைக்கப்பட்ட குழுக்களையும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

விவசாய வேலைகளுக்குத் தேவையான தொழிலாளர்கள் கிடைப்பது கடினமாக இருப்பதால், தற்போது 224 தொடக்க வேளாண்மை வங்கிகளில், நவீன விவசாயக் கருவிகளை வாங்கி, விவசாயிகளுக்கு வாடகைக்கு விடும் சேவை மையப் பணிகளை மேலும் 2,000 வங்கிகளுக்கு விரிவுபடுத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

தமிழகத்தில் சொந்தக் கட்டடம் இல்லாமல் செயல்பட்டுவரும் 647 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு சொந்தக் கட்டடங்களைப் படிப்படியாகக் கட்ட நடவடிக்கை மேற்கொள்வதென்றும்;

அதேபோல, நியாயவிலைக் கடைகளுக்கு நகரங்களிலும், கிராமப்புரங்களிலும் உரிய கட்டடங்கள் கட்ட இடங்களைத் தேர்வு செய்து நடவடிக்கை மேற்கொள்வதென்றும்;

நியாயவிலைக் கடைகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்வ தென்றும் முடிவு செய்யப்பட்டது. ★

---

## அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் சர்க்கரைப் பொங்கலுக்கான பொருட்கள் இலவசமாக வழங்கப்படும்


**சட்டப்பேரவையில், 11.11.2010 அன்று 110 விதியின் கீழ், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவிப்பு**

அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் நியாய விலைக் கடைகள் மூலமாக 1.1.2011 முதல் தமிழ்ப் புத்தாண்டுப் பரிசாக சர்க்கரைப் பொங்கலுக்கான பொருட்கள் இலவசமாக வழங்கப்படும் என்ற அறிவிப்பினை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ★

தமிழ்ப் புத்தாண்டு தினமான தைத்திங்கள் முதல் நாள், தமிழகத்திலுள்ள அனைத்துக் குடும்பங்களும் – சர்க்கரைப் பொங்கலிட்டு, புத்தாண்டுத் திருநாளை மகிழ்வோடு கொண்டாடு வதற்கு ஏதுவாக, கடந்த 2009 ஆம் ஆண்டு – தமிழ்ப் புத்தாண்டு பரிசாக பச்சரிசி அரை கிலோ, வெல்லம் அரை கிலோ, பாசிப் பருப்பு 100 கிராம், முந்திரிப் பருப்பு 10 கிராம், உலர்ந்த திராட்சை 5 கிராம், ஏலக்காய் 5 கிராம் ஆகிய பொருட்கள் அடங்கிய பை ஒன்று வழங்க ஆணையிடப்பட்டு, ஏறத்தாழ 70 கோடி ரூபாய் செலவில், அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் அது இலவசமாக வழங்கப்பட்டது.

அதேபோல, வரும் 15.1.2011 தைத்திங்கள் முதல் நாள் கொண்டாடப்படவிருக்கும் தமிழ்ப் புத்தாண்டு தமிழர் திருநாளை தமிழகத்திலுள்ள அனைத்துக் குடும்பங்களும் மிகுந்த மகிழ்ச்சியோடு கொண்டாட

# வளர்ந்து வரும் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றிட புறநகர் துரித இரயில் திட்டம்



13-10-2010 அன்று நடைபெற்ற
தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித்துறை
திட்டப்பணிகள் முன்னேற்றம் குறித்து
மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆய்வு

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறையால் செயலாக்கப்படும் திட்டப் பணிகள் குறித்து 13.10.2010 அன்று புனித ஜார்ஜ் கோட்டையில் ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வின்போது மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர், மாண்புமிகு குடிசைமாற்று வாரியம் மற்றும் இடவசதி கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் (கண்காணிப்பு), நிதித்துறை முதன்மைச் செயலாளர், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் துணைத் தலைவர் – கூடுதல் தலைமைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறைச் செயலாளர், நகர ஊரமைப்புத்துறை இயக்குநர், வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர், வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (முழு கூடுதல் பொறுப்பு), தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் ஆகியோர் உடனிருந்தனர்.

**வளர்ந்து வரும் வீட்டுவசதித் தேவைகள்**

இந்த ஆய்வின்போது, வளர்ந்துவரும் வீட்டு வசதித் தேவைகளைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கையகப்படுத்தித் தன் பொறுப்பில் வைத்துள்ள நிலங்கள் மற்றும் அவற்றைப் பயன்படுத்துவதற்கான திட்டங்களின் நடவடிக்கைகள் குறித்த விவரம், திட்டப் பணிகள், நிலஎடுப்புத் திட்டங்கள், குடியிருப்புகளுக்கும், மனைகளுக்கும் இறுதி விலை நிர்ணயம் செய்து விற்பனைப் பத்திரங்கள் வழங்குதல் ஆகியவை குறித்து ஆய்வு செய்து அவை தொடர்பான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். மேலும், சென்னை பட்டினப்பாக்கத்தில் அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புப் புனரமைப்புத் திட்டம் செயலாக்கப்படுவது குறித்தும் ஆய்வு செய்து, அது தொடர்பாக விரைவு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அலுவலர்களுக்கு அறிவுரை கூறினார்.

**விழிப்புடனும் சமுதாயப் பொறுப்புணர்வுடனும் செயல்பட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்**

சென்னைப் பெருநகரப் பகுதியில் செயலாக்கப்படும் அரசின் இரண்டாம் முழுமைத் திட்டம் – 2026இன் செயலாக்கம், வளர்ச்சி, கட்டுப்பாடு ஆகியவை தொடர்பாக ஆய்வு செய்த மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், பொதுமக்களின் கருத்துகளுக்கேற்ப இத்திட்டத்தை வடிவமைத்துச் செயல்படுத்துவதில் மிகுந்த கவனத்துடனும், விழிப்புடனும் சமுதாயப் பொறுப்புணர்வுடனும் செயல்படுமாறு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். வளர்ந்து வரும் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு, சென்னைப் புறநகர் துரித இரயில் திட்டம், வெளிவட்டச் சாலை, சரக்குந்து நிலையம் ஆகிய திட்டப் பணிகளின் நிலை குறித்தும் அதிகாரிகளைக் கேட்டறிந்து, சென்னை மாநகரப் போக்குவரத்துகளில் நிலவும் நெரிசலை முற்றிலும் நீக்கிட வேண்டும் என்னும் கடமை உணர்வோடு இத்திட்டங்களை விரைந்து செயல்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

**தமிழ்நாடு நகர ஊரமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள்**

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வளர்ச்சி ஆளுமை மாற்றம் (Transferable Development Rights), சிறப்பு வளர்ச்சி ஆளுமை மாற்றம் (Special Transferable Development Rights) ஆகியவற்றின் செயலாக்க நிலையினை ஆய்வு செய்த மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இத்திட்டம் குறித்த விவரங்களை மக்களுக்கும், கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள கட்டுமான மேம்பாட்டாளர்களுக்கும் தெளிவுபடுத்திட வேண்டுமென்றும் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டுள்ளார். நகர ஊரமைப்புத் துறையில் செயலாக்கப்படும் பல்வேறு திட்டங்களின் செயலாக்க நிலை, மலைப்பகுதி பாதுகாப்புக் குழுமத்தின் செயல்பாடுகள் ஆகியவை குறித்தும் ஆய்வு செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீதியரசர் மோகன் குழு பரிந்துரைத்தபடி, தமிழ்நாடு நகர ஊரமைப்புச் சட்டம் 1971இல் திருத்தங்கள் கொண்டு வருவது குறித்து விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு ஆணையிட்டார்.

**திட்டங்களை குறித்த காலத்தில் நிறைவேற்றவேண்டும்**

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களான, ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டம், சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குக் குடியிருப்புகள் கட்டும் திட்டம், ராஜீவ் காந்தி புனரமைப்புத் திட்டம், விரைவு இரயில் போக்குவரத்துத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை நிறைவேற்றும்போது அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாற்று வீடுகள் அமைக்கும் திட்டம், ஆதிதிராவிடருக்கான சிறப்பு நலத் திட்டம் ஆகிய திட்டப் பணிகளின் முன்னேற்றங்கள் குறித்து ஆய்வு செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இத்திட்டங்களை விரைவுபடுத்தி குறித்த காலத்தில் நிறைவேற்றி முடித்து மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

**அரசுக்கு தக்க பரிந்துரைகளை அளிக்க அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு**

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் விற்பனை ஆகாமல் இருக்கும் வீட்டுவசதி வாரியத்தின் மனைகள், வீடுகள் ஆகியவற்றை விற்பனை செய்வதற்குரிய வழிமுறைகளை ஆராய்ந்து, அரசுக்குத் தக்க பரிந்துரைகளை அளிப்பதற்காக அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு ஒன்றை அமைப்பதென்றும், அந்தக் குழு ஒரு மாத காலத்திற்குள் அரசுக்கு அறிக்கையை அனுப்பி வைத்திடக் கேட்டுக் கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

பொதுவாக மத்திய மாநில அரசுகளின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களின் செயலாக்கம் மற்றும் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி, செலவின விவரம், செலவு செய்யப்பட வேண்டிய தொகையின் அளவு ஆகியவற்றை ஆய்வு செய்து, இத்திட்டப் பணிகள் அனைத்தையும் தாமதமின்றி விரைந்து நிறைவேற்றிட அதிகாரிகள் முனைந்து செயல்பட வேண்டுமென்று வலியுறுத்தினார்★

**தெரியுமா?**

**விவசாய பம்ப் செட்டுகளுக்கு ஏற்கெனவே இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தில் 21 இலட்சத்து 98 ஆயிரத்து 790 விவசாயிகள் பயனடைந்துவரும் நிலையில், சுயநிதி அடிப்படையில் மின் இணைப்புப் பெற்றுள்ள 40 ஆயிரம் பம்ப் செட்டுகளுக்கும் இலவச மின்சாரம் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. மேலும், இலவச மின்சாரம் கோரி தற்போது நிலுவையில் உள்ள 2 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை.**

# புறவழிச் சாலைப் பணிகள் - உயர்மட்டச் சாலைப் பணிகளை விரைவுபடுத்த வேண்டும்

## நெடுஞ்சாலை – சிறு துறைமுகங்கள் துறை ஆய்வுக்கூட்டத்தில் அதிகாரிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் உத்தரவு !




**மா**ண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் பல்வேறு அலகுகள் மூலமாக நடைபெறுகின்ற பணிகளை 15.10.2010 அன்று ஆய்வு செய்தார்கள்.

இதில் மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள்துறை அமைச்சர், திரு. வெள்ளக்கோயில் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர், முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் (கண்காணிப்பு), நிதித்துறை முதன்மைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் திட்ட இயக்குநர், நெடுஞ்சாலைத் துறையின் முதன்மை இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளர்கள், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் மாநிலத் துறைமுக அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வின் தொடக்கத்தில், கடந்த நான்கரை ஆண்டுகளில் 12 ஆயிரத்து 84 கோடி ரூபாய்ச் செலவில் 61 ஆயிரத்து 340 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் மேம்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்பட்டதையும், 1,081 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5,048 பாலம் மற்றும் சிறுபாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதையும்; இதன் காரணமாக, 2006இல் இருவழித்தடமாக 4,284 கி.மீ. நீளமே இருந்த மாநில நெடுஞ்சாலைகள், தற்போது இருவழித்தடமாக 9,311 கி.மீ. நீளம் என்ற அளவிற்கு, இருமடங்கிற்கு மேல் அதிகரித்துள்ளதையும் அறிந்த முதல்வர் கலைஞர் அவர்கள் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

### புறவழிச் சாலைப் பணிகளை விரைந்து முடித்திட முதலமைச்சர் அறிவுரை !

300 கோடி ரூபாய் செலவில் நடைபெறுகின்ற ஒரகடம் தொழிற்பூங்கா பகுதியில் அமைக்கப்பட்டு வரும் சாலை மற்றும் மேம்பாலப் பணிகளை விரைந்து நிறைவேற்றுமாறும்; முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு 43 புறவழிச் சாலைப் பணிகள் கடந்த நான்கரை ஆண்டுகளில் முடிக்கப்பட்டுள்ள நிலையில், நடைபெற்று வரும் 35 புறவழிச் சாலைப் பணிகளைக்

குறித்த காலத்திற்கு முன்பாகவே நிறைவேற்றி முடித்திடுமாறும்;

இரயில்வே கடவுகளில் ஏற்படும் விபத்துகளை முற்றிலும் தடுக்கும் நோக்கத்துடன் அனுமதிக்கப்பட்டுள்ள 1,847 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 91 இரயில்வே மேம்பாலம் மற்றும் கீழ்ப்பாலம் அமைக்கின்ற பணிகளில் முடிக்கப்பட்டுள்ள 27 இரயில்வே பாலங்கள் போக, எஞ்சிய பாலங்களின் கட்டுமானப் பணிகளை விரைவில் கட்டி முடித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

தமிழகத்தில், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமாக 6 ஆயிரத்து 49 கோடி ரூபாய் செலவில் 1,939 கிலோ மீட்டர் நீளமுள்ள 31 சாலைப் பணிகள் முடிவடைந்துள்ள நிலையில், 7 ஆயிரத்து 367 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தற்போது நடைபெறும் 852 கிலோ மீட்டர் நீளமுள்ள 14 சாலை மேம்பாட்டுப் பணிகளை விரைந்து முடித்திடவேண்டுமென்றும்;

சென்னை – எண்ணூர் – மணலி சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்காகக் கோரப்பட்டுள்ள புதிய ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நடவடிக்கைகளை உரிய காலத்தில் முடித்து, பணிகளை விரைவாகத் தொடங்கி முடிக்குமாறு அதிகாரிகளுக்கு வலியுறுத்தினார்.

93 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு வரும் கோயம்பேடு பல்வழிப் பாலப்பணிகளை (Grade Separator) அதிவிரைவில் முடித்து, அப்பகுதியில் நிலவும் போக்குவரத்து நெரிசலை நீக்கிட நடவடிக்கை எடுக்குமாறும்;

452 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுவரும் சென்னை புறவழிச் சாலைப் பணிகளையும்; சென்னை துறைமுகம்–மதுரவாயல் சந்திப்பை இணைக்கும் உயர் மட்டச் சாலைத் திட்டத்தின் பணிகளையும் விரைவுபடுத்த வேண்டுமென்றும்;

2 ஆயிரத்து 442 கோடி ரூபாய் செலவில் உலக வங்கிக் கடன் உதவியுடன் செயல்படுத்தப்படும் 32 சாலைப் பணிகளில் முடிவடைந்த 24 பணிகள் போக மீதமுள்ள பணிகளை விரைவில் நிறைவேற்றி முடிக்குமாறும்; கும்பகோணம் புறவழிச் சாலைப்பணி, கீழமணக்குடி, மேலமணக்குடி கிராமங்களில் நடைபெறுகின்ற உயர்மட்ட பாலப்பணிகள் ஆகியவற்றை விரைந்து நிறைவேற்றுமாறும் அறிவுறுத்தினார்.

இராஜீவ் காந்தி தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலையின் எஞ்சிய சாலைப் பணிகளையும்; வேளச்சேரி – தரமணி இணைப்புச் சாலைப் பணிகளையும் விரைவாக முடிக்க வேண்டுமென்றும்; 1,081 கோடி ரூபாய் செலவில் நடைபெறும் சென்னை வெளிவட்டச் சாலையின் இரண்டாம் கட்டத்திற்கான நில எடுப்புப் பணிகளை விரைவாக முடித்திட வேண்டுமென்றும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

**பன்னாட்டு தரச் சான்றிதழ் –**
**கருணை அடிப்படையில் பணி நியமனம்!**

மேலும், நபார்டு வங்கியின் மூலம் 83 கிராமப்புரச் சாலைகள் அமைப்பதற்கு 136 கோடியே 80 இலட்சம் ரூபாய் அளவிலும், 121 பாலங்கள் கட்டுவதற்கு 250 கோடி ரூபாய் அளவிலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகளை விரைவாக முடித்திடுமாறும் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, கோவை, திருச்சி மாநகரங்களில் உள்ள கண்காணிப்பாளர் அலுவலகங்களுக்கும், கோயம்புத்தூர், ஈரோடு, புதுக்கோட்டை ஆகியவற்றில் உள்ள கோட்டப் பொறியாளர் அலுவலகங்களுக்கும் இந்திய தர நிர்ணய குழுவினால் வழங்கப்பட்டுள்ள பன்னாட்டுத் தரச் சான்றிதழ்களை (ISO 9001-2008) மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் நெடுஞ்சாலைத் துறை அலுவலர்களிடம் வழங்கிப் பாராட்டினார்.

மேலும், நெடுஞ்சாலைத் துறையில் பணியில் இருக்கும்போதே இறந்துபோன ஊழியர்களின் வாரிசுதாரர்கள் 43 பேருக்குக் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி நியமனத்திற்கான ஆணைகளையும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

★ ★ ★

# சிறப்புச் சாலைகள் – குடிநீர் வசதி – நகரப் புனரமைப்பு உள்ளிட்ட திட்டப் பணிகள்

# ஊரக வளர்ச்சி – ஊராட்சி – நகராட்சிப் பணிகள் குறித்து

## மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆய்வு



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 18.10.2010 அன்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ஆகிய துறைகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார். இந்த ஆய்வில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், தலைமைச் செயலாளர் திருமதி. சு. மாலதி, இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. க.சண்முகம், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு. க.அசோக் வர்தன் ஷெட்டி இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பணிகளை ஆய்வு செய்த மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 15.8.2010 சுதந்திர தினத்தன்று, நகராட்சி மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புக்களில் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறப்புச் சாலைகள் திட்டம் செயல்படுத்தப்படும் என்று வெளியிடப்பட்ட அறிவிப்பின் மீது, அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் இத்திட்டத்திற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரியது வரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் விரிவாக ஆய்வு செய்து பாராட்டுத் தெரிவித்ததுடன், இந்தச் சிறப்புச் சாலைப் பணிகளைத் தரமான முறையில் நிறைவேற்றி, வேகமாக முடிக்க வேண்டுமென்றும் அறிவுரை வழங்கினார்.

சென்னையின் குடிநீர்த் தேவை மற்றும் வழங்கல் குறித்து ஆய்வு செய்து, பருவமழை மற்றும் கிருஷ்ணா நதி நீர்வரத்துக் காரணமாக எதிர்வரும் 11 மாத காலத்திற்குப் போதுமான அளவு குடிநீர் இருப்பிருப்பதைக் கருத்திற் கொண்டு, அதன்மீது தனிக் கவனம் செலுத்திச் சிறப்பாக நிருவகிக்குமாறும்; நெம்மேலியில் அமைக்கப்பட்டு வரும், தினமும் 10 கோடி லிட்டர் திறன் கொண்ட, கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தினை உரிய திட்டக் காலத்திற்குள் நிறைவேற்றி முடித்திட வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்புரப் புனரமைப்பு இயக்கத்தின்கீழ் நிறைவேற்றிட ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ள 9 ஆயிரத்து 296 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 310 திட்டங்களில் முடிவடைந்த 101 திட்டங்கள் நீங்கலாக, எஞ்சிய திட்டங்களை விரைந்து நிறைவேற்றிப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்குத் தேவைப்படும் மத்திய அரசின் நிதியுதவியை கோரிப் பெறுவதற்கு உரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பித்தார்.

சென்னை மாநகராட்சி மற்றும் சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தில் பெறப்படும் மனுக்களில் மக்கள் கூறும் குறைகளின் மீது 24 மணி நேரத்திற்குள் தக்க நடவடிக்கை எடுத்து முடிக்குமாறு கண்டிப்புடன் அறிவுறுத்தினார்.

சென்னை மாநகராட்சி நடைமுறைப்படுத்தும் திடக்கழிவு மேலாண்மை மற்றும் சாலைச் சீரமைப்புப் பணிகள் குறித்து எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறும்;

சென்னை மாநகராட்சி எல்லையை விரிவாக்கம் செய்யும் பணிகளை ஆய்வு செய்து, விரிவாக்கப்படும் பகுதிகளை எவ்விதச் சிரமமுமின்றி மாநகராட்சியுடன் இணைத்துச் செயல்படுத்துவதற்கு ஏற்ப ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும்;

இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தினுடைய பயன்கள் முழுமையாக அனைத்துக் குடியிருப்புப் பகுதிகளுக்கும் கிடைக்கும் வகையில் உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும்;

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகளின் முன்னேற்றத்தினை ஆய்வு செய்து, குறித்த காலத்திற்குள் திட்டத்தின் அனைத்துப் பணிகளையும் முடித்து மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டு மென்றும்; புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள மேலூர், விருதுநகர், காங்கேயம், வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்;

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் தற்போது நடை முறைப்படுத்தப்படும் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளின் முன்னேற்றம் திருப்திகரமாக இல்லாததால், இனிவரும் காலங்களில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை வரும் நகரங்களில் மட்டும் இத் திட்டத்தினைச் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

தஞ்சைப் பெரிய கோயிலின் 1,000ஆவது ஆண்டு விழாவினையொட்டி, தஞ்சாவூர் நகராட்சிப் பகுதிகள் மேம்பாட்டிற்காக அறிவிக்கப்பட்ட உள் கட்டமைப்புப் பணிகளில் முடிக்கப்பட்ட பணிகள் நீங்கலாக, இதர கட்டமைப்புப் பணிகளையும் குறித்த காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டுமென அதிகாரிகளுக்கு ஆணையிட்டார்.

அனைத்துப் பேரூராட்சிகளிலும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடும் அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் இருப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்து, மேலும் இத்திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்திட அறிவுரைகள் வழங்கினார்.

முடிவடையும் நிலையிலுள்ள அடையாறு பூங்கா பணிகளை வரும் தமிழ்ப் புத்தாண்டு நாளன்று பொது மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை குறித்த ஆய்வினை மேற்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தமிழக அரசின் புரட்சிகரமான கலைஞர் வீடு வழங்கும் திட்ட முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்த மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இத்திட்டப் பணிகளில் ஒவ்வொரு அதிகாரியும் சிறப்புக் கவனம் செலுத்தி வீடுகள் தரமானதாகவும், விரைவாகவும் கட்டப்படுவதை உறுதி செய்து, பயனாளிகள் வசம் அவை ஒப்படைக்கப்பட வேண்டுமென உத்தரவிட்டார். மேலும், கட்டுமானப் பொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்திப் பயனாளிகளுக்குப் பாதிப்பு ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தினார். பயனாளிகளுக்கான பட்டியல் தொகை வீடுகளின் முன்னேற்றத்திற்கேற்றவாறு உடனுக்குடன் வழங்கப்பட வேண்டுமெனவும், அதிகாரிகள் இதனைத் தொடர்ந்து கண்காணித்து வருவது அவசியம் என்றும் அறிவுறுத்தினார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் தொழிலாளர்கள் அனைவருக்கும் ஊதியம் குறித்த காலக்கெடுவான ஒரு வாரகாலத்திற்குள் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்வதோடு; பணிகள் தரமாக நிறைவேற்றப்படுவதைக் கண்காணிக்குமாறும் உத்தரவிட்டார். மேலும், விவசாயப் பணிகள் பாதிக்கப்படாத வகையில் திட்டத்தைச் செயல்படுத்து மாறும் அறிவுறுத்தினார்.

அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டப் பணிகள் அனைத்தையும் ஜனவரி மாத இறுதிக்குள் முடித்திட வேண்டும் எனவும், ஏற்கெனவே உருவாக்கப்பட்ட கட்டடங்களை முறையாகப் பராமரித்து வர வேண்டும் எனவும், நூலகங்களைப் பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்திடும் வண்ணம் போதிய அளவில் நூலகர்களைப் பணியில் அமர்த்திட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

2009-2010ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு முன்னேற்றத்திலுள்ள 15 சமத்துவபுரங்களுக்கான வீடுகளை நவம்பர் மாதத்திற்குள் கட்டி முடித்து உடனடியாகப் பயனாளிகள் வசம் ஒப்படைத்திட வேண்டும் எனவும், 2010-2011 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டுள்ள 36 சமத்துவபுரங்களும் பிப்ரவரி மாதத்திற்குள் முழுமையாக முடிக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

பாரதப் பிரதமர் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், நபார்டு சாலைப் பணிகள் திட்டம் போன்ற திட்டங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சாலைப் பணிகளைத் தரமாக நிறைவேற்றி முடித்திட விரைவு படுத்திட வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.


சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், ஊரக உள்கட்டமைப்புகள் திட்டம், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டம் போன்ற

திட்டங்களின் மூலம் எடுக்கப்பட்ட அனைத்து உட்கட்டமைப்பு தொடர்பான பணிகளையும் முடித்து விரைவாகப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரவேண்டும் எனவும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அறிவுறுத்தினார்.

ராஜீவ்காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் திட்ட மிடப்பட்ட 21 ஆயிரத்து 386 வீடுகளில் கட்டி முடிக்கப்பட்ட 16 ஆயிரத்து 869 வீடுகளுடன், எஞ்சிய 4 ஆயிரத்து 517 வீடுகளையும் விரைவாக முடித்து பயனாளிகளிடம் ஒப்படைக்குமாறும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் அவசர கால மறுகட்டமைப்புத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ள 15 ஆயிரத்து 56 வீடுகளையும், திட்ட காலத்திற்கு முன் பாகவே முடித்துப் பயனாளிகளுக்கு ஒப்படைத்திடும் வகையில் பணிகளை முடுக்கிவிடுமாறும் உத்தரவிட்டார்.

மகளிர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்த மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர், சுயஉதவிக் குழுவினருக்கு வழங்கப்பட வேண்டிய சுழல் நிதி மற்றும் பொருளாதாரக் கடனுதவிகளை டிசம்பர் மாதத்திற்குள்ளாகவே வழங்கிட விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டார். குறிப்பாக, மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு சுயஉதவிக் குழுக்களை அமைப்பதிலும், அவர்களுக்கான சுழல்நிதி மற்றும் பொருளாதாரக் கடன் ஆகியவற்றை விரைந்து பெற்றுத்தருவதோடு, அரசின் பிற நலத்திட்ட உதவிகள் அவர்களுக்கு கிடைப்பதற்கும் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமெனவும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டார்.

இந்த ஆய்விற்கு முன்னதாக, டுபிட்கோ நிறுவனத்தின் சார்பில் அதன் நிகர லாபத்தில் ஆதாய பங்குத் தொகையாக ஒரு கோடியே 86 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். ★





மாண்புமிகு

துணை முதலமைச்சர்

**திரு. மு.க.ஸ்டாலின்**

அவர்கள்,

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

(23.10.2010)

# 2 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கும் திட்டப்பணிகளை விரைந்து நிறைவேற்றிட

## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவுரை



மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழகத்தில் வேளாண்துறை செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்த ஆய்வினை வேளாண்துறை அமைச்சர், செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் முன்னிலையில் 19.10.2010 அன்று ஆய்வு செய்தார்.

உணவு உற்பத்திக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்துவரும் இந்த அரசு, கடந்த 5 ஆண்டு காலத்தில் 7 ஆயிரத்து 437 கோடியே 22 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, 304 இலட்சம் மெட்ரிக் டன் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது. தொடர்ந்து உணவு உற்பத்தியைப் பெருக்கிடத் தேவையான இடுபொருட்களான விதை, உரம், பூச்சி மருந்துகள் விவசாயிகளுக்குத் தங்கு தடையில்லாமல் கிடைப்பதற்கேற்ப இப்பொருள்களின் இருப்பினைக் கண்காணித்து சீராக விநியோகம் செய்திட அதிகாரிகள் முனைப்புடன் செயல்பட வேண்டும் என்றும்,

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகரிக்க ஊக்கமளிக்க வேண்டும்;

''இராஜராஜன் 1000'' தொழில் நுட்பத்தைக் கடைப்பிடித்தால் எக்டேருக்கு சராசரியாக 7,000 கிலோ முதல் 8,000 கிலோ வரை அரிசி உற்பத்தி கிடைக்கும் என்பதால், இத்தொழில் நுட்பத்தைக் கடைப்பிடிப்பதற்கு இதுவரை வழங்கப்பட்டுள்ள 2.43 இலட்சம் மார்க்கர்கள், 3.63 இலட்சம் கோனாகளை எடுக்கும் கருவிகள் ஆகியவற்றுடன்; இக் கருவிகள் மேலும் தேவைப்படும் விவசாயிகளுக்கு உடனடியாக வழங்கிட ஆவன செய்திட வேண்டு மென்றும் முதல்வர் கலைஞர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்க வேண்டுமென்றும்;

துல்லிய பண்ணைப் பயிர்த்திட்டம் மேலும் பல மாவட்டங்களுக்கு விரிவுபடுத்திட வேண்டுமென்றும்;

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐவகை மரபணுப் பூங்காக்கள் அந்தந்த நிலப் பகுதிகளுக்குரிய அரிய வகைத் தாவரங்களைப் பாதுகாப்பதுடன், அந்தந்த பகுதி விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும் அமைக்கப்பட வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவுறுத்தினார்.

### ஊக்கமுடன் செயல்பட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்

அரசு தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்துள்ளதன் பயனாக, 2006இல் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி 141 இலட்சம் மெட்ரிக் டன் என்பது தற்போது 179 இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு உயர்ந்துள்ளது என்பதையும் அதிகாரிகள் வாயிலாக அறிந்த மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்த உற்பத்தி மேலும் அதிகரிக்கப்பட ஊக்கமுடன் செயல்படுமாறு அவர்களுக்கு அறிவுறுத்தினார்.

பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் வெள்ளம் மற்றும் வறட்சியால் பயிர் பாதிக்கப்பட்ட 8 இலட்சத்து 61 ஆயிரத்து 822 விவசாயிகளுக்கு இதுவரை 944 கோடியே 8 இலட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையாகவும் வழங்கப்பட்டுள்ள விவரங்களைக் கேட்டறிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலும் அதிக எண்ணிக்கையில் விவசாயிகள் பயன்பெறும் வகை யில் இத்திட்டத்தினை விரிவுபடுத்திட உடனடியாக நடவடிக்கைகளை எடுத்திடுமாறு அறிவுறுத்தினார்.

வேளாண் சாகுபடியில் தொழிலாளர் பற்றாக்குறையை ஈடு செய்ய வேளாண் இயந்திரங்கள் வாங்க விரும்பும் விவசாயிகளுக்கு உடனடியாக மானியத்துடன் கடனுதவி கிடைத்திட ஆவன செய்திட வேண்டுமென்றும்;



**புதிதாக அமைக்கப்படும் உழவர் சந்தைகள்**

உழவர் சந்தைகள் விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் பெரும்பயன் அளித்து வருவதால் ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ள 153 உழவர் சந்தைகளுடன், புதிதாக அமைக்கப்பட்டுவரும் 25 உழவர் சந்தைகளையும் விரைவில் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

நாளொன்றுக்கு 15 மெட்ரிக் டன்னுக்கு மேலாகக் காய்கறிகள் வரக்கூடிய 22 உழவர் சந்தைகளில் 2 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன கிட்டங்கி வசதிகள் 1 கோடியே 33 இலட்சம் ரூபாய்ச் செலவில் செய்து கொடுக்கப்பட்டுள்ளதற்கும்;

திருநெல்வேலி மாவட்டம், காவல் கிணற்றில் 1 கோடியே 63 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய்ச் செலவில் மலர் ஏல மையம் அமைக்கப்பட்டுள்ளதற்கும் அதிகாரிகளைப் பாராட்டிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இவை விவசாயிகளுக்கு முழுமையாகப் பயனளிக்கும் வகையில் பழுதின்றி முறையாகச் செயல்படுகின்றனவா என்பதனை அடிக்கடி கண்காணித்துச் செயல்படுத்திட வேண்டும் என்றும்;

ஒடைப்பட்டியில் திராட்சைக்கும், கிருஷ்ணகிரியில் மாங்கனிக்கும், மேச்சேரி மற்றும் பாலக்கோட்டில் தக்காளிக்கும், பொங்கலூரில் வெங்காயத்திற்கும் தலா 1 கோடி ரூபாய் செலவிலும், பட்டுக்கோட்டையில் தேங்காய்க்கென 4 கோடி ரூபாய்ச் செலவிலும் நடைபெற்றுவரும் வணிக வளாகக் கட்டுமானப் பணிகளையும்;

திருச்சி, மோகனூர், திருவைகுண்டம், சின்னமனூர் ஆகிய இடங்களில் தலா 50 இலட்சம் ரூபாய்ச் செலவில் அமைக்கப்பட்டு வரும் வாழைக் காய்களைப் பழுக்க வைக்கும் கூடங்களின் கட்டுமானப் பணிகளையும் விரைவில் முடித்து அவற்றைச் செயல்பாட்டுக்குக் கொண்டுவர அதிகாரிகள் முனைப்புடன் செயல்பட வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

**விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயர பாடுபட வேண்டும்**

இந்த அரசு விவசாய பம்ப் செட்டுகளுக்கு ஏற்கெனவே இலவச மின்சாரம் வழங்கிய திட்டத்தில் 21 இலட்சத்து 98 ஆயிரத்து 790 விவசாயிகள் பயனடைந்துவரும் நிலையில், சுயநிதி அடிப்படையில் மின் இணைப்புப் பெற்றுள்ள 40 ஆயிரம் பம்ப் செட்டுகளுக்கு ஆண்டுதோறும் இலவச மின்சாரம் வழங்கப்படுவதையும், இலவச மின்சாரம் கோரி தற்போது நிலுவையில் உள்ள 2 இலட்சம் விவசாயிகளுக்கும் இலவச மின் இணைப்பு வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளதையும் நினைவு கூர்ந்த மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இத்திட்டப் பணிகளைச் சுணக்கம் இல்லாமல் உடனுக்குடன் நிறைவேற்றி விவசாயப் பணிகள் தொய்வின்றி நடைபெறவும், விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயரவும் மிகுந்த பொறுப்போடு பணியாற்றிட வேண்டுமென அதிகாரிகளுக்கு ஆணைகள் பிறப்பித்தார்.

இந்த ஆய்வின் தொடக்கத்தில், கேரள மாநிலத்தில் உரித்த தேங்காய் கொள்முதல் செய்வதில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நடைமுறைகள் குறித்து அறிந்து வந்து அரசுக்கு அறிக்கை தர அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள் வழங்கினார். ✶

# அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழகம் முக்கிய இடமாகப் பரிணமித்துள்ளது

சென்னைக்கு அருகே உள்ள ஓரகடத்தில் புதியதாக அமைந்துள்ள
ரீட்டோ நிட்டோகு ஆட்டோமொபைல் தொழிற்சாலையை
06.10.2010 அன்று திறந்து வைத்து
மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
ஆற்றிய உரை.



இந்த இனிய விழாவில் பங்கேற்று, ரீட்டோ நிட்டோகு ஆட்டோமொபைல் தொழிற்சாலையைத் திறந்து வைப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இந்திய ஆட்டோமொபைல் தொழில் வளர்ச்சியில் இந்த நிறுவனமும் ஒரு முன்னோடியாக இருந்து வெற்றிகரமாக செயல்படும் என்பதில் எனக்கு எவ்விதமான சந்தேகமும் இல்லை.

இங்கே வரவேற்புரையாற்றிய ரால்ப் ருத்னர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், நான் அண்மையில்தான் அந்நிய தொழில் முதலீட்டை ஈர்ப்பதற்காக சீனா மற்றும் கொரிய நாடுகளுக்குச் சென்றுவிட்டு திரும்பியுள்ளேன்.

நான் சென்ற இடங்களிலெல்லாம் எனக்கு கிடைத்த வரவேற்பும், இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் தொழில் முதலீடு செய்ய வேண்டும் என்கின்ற அவர்களது தீவிர ஆர்வமும் குறைத்து மதிப்பிட முடியாது.

வளர்ந்த நாடுகளில் பொருளாதார வீழ்ச்சி தொடர்ந்து இருந்து வரும் நிலையில், இந்தியப் பொருளாதார வளர்ச்சி மட்டும் அதிகரித்து வருவதன் காரணமாக, இந்தியாவில் வெளிநாடுகளின் முதலீடுகள் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

திறம்பட செயல்படும் எங்கள் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையில் தமிழக அரசு, இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டு, வெளிநாடுகளின் அந்நிய முதலீடுகளை அதிக அளவில் ஈர்ப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டிவருகிறது.

இன்றைக்கு அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழகம் முக்கிய இடமாக பரிணமித்துள்ளது. சுயேச்சையாக செயல்பட்டு வரும் பல்வேறு ஆய்வு மையங்கள், தமிழகத்தை அதிக முதலீடுகளை ஈர்க்கும் மாநிலமாக மதிப்பிட்டுள்ளன. எனவே, அந்நிய முதலீடுகளை ஈர்க்கின்ற பெரிய மாநிலமாக தமிழகம் விளங்குகிறது என்பதில் எவ்விதமான ஐயமுமில்லை.

இந்தியாவில் அந்நிய முதலீடுகளை பெறுவதில் மூன்று மாநிலங்களில் ஒன்றாக தொடர்ந்து தமிழகம் இருந்து வருகிறது. தமிழகத்தில் பொருளாதாரமானது பல வகையாக அதிகரித்துள்ளது. ஜவுளி, தோல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்னணு வன்பொருள் உள்ளிட்ட தொழில்களில் நாங்கள் மிகவும் வலுவாக உள்ளோம்.

ஆட்டோமொபைல் தொழிற்சாலையிலும் நாங்கள் தலைமை இடத்தில் முன்னணியில் இருக்கின்றோம். தமிழகத்தின் ஆட்டோ மொபைல் தொழில்களின் உற்பத்தி மூலம் மட்டும் ஆண்டு தோறும் 350 கோடி அமெரிக்க டாலர் கிடைப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவின் ஒட்டுமொத்த உற்பத்தியின் மதிப்பில் இது 25 சதவிகிதமாகும். இந்திய உற்பத்தியில் 35 சதவிகித பங்கை தமிழகத்தின் ஆட்டோமொபைல் பிரிவு பெற்றுள்ளது.

இங்கே ரால்ப் ருத்னர் அவர்கள் இந்த மாநிலத்தைப் பற்றியும் நமது அரசாங்கத்தைப் பற்றியும் மிகச் சிறந்த முறையில் பேசியதைக் கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். பல உலகளாவிய நிறுவனங்கள் தமிழகத்தை தங்களது தொழிலை தொடங்குவதற்கு சிறந்த இடமாக எப்போதும் கருதி வருவதில் எவ்வித ஆச்சரியமுமில்லை. தமிழகத்தில் அதற்கான வாய்ப்புகள் மிகவும் அதிகமாகவே உள்ளன.

இன்றைக்கு இந்தியாவில் அதிக அளவில் வாகனங்களை உற்பத்தி செய்து அவைகளை ஏற்றுமதி செய்வதிலும் தமிழகம் முன்னணி மாநிலமாக பரிணமித்து வருகிறது. ஆண்டு தோறும் 12 இலட்சத்து 80 ஆயிரம் கார்களையும், 3 இலட்சத்து 50 ஆயிரம் வர்த்தக வாகனங்களையும் தயாரிக்கும் திறன் கொண்டதாக சென்னை திகழ்கிறது. அதிக அளவிலான வாகனங்களை தயாரிப்பதில் பெரியதோர் மையமாக தற்போது சென்னை வளர்ந்து வருகிறது.

அடுத்த 25 ஆண்டுகளில், அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் தற்போதுள்ள நிலைமாறி அதிக அளவிலான விற்பனை இருக்க வாய்ப்புள்ளது. தொழிற்சாலையில் விற்பனையானது 69 சதவிகிதமாகவும், வாகனப்பதிவுகள் 87 சதவிகிதமாகவும் இருக்கும். தொழிற்சாலை வரலாற்றில் இல்லாத அளவிற்கு அதிக அளவிலான மோட்டார் வாகனங்களின் விற்பனை இந்த கால கட்டங்களில் இருக்கும்.

கடந்த 2004ஆம் ஆண்டு இந்தியாவில் 10 இலட்சம் வாகனங்கள் விற்பனையானதையும், ஆண்டுதோறும் மொத்த உற்பத்தியானது 6 சதவிகிதம் அதிகரித்து வருவதையும் கணக்கிட்டுப் பார்த்து, இந்தியாவின் வாகன விற்பனையானது தற்போதைக்கு 2 கோடியாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. அடுத்த 25 ஆண்டுகளில் இந்தியாவில் வாகனங்களின் சொந்தக்காரர்கள் எண்ணிக்கையானது (தற்போதுள்ள 8 என்கிற நிலையிலிருந்து 150ஆக அதிகரிக்கும்) பல மடங்கு அதிகரிக்க வாய்ப்புள்ளது.

வாகனச் சந்தை வளர்ந்து வரும் இந்த நிலையில் நாங்கள் எங்களது வளர்ச்சியை நிலைநிறுத்திக் கொள்வதில் மாத்திரமின்றி, எங்களது பங்கினை தொடர்ந்து அதிகரிக்கவும் நாங்கள் உறுதி மேற்கொண்டுள்ளோம். அதற்காக நாங்கள் சீரிய கொள்கை ஒன்றை – ஒருங்கிணைந்த ஆட்டோ மொபைல் திட்டங்களுக்காக வகுத்துள்ளோம். அதன் மூலம் 4 ஆயிரம் கோடிக்கு மேல் முதலீடு செய்யும் தொழில் முதலீட்டாளர்களுக்கு, அவர்களைக் கவரும் வகையில் சில சலுகைகளை வழங்குகிறோம். ஆட்டோ மொபைல் தொழில்களுக்கு என குறிப்பிட்ட கொள்கை ஒன்றையும் விரைவில் கொண்டு வர இருக்கின்றோம்.

ரீட்டோ நிட்டோகு போன்ற தொழிற்சாலைகள் சிறந்த முறையில் இயங்குவதற்கு மட்டுமின்றி, அவைகள் தங்களது உற்பத்தியை பன்மடங்கு பெருக்கவும் சீரிய முறையில் செயல்படவும் நாங்கள் இது போன்று செயல்பட்டு வருகின்றோம். இத்தொழிற்சாலையை விரிவுபடுத்தி பலவகையில் உற்பத்தியைப் பெருக்குவதில் ரால்ப் ஏற்கெனவே திட்டமிட்டபடி செயல்படுவார் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். எங்களது அரசாங்கத்தை நம்பி நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் அனைத்திற்கும் நாங்கள் உதவிகரமாக இருப்போம் என்று நான் உறுதி கூற விரும்புகின்றேன்.

நிறைவாக, இந்த இனிய விழாவிற்கு என்னை அழைத்து, இந்த தொழிற்சாலையைத் திறந்து வைக்க கேட்டுக்கொண்டதற்காக ரால்ப் ருத்னர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நான் நன்றி கூறிக் கொள்கின்றேன். இந்த தொழிற்சாலை நல்ல முறையில் சிறந்து விளங்க என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

★ ★ ★

**தெ ரி யு மா ?**

**தமிழக அரசின் ஒருகால பூசைத் திட்டத்தின் கீழ், திருக்கோயில்களில் தொண்டு செய்துவரும் 10 ஆயிரம் அர்ச்சகர்கள், பூசாரிகளுக்கு 2 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவில் இலவச மிதிவண்டிகள் வழங்கப்படுகிறது.**

# உலக வெப்பமயமாதலைத் தடுப்பதில் தமிழகம் முதல் மாநிலமாகத் திகழ்கிறது

விழிப்புணர்வு இயக்கத்தை தொடங்கி வைத்து
மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
ஆற்றிய உரை.(10.10.2010)





உலக வெப்பமயமாதலைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் உங்களுடன் சேர்ந்து நான் பங்குகொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வாய்ப்பை எனக்கு வழங்கிய எக்ஸ்னோரா அமைப்பின் நிர்மல் அவர்களுக்கும், விழிப்புணர்வு இயக்கத்தின் நிருவாகிகளுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலக வெப்பமயமாதலைத் தடுக்க தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. காடுவளர்ப்புத் திட்டத்தில் தமிழகம் இந்தியாவிலேயே முன்னிலை வகிக்கிறது. தமிழகஅரசு மாசுக்களை கட்டுப்படுத்துவதிலும் சிறப்பாகப் பணியாற்றிவருகிறது. உலக வெப்பமயமாதலைத் தடுப்பதில் முதல் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. தமிழக அரசிற்கு எக்ஸ்னோரா போன்ற அமைப்புகள் பெரிய உந்துசக்தியாக திகழ்கிறது என்று சொன்னால் மிகையாகாது. இது போன்ற பிரச்சாரங்கள் மூலம் மக்களிடையே உலக வெப்பமயமாதலைத் தடுக்கவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும் கடந்த 2008ஆம் ஆண்டு 8ஆவது மாதம் 8ஆம் தேதி 8 மணிக்கு இதேபோன்று விளக்குகள் அனைத்தும் தமிழ்நாட்டில் பொதுமக்கள் அனைவராலும்

அணைக்கப்பட்டது. அந்த நிகழ்ச்சியையும் தொடங்கிவைத்தது நான்தான்.

அதேபோன்று கடந்த ஆண்டு 9ஆம் மாதம் 9ஆம் தேதி இரவு 9 மணிக்கு 9 நிமிடங்கள் மக்கள் அனைவரும் விளக்குகளை அணைத்து ஆதரவு அளித்தனர். அந்த நிகழ்ச்சியையும் நான்தான் தொடங்கி வைத்தேன். எக்ஸ்னோரா அமைப்பையும் நான்தான் தொடங்கி வைத்தேன். இன்று 10.10.10ஆம் தேதி, இரவு 10 மணிக்கு 10 நிமிடம் விளக்கை அணைக்கும் நிகழ்ச்சியையும் நான்தான் தொடங்கி வைத்திருக்கின்றேன். அடுத்த வருடமும் நான்தான் தொடங்கி வைப்பேன் என்று உறுதி கூறுகிறேன்.

இங்கு பேசியவர்கள் கூட நான் 6ஆம் தேதி தான் வெளிநாட்டில் இருந்து வந்தேன். 10ஆம் தேதி இந்நிகழ்ச்சிக்கு தேதி கேட்டபோது இரவு 10 மணி ஆனாலும், உடனே இந்த நிகழ்ச்சிக்கு ஒப்புக்கொண்டேன் என்று கூறினார்கள். இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கு நீங்கள் அழைத்தாலும், அழைக்காவிட்டாலும், நான் நிச்சயம் வருவேன். மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதை நான் எனது கடமையாக கருதுகிறேன். நான் நேற்றும் அதற்கு முன்தினமும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்த பொருட்களை விற்பனை செய்யும் நவராத்திரி கண்காட்சியினை திறந்து வைத்தேன். அந்த கண்காட்சியிலிருந்து 10 மெழுகுவர்த்திகளை எனது வீட்டு உபயோகத்திற்காக வாங்கினேன். ஏனென்றால் இன்று இரவு 10 மணிக்கு எனது வீட்டிலும் விளக்குகளை அணைத்து விட்டு, மெழுகுவர்த்திகளை பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டுதான் இந்நிகழ்ச்சிக்கு வந்துள்ளேன்.

இதுபோன்ற நிகழ்ச்சிகளால்தான் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படும். நீங்கள் எல்லாம் இந்த விழிப்புணர்வைப் பெற்று, உங்கள் வீட்டில் உள்ளவர்களுக்கும், நண்பர்களுக்கும், மற்றவர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று உங்களை எல்லாம் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

விழாவில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதி மொழியினை வாசிக்க தொடர்ந்து அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். உறுதி மொழி வாசகங்கள் பின்வருமாறு "உலகம் வெப்பமயமாதல் என்ற பிரச்சினைகளின் விளைவுகளை உணர்ந்து இவ்வுறுதிமொழியை ஏற்கிறேன். உலகம் வெப்பமயமாதலைத் தடுக்க அனைத்து முயற்சிகளையும் மேற் கொள்வேன் என்று உறுதி அளிக்கிறேன். இதற்காக செய்ய வேண்டிய அனைத்தையும் செய்வேன். செய்யக் கூடாதவற்றை எவற்றையும் செய்யமாட்டேன் என்றும் உறுதி அளிக்கிறேன்."

இந்நிகழ்ச்சியில் மேயர் மா.சுப்பிரமணியன், அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தர் மன்னர் ஜவகர், மார்க் நிறுவன மேலாண்மை இயக்குநர் ஜி.ஆர்.கே.ரெட்டி, எக்ஸ்னோரா அமைப்பின் நிறுவனர் திரு.நிர்மல், தலைவர் திருமதி. சுலோச்சனா மற்றும் அண்ணா பல்கலைக்கழக மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர். ★




மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், பல்லாவரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ரூ.55 கோடி மதிப்பில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலத்தைத் திறந்துவைத்தார். உடன் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர். (29.10.2010)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள், அனைத்துச் சமுதாயத்தைச் சேர்ந்த 11ஆம் வகுப்பில் பயிலும் மாணவ– மாணவியர்க்கு இலவச மிதிவண்டி வழங்கும் திட்டத்தை தொடங்கிவைத்தார். உடன் அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர். (06–10–2010)



மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள், இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் கிராமத்தில், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் குருபூஜையில் பங்கேற்று மலர் தூவி மரியாதை செலுத்தினார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் ஆகியோர் உடன் உள்ளார்கள். (30.10.2010)

# 10 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல்

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவிப்பு**

2006 சட்டமன்றத் தேர்தலையொட்டி தி.மு.கழகம் அளித்த தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வண்ணம் இதுவரை ஐந்து கட்டங்களில் 3,492 கோடியே 72 இலட்சம் ரூபாய்ச் செலவில் 1 கோடியே 52 இலட்சத்து 80 ஆயிரம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு; 3,396 கோடியே 58 இலட்சம் ரூபாய்ச் செலவில் 1 கோடியே 40 இலட்சத்து 84 ஆயிரத்து 922 குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சிய வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

இந்நிலையில், சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்கள் மாவட்டங்களுக்கு கூடுதல் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் தேவைப்படுவதாகக் கோரிக்கைகள் அளித்துள்ளதைத் தொடர்ந்து, அந்தக் கோரிக்கைகள் குறித்து முடிவு செய்திட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையிலான சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவின் கூட்டம் 7.10.2010 அன்று, சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்றது.

இதில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் திருமதி யசோதா (காங்கிரஸ்), வை.சிவபுண்ணியம் (இந்திய கம்யூனிஸ்ட்), எச்.அப்துல் பாசித், (இந்திய யூனியன் முஸ்லீம் லீக்), மு.ஜெகன் மூர்த்தி (புரட்சி பாரதம்), து.ரவிக்குமார் (விடுதலை சிறுத்தைகள்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், ஐந்தாம் கட்டமாக நடப்பு நிதியாண்டில் 40 இலட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்திட பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படி, தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் அடிப்படையிலேயே மறுஒப்பந்தப்புள்ளி கோராமல் 25 சதவீதம் வரை, அதாவது 10 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கூடுதலாக கொள்முதல் செய்வது என்றும், அவற்றின் விநியோகப் பணிகளை 2011 ஜனவரி மாத இறுதிக்குள் பூர்த்தி செய்திட வேண்டுமென்றும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

# அரசுப் புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி குடியிருப்போரின் மனைகளை வரைமுறைப்படுத்தும் திட்டம் மேலும் ஓராண்டு நீட்டிப்பு

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் அறிவிப்பு

அரசுப் புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகள் கட்டிக் குடியிருப்போருக்கு அந்நிலங்கள் அரசின் உபயோகத்திற்குத் தேவையில்லையெனில் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அக்குடியிருப்புகளைப் புலத்தணிக்கை செய்து உள்ளாட்சி அமைப்புகளின் தீர்மானங்களைப் பெற்று வீட்டுமனைப்பட்டா வழங்கி வரன்முறைப்படுத்திட 30.12.2006 அன்று ஆணையிட்ட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இந்தச் சிறப்புத் திட்டத்தின்கீழ் இலவச வீட்டுமனை பெறுவதற்கான வருமான வரம்பினைப் பின்னர் ரத்து செய்ததுடன், ஐந்தாண்டுகளுக்கு மேல் வீடுகள் கட்டிக் குடியிருப்பவர்களுக்கும் இத்திட்டம் பொருந்துமெனவும் ஆணையிட்டார்கள்.

**இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கல்**

இத்திட்டத்தின் கீழ், கடந்த நான்காண்டுகளில் 2 இலட்சத்து 27 ஆயிரத்து 595 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மற்ற திட்டங்களில் வழங்கப்பட்டுள்ள 5 இலட்சத்து 29 ஆயிரத்து 307 இலவச வீட்டுமனைப் பட்டாக்களுடன் இதுவரை மொத்தம் 7 இலட்சத்து 56 ஆயிரத்து 902 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், அதிக அளவில் பயனாளிகள் பயனடைய வேண்டும் என்பதற்காக மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப் படுத்திடவும் ஆணையிடப்பட்டு, 30.9.2010 வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் விடுபட்டுள்ள ஏழை, எளிய மக்கள் பயன் அடையும் வகையில், இத்திட்டத்தினை மேலும் ஓராண்டு காலத்திற்கு, அதாவது 30.9.2011 வரை நீட்டித்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 28.9.2010 அன்று ஆணையிட்டுள்ளார். ★






தஞ்சைப் பெரிய கோயில் 1000 ஆண்டு நிறைவு விழாவில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகள் (25-9-2010)






R.N.I. No.21446/70 Regn.No.TN/ARD/48/09-11
& WPP No. TN/PMG(CCR)518/09-11

கரம் இணைப்போம்          எய்ட்ஸை ஒழிப்போம்          வாழ்வை காப்போம்

## எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பாதிக்கப்பட்டவர்களை அன்போடு அரவணையுங்கள்



ஒன்று சேர்ந்து விளையாடுவது



கை குலுக்குவது மற்றும்
கட்டி அணைப்பது போன்ற
சாதாரண பழக்க வழக்கத்தினால்
எய்ட்ஸ் பரவாது.



எச்.ஐ.வி. தொற்று உள்ள ஒரு
நபரின் இருமல் மற்றும் தும்மலின்
மூலம் மற்றவருக்குப் பரவாது.



எச்.ஐ.வி. உள்ள நபர்
பயன்படுத்திய கழிவறையைப்
பயன்படுத்துவது அல்லது
பொருட்களை மாற்றிக்
கொள்வதால் பரவாது.



கொசுக்கடி மூலம் எய்ட்ஸ்
பரவாது.

## எச்.ஐ.வி. / எய்ட்ஸ் எவ்வாறு பரவுகிறது?



பாதுகாப்பற்ற முறையில் பலருடன்
உடலுறவு கொண்டால் எச்.ஐ.வி.
தொற்றுள்ள ஒரு நபரிடமிருந்து
மற்றவருக்கு பரவும்.



பரிசோதிக்கப்படாத எச்.ஐ.வி.
கிருமி உள்ள இரத்தம் மூலம்
மற்றவருக்குப் பரவும்.



எச்.ஐ.வி. தொற்றுள்ள கர்ப்பிணிப்
பெண்ணிடமிருந்து கருவில் இருக்கும்
குழந்தைக்குப் பரவ வாய்ப்பு உள்ளது.



கிருமி தொற்றுள்ள சுத்தம்
செய்யப்பட்டாத பிளேடுகளை,
ஊசிகளை பகிர்ந்துகொள்வதால்
பரவும்.

**ஒரு துளி இரத்தம் போதுமே
உங்கள் உடல் நலனை அறிய**

**திருமணம், குழந்தைப்பேறு, இரத்ததானம்
ஆகியவைகளுக்கு முன் இரத்தத்தில் எச்.ஐ.வி
உள்ளதா என பரிசோதனை செய்யுங்கள்**




மேலும் விவரங்கள் / ஆலோசனைகளுக்கு
அருகிலுள்ள அரசு மற்றும் மாநகராட்சி
மருத்துவமனைகளின் ஒருங்கிணைந்த
ஆலோசனை மற்றும் பரிசோதனை
மையங்களை (ICTC) அணுகவும்

## எச்.ஐ.வி. / எய்ட்ஸை எவ்வாறு தடுக்கலாம்?



திருமணத்திற்கு முன் உடலுறவை
தவிர்த்தல்.

திருமணத்திற்கு
பின் தாம்பத்தியத்தில் ஒழுக்கமாயிருத்தல்.



பாதுகாப்பான உடலுறவிற்கு
ஆணுறையைப் பயன்படுத்துதல்.



பரிசோதிக்கப்பட்ட இரத்தத்தையே
பயன்படுத்துதல். இரத்த தானம்
செய்யப்படுவதற்கு முன் பெறப்படும் இரத்தம்
எய்ட்ஸ் (எச்.ஐ.வி.) கிருமியால்
பாதிக்கப்படாதது என பரிசோதித்து உறுதி
செய்தல் வேண்டும்.



எச்.ஐ.வி. பாதிக்கப்பட்ட தாயிடமிருந்து
பிறக்கும் குழந்தையை எச்.ஐ.வி.கிருமி
தாக்காமல் பிரசவத்தின் முன் தரும் மருந்து
மூலம் தடுக்கலாம். பிரசவத்திற்கு முன்னால்
உரிய சிகிச்சை மேற்கொண்டால்
தாயிடமிருந்து எச்.ஐ.வி. குழந்தைக்கு
பரவாமல் தடுக்கலாம்.



இரத்தம் மற்றும் மனித உடற்கசிவுகள்
தொடர்பாக பயன்படுத்தப்படும்
ஊசிகள்,பிளேடுகள் மற்றும் பிற
உபகரணங்களை ஒரு முறை மட்டும்
பயன்படுத்தி அழித்து விட
வேண்டும். இந்த உபகரணங்களை
மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதை
கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்

**சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சங்கம்**

82, திரு.வி.க. சாலை, மைலாப்பூர், சென்னை - 4.

**இலவச தொலைபேசி : 1913**

CAPACS

வெளியீட்டு ஆணை எண்.959/வரைகலை/விளம்பரம்/ 2010